


# தமிழரசு

16-3-1987 ரூ. 1





‘எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே
அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பதிலே’

உங்கள் குழந்தைகளை முறையாக
வளர்க்க நாங்கள் உதவுகிறோம்

குழந்தைகளுக்கு இடையே குறைந்தது
மூன்று ஆண்டுகள் இடைவெளி தாருங்கள்

தக்க இடைவெளி தர
சிறந்த கருத்தடை சாதனம்
‘காப்பர்-டி’

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், மாநகராட்சி குடும்ப நல நிலையங்கள், பேறு காலப் பின் பணித் திட்ட நிலையங்கள், தன்னியக்க நிறுவனங்களைச் சார்ந்த குடும்ப நல நிலையங்கள் ஆகியவற்றில் ‘காப்பர்-டி’ இலவசமாகப் பொருத்தப்படும்.

வெளியீடு: தமிழ்நாடு குடும்பநலத்துறை

DIPR No. 696/MS/87/17-3-87/MA

# மேட்டூரில் புதிய அனல்மின் நிலையம்

சேலம் மாவட்டம், மேட்டூரை அடுத்துள்ள சின்னக்காவூரில் 1185 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள அனல் மின்நிலையத்தின் முதல் மின் பிரிவுத் துவக்க விழா 8-3-87 காலை 10 மணியளவில் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது.

மாண்புமிகு மத்திய மின்துறைத் துணை அமைச்சர் திருமதி சுசீலா ரோத்தகி அவர்கள் தலைமையில், ரூ. 384 கோடி செலவில் அமையும் இந்த முதல் மின் பிரிவை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தொடங்கி வைத்தார்.

விழா மலரை மாண்புமிகு சுற்றுலா மது விலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள் வெளியிட்டார்.

இவ்விழாவில், தமிழ்நாடு மின் வாரியத் தலைவர் திரு பி. விஜயராகவன், இ.ஆ.ப., வரவேற்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது: 'இன்று, முதலாவது யூனிட் துவக்கி





வைக்கப்படுகிறது. இரண்டாவது யூனிட் ஆகஸ்ட் மாதமும், மூன்றாவது யூனிட் 1988-ஆம் ஆண்டு டிசம்பர் மாதமும், நான்காவது யூனிட் 1989 டிசம்பர் மாதமும் துவக்கி வைக்கப்படும்.

'இந்த மின் நிலையத்தை நான்கே ஆண்டில் கட்டி, சாதனை புரிந்திருக்கிறோம். எந்திரங்களை அமைப்பதிலும் நூதன முறைகளைக் கையாண்டிருக்கிறோம். தண்ணீரைச் சிக்கனமாகச் செலவழிப்பதோடு, சுற்றுப்புறச் சூழலுக்கு எந்தப் பாதிப்பும் வராதபடி தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். முதல்கட்டமாக இது 210 மெகாவாட் உற்பத்தி செய்யும். அடுத்த 12 மாதத்தில் 635 மெகாவாட் மின்சாரம் இதனால் அதிகமாகக் கிடைக்கும்.'

வரவேற்புரையையடுத்து, மாண்புமிகு மத்திய அமைச்சருக்கும் மாண்புமிகு முதல்வருக்கும் மற்றும் அமைச்சர் பெருமக்களுக்கும் மின்பிரிவு உயர் அதிகாரிகளும் பல்வேறு தொழிற்சங்கத்தாரும் மாலைகள்-சால்வைகள் அணிவித்தார்கள்.

**முதல்வரைப் பாராட்டுகிறேன்**

விழாத் தலைமையேற்ற மாண்புமிகு மத்திய மின்துறைத் துணையமைச்சர் திருமதி சுசீலா ரோத்தகி அவர்கள் தமது தலைமையுரையில் தெரிவித்ததாவது:

''இந்தியாவில், மின் உற்பத்தியில் தமிழகம் மூன்றாவது இடத்தை வகிக்கிறது. இந்தியாவில் சராசரி மின் உற்பத்தியைவிட தூத்துக்குடி, எண்ணூர் அனல்மின் நிலையங்கள் அதிகமாக மின்சார உற்பத்தி செய்கின்றன. இந்த மேட்டூர் அனல்மின் திட்டம், குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாகவே முடிக்கப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது.

''இந்த ஆண்டு பட்ஜெட்டில் பிரதமர் அவர்கள் மின் உற்பத்திக்கு அதிக முக்கியத்து


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2018

அட்சய - பங்குனி 2

மலர் : 17 16-3-1987 இதழ் : 18

# முதல்வர் நடத்திவைத்த திருமணங்கள்!

பல்வேறு வளர்ச்சிப் பணிகளைத் துவக்கி வைப்பதற்காகச் சேலம் வந்திருந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், அங்கே சில திருமணங்களையும் தலைமை தாங்கி நடத்தி வைத்தார். அது பற்றிய விவரம் வருமாறு:

சங்ககிரி தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு சி. வீரமணியின் மகள் இளஞ்செல்வி-பெருமாள் திருமணம் 8-3-87 இல், சேலத்தில் உள்ள நேரு கலையரங்கில் நடைபெற்றது.

அதே நேரு கலையரங்கில்-9-3-87 அன்று காலையில் 7 ஜோடி களுக்குத் திருமணம் செய்து வைத் தார். லாழப்பாடி ஊராட்சி மன்றத் தலைவர் மு.சி. செல்வம்-இந்திரா, நாரைக் கிணறு மணி-சாந்தி, நாமகிரிப்பேட்டை இராசலிங்கம்-கிருஷ்ணவேணி, முள்ளுக்குறிச்சி பழனிமுத்து-இராணி, குள்ளக்கவுண் டனூர் இராமன்-சாந்தா, சங்கர் நகர் சீனிவாசன்-சசிகலா, ஆரியக்கவுண் டனூர் முருகேசன்-ஜெயக்கொடி ஆகியோர் மணம் செய்து கொண் டார்கள்.

முன்னாள் சட்டமன்ற உறுப் பினரும் வீரபாண்டி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவருமான திரு வேங்கா கவுண்டர் மகள் விஜயா-தைலான் திருமணம் ஆட்டையாம் பட்டி அபர்ணா கலையரங்கில் நடை பெற்றது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது துணைவியாருடன் வந்திருந்து திருமணங்களை நடத்திவைத்தார். மணமக்களை வாழ்த்திப் பரிசுகள் வழங்கினார்.

வம் கொடுத்திருக்கிறார். எனவே, தமிழக மின் திட்டங்களுக்கு மத்திய அரசு அதிக உதவி செய்யும். இதுபோன்ற திட்டங்களை நிறைவேற்றஅரும்பாடுபட்டுவருகிற-லட்சோப லட்சம் மக்களால் கொண்டாடப்படுகிற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களை நான் மிகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''தமிழ்நாடு அரசு பல மின் திட்டங் களைச் சிறப்பாக நிறைவேற்றி வருகிறது. இதன் மூலம் கூடுதலாக 1416 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழகத்தின் கிராமங்களில் மின்சார விநி யோகத் திட்டம் மிக நல்ல முறையில் நடந் துள்ளது. நெய்வேலியில் இரண்டாவது கட்ட மின் உற்பத்தி விரைவில் துவங்கப்படும்.

''இந்தத் திட்டத்துக்கான நிலக்கரி கிடைக்க மத்திய அரசு உதவி செய்யும். தேவையான நிலக்கரி கிடைக்கத் தக்க நட வடிக்கைகள் எடுத்து வருகிறோம்.''

அவரையடுத்து, மாண்புமிகு நாடாளு மன்றத் துணைத் தலைவர் டாக்டர் மு.தம்பி துரை அவர்கள் பேசுகையில், 'வீட்டுக்கு எப்படி சம்சாரம் முக்கியமோ அப்படி நாட்டுக்கு மின்சாரம் முக்கியம். என்னுடைய நாடாளுமன்றத் தொகுதியில் இந்த மின் திட்டம் துவக்கப்படுவதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நாங்களெல்லாம் மிகவும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டி ருக்கிறோம்' என்றார்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்கள் தமது உரையில், 'இந்த நாட்டின் மின் தேவையை நம் முதல் வர் அவர்கள் மிகவும் சாமர்த்தியமாகச் சமாளித்து வருவதாக அண்டை மாநிலத்தா ரெல்லாம் பாராட்டுவதைக் கேட்டு மகிழ் கிறோம் நாம்;இதைப் போலவே மற்றெல்லாத் துறைகளிலும் தமிழகம் ஏற்றம் கண்டு வரு வதை யாராலும் மறுக்க முடியாது' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''இதைப்போலப் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுவது மட்டுமல்ல; ஓய்வு பெற்ற மூத்த இரண்டு ஐ. ஏ. எஸ். அதிகாரி களை நியமித்துப் பலகோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படும் இதுபோன்ற திட்டங்கள் எப்படி நடைபெறுகின்றன என்பதையும் கவ னிக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆற்றலை இந்தியாவே வியந்து பாராட்டு கிறது''

மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச் சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் பேசுகையில், 'இதுபோன்ற உற்பத்தித் திட் டங்கள், மக்கள் தேவைக்கான சமூகத் திட் டங்கள் இரண்டையும் தமதிரு கண்ணாகக் கருதி, கவனமாகத் தீட்டி, வெற்றி கண்டு வருபவர் நமது முதல்வர்' என்று சொன்னார்.

மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச் சர் திரு சி. பொன்னையன் அவர்கள் குறிப் பிட்டதாவது :

'மக்களிடமிருந்து பெறுகிற வரிப்பணத்தில் பணி தொடங்குகிறோம்; ஆகவே அதில் தாமதம் கூடாது என்று திட்டமிட்டுத் திட் டங்களை விரைவுபடுத்தி வருகிற முதலமைச் சரைப் பெற்றிருப்பதால் தமிழகமே பெருமை யடைகிறது'' என்று தம்முடைய உரையில் குறிப்பிட்டார்.

**விழா மலர் வெளியீடு**

மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமி நாதன் அவர்கள், விழா மலரை வெளியிட்டு மாண்புமிகு மத்திய அமைச்சரிடமும், மாண்பு மிகு முதல்வரிடமும் பிரதிகளை வழங்கிப் பேசியதாவது :

''தமிழ் நாட்டின் சரித்திரப் பொன் னேட்டில் வைர வரிகளால் பொறிக்கப்பட வேண்டிய நாள் இந்நாள்; இந்நாட்டுச் சரித் திரத்தில், ஒரு ஆண்டில், பம்பர் கிராப் என்று சொல்லுவதுபோல மிக அதிக அளவில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிற ஆண் டாக இந்த 1987 இருக்கும். இதேபோல், இந்த ஆண்டே மேலும் பல மின் நிலையங்கள் துவங்கப்படவிருக்கின்றன. தமிழகச் சரித் திரத்தில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் காலத்திலேதான் மின் உற்பத்திக்கு அதிகத் தொகை ஒதுக்கப்பட்டி ருக்கிறது.



''இதுவரையிலே வேளாண்மையின் மேன்மை கருதி, 11 இலட்சம் பம்பு செட்டு களுக்கு மின் இணைப்புத் தரப்பட்டுள்ளது; ஏழரை இலட்சம் ஏழைகளுக்கு இலவசமாக ஒரு விளக்குத் திட்டம் ஒளிவிளக்குத் திட்ட மாக அமல் செய்யப்பட்டிருக்கிறது.

''அண்மையில், நாடாளுமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் இந்தியா விலேயே தமிழ்நாடு மின்வாரியம்தான் நட்டத்தில் ஓடுகிறது என்று சொல்லியிருக் கிறார்கள். தமிழ்நாட்டில், உற்பத்தியாகும் மின்சாரத்தைவிட 10 சதவிகிதம் அதிகமாக உபயோகிக்கப்படுகிறது. ஆனால் ஒன்று— ஏழை மக்களின் கஷ்டத்தை நீக்குவதுதான் எங்கள் முதல்வர் அவர்களுக்கு முக்கியமே தவிர, நஷ்டம் பெரிதல்ல!

''தூத்துக்குடி அனல் மின் நிலையமும், எண்ணூர் அனல் மின் நிலையமும் இந்த ஆண்டில் அதிக அளவில் மின் உற்பத்தி செய் திருக்கின்றன; எவ்வளவுதான் செய்தாலும் நம் நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை இருக்கிறது. தனியாரும், சில நிறுவனங்களும் மின் உற்பத்தி செய்யத் தயாராக இருக்கிறார்கள். அது பற்றிப் பரி சீலித்து வருகிறோம். தமிழக மின் நிலையங் களுக்குத் தரமான நிலக்கரி வெளிநாடுகளி லிருந்து இறக்குமதி செய்ய மத்திய அரசு அனுமதியளிக்க வேண்டும்; அப்படிச் செய் தால் நிச்சயமாக நம்நாடு மின் உற்பத்தியில் தன்னிறைவு பெறும்.''



மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண் மைத் துறை அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் பேசும்போது, 'நாட்டை மின்மய மாக்கினால் மக்கள் சுபிட்சமடைவார்கள் என்று லெனின் சொன்னான். நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் அதைச் செயல் படுத்திவருவதற்கான அடையாளமே இப்படிப் பட்ட மாபெரும் திட்டங்கள். மேட்டூர் தண்ணீர், ஆத்தூர் வரையுள்ள மக்களுக்குக் குடிக்கக் கிடைக்கவும் திட்டம் துவக்கி வைக் கப்படுவது இந்த மாவட்ட மக்களுக்குப் பெரு மகிழ்ச்சி தரக் கூடியதாகும்'' என்றார்.

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு ச. இராமச்சந்திரன் அவர்கள் பேசுகை யில்,

''இந்த மேட்டூர் அனல் மின் நிலையத் திற்கு சிங்கரேணியிலிருந்து நிலக்கரி வர வேண்டும்; ஆந்திர மாநிலம் அதற்கு உதவ வேண்டும். காவிரியை இப்போது கர்நாடக மாநிலம் பட்டினி போட்டிருக்கிறது. அதைப் போல இந்த மின் நிலையத்தைப் பட்டினி போட்டுவிடாமல் நிலக்கரி தரும் கடமை ஆந்திர அரசுக்கு உண்டு; இதைக் கண்காணிக் கிற கடமை மத்திய அரசுக்கு உண்டு.'' என்று தெரிவித்தார்.

இந்த அனல் மின் நிலையத்திற்காகக் கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் குடியிருந் தோர் 175 பேருக்கு 3 சென்ட் வீதம் நிலம் தரப்பட்டது. அப்பகுதியில் குடியிருந்த 229 பேருக்கு இங்கே வேலை வாய்ப்பளிக்கப்பட் டிருக்கிறது.

'இத்திட்டத்தில் பணியாற்றும் 800 பேருக்கும் ஒரு மாத சம்பளம் ஊக்கத்தொகை யாகத் தரப்படுகிறது' என்று, திட்டத்தைத் துவக்கி வைத்த மாண்புமிகு முதல்வர் அவர் களால் அறிவிக்கப்பட்டது.

விழா முடிவில்—மின்வாரியக் கணக்கு உறுப்பினர் திரு அர்ச்சுனன் ஞான ஒளிவு நன்றி கூறினார்.





# சேலம் மாவட்டத்தில் சீர்மிகு பணிகள்

மாண்புமிகு முதல்வர் அவர்களின் சுற்றுப் பயணத்தின் காரணமாகச் சேலம் மாவட்டமே தன்னைச் சிங்காரித்துக் கொண்டிருந்தது. சேலம் ஐந்து ரோடு சந்திப்பில் பாரீஸ் டவர், பூம்புகார் எழுநிலை மாடம் — மாதிரிகளும், நகரின் முக்கியச் சாலைகளிலெல்லாம் பேரறிஞர் அண்ணா, அன்னை இந்திராகாந்தி, மாண்புமிகு பிரதமர் ராஜீவ்காந்தி, மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் ஆகியோரின் உருவங்களும் வண்ணச் சரவிளக்குகளால் அமைக்கப்பட்டிருந்தன. ஆங்காங்கே அலங்கார வளைவுகள் அழகு செய்தன. சாரி சாரியாக வீதிகள்தோறும் மக்கள் விழாக்காலம் போலப் போய்க்கொண்டிருந்தார்கள். பலபேர் கட்டுச் சோற்று மூட்டையோடு காணப்பட்டார்கள். எங்கு பார்த்தாலும் தண்ணீர்ப்பந்தல், மோர் வழங்கல், இன்னிசை முழக்கம்! வண்ணக் கொடிகளோடு வாழ்த்தொலி முழக்கம்!...

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் 1987 மார்ச் தொடக்கத்தில் சேலம் மாவட்டத்தில் 3 நாட்கள் சுற்றுப்பயணம் செய்தார். அப்போது அவர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் திட்டப்பணி கால்கோள் விழா மற்றும் பல் துறை அரசு வளர்ச்சித் திட்டப் பணிகளின் தொடக்க விழா - கால்கோள் விழா ஆகியவற்றை நடத்தி வைத்தார்.

சேலம் மாவட்டத்தில் சிறப்புற நடந்த இந்த விழாக்களில் கலந்துகொள்வதற்காக, 6-3-'87 அன்று மாலை, சென்னையிலிருந்து ஹெலிகாப்டரில் புறப்பட்டு, சரியாக 4.15 மணிக்கு சேலம் இரும்பாலையில் உள்ள ஹெலிகாப்டர் இறங்கு தளத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களும், அவரது துணைவியார் திருமதி ஜானகி அம்மையாரும் வந்திறங்கினார்கள். மாண்புமிகு உணவமைச்சர் திரு ச. இராமச்சந்திரன் அவர்களும் உடன் வந்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்களும், மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு க.இராசாராம் அவர்களும் மாலையணிவித்து வரவேற்றனர்.

அவரைத் தொடர்ந்து -சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மு. தங்கதுரை, இ.ஆ.ப., திட்டக்குழுத்துணைத் தலைவர் திரு மா. முத்துசாமி, செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப., சேலம் இரும்பாலை பொது நிர்வாகி திரு. சுல்தானா, முன்னாள் அமைச்சர்கள் திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி, திரு அருணாசலம், சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அதிகாரிகள், பல்வேறு ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஆசிரியர் சங்கத்தினர், தொழிற்சங்கத் தலைவர்கள், அரசியல் கட்சிப் பிரமுகர்கள் ஆகியோர் மாலைகளும், பொன்னாடைகளும் அணிவித்து வரவேற்றார்கள்.

அதன்பின், காவல்துறையினர் அளித்த அணிவகுப்பு

மரியாதையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொண்டார்.

**வாழப்பாடி விழா :**

மாண்புமிகு முதல்வர் அவர்களின் முதல்நாள் நிகழ்ச்சி 7-3-'87 அன்று மாலை சேலம் மாவட்டம் வாழப்பாடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் அருகே உள்ள பெருந்திடலில் தொடங்கியது. இலட்சோபலட்சம் மக்கள் இங்கே திரண்டிருந்தனர்.

விழா தொடங்குவதற்கு முன்பாக ஜி. கே. எஸ். நவரசம் குழுவினர் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்கள் வரவேற்புரையாற்றினார். 'சேலம் மாவட்ட மக்கள் சபரிமலைக்கும் பழனிமலைக்கும்தான் மேளதாளங்களோடும் தாரை தப்பட்டையோடும் சாரிசாரியாக ஊர்வலம் போவார்கள்; ஆனால் இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் நிகழ்ச்சிக்கும் அதேபோல உள்ளக் களிப்போடு ஊர்வலமாக ஆற்றுப்பெருக்கென வந்திருக்கிறார்கள்; சரியான கல்வியில்லாமல், நல்ல சாப்பாடு கிடைக்காமல், நீர் வரத்து கிடைக்காமல் ஏங்கிக் கிடந்த சேலம் மாவட்ட மக்கள் இந்த ஆட்சியில்தான் எல்லா நிறைவும் பெற்றிருக்கிறார்கள். கிராமங்களை முன்னேற்றுவேன் என்று தேர்தல் நேரத்தில் சொன்னதை அப்படியே செயல்படுத்தி வருகிற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கவே இந்த மக்கள் வெள்ளம்' என்று தெரிவித்தார் அவர்.

மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது : 'சமுதாயத்தின் அடித்தளத்தில் கிடப்பவன் சமநிலைக்கு வரும் நாள் எதுவோ அதுவே தமிழகத்தின் பொன்னாள் என்றார் பேறிஞர் அண்ணா. அதைச் செயல்படுத்துவதிலே கண்ணுங்கருத்துமாக இருந்து செயல்பட்டு வருபவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள். 103 புள்ளியில் இருந்த தொழில் வளர்ச்சி இந்த ஆட்சியில்தான் 233 புள்ளி என்ற அளவில் வளர்ந்திருக்கிறது. இந்தியாவிலேயே ஒதுக்கப்பட்ட - ஒடுக்கப்பட்ட மக்கள் உன்னத நிலை அடைந்திருக்கும் ஒரே மாநிலம் தமிழகம்தான். மக்கள் நலனில் அக்கறையோடு இருக்கிற ஆட்சி இது!'

திரு எஸ். சிவப்பிரகாசம் எம். எல். ஏ., பேசுகையில் 'மலைவாழ் மக்களுக்கான பல நல்ல திட்டங்கள் சேலம் மாவட்டத்திலே இந்த அரசில்தான் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. சேலம் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரியும், கால்நடை மருத்துவக் கல்லூரியும் ஏற்படுத்திய பெருமையாளர் மாண்புமிகு முதல்வர் அவர்களே' என்றார்.

**மறுக்கவே முடியாது!**

திருமதி தி. இராசாம்பாள் எம். எல். ஏ., தமது உரையில்- 'அன்னை இந்திராகாந்தி அவர்களும், அமரர் அண்ணா அவர்களும் எண்ணிய எண்ணங்களையெல்லாம் ஈடேற்றி வரும் இந்த ஆட்சியில் - கடந்த பத்தாண்டுக் காலமாக மிக உயரிய திட்டங்கள் பல செயல்படுத்தப்படுவதை யாராலும் மறுக்கவே முடியாது' என்று குறிப்பிட்டார்.

திரு ஆர். திருஞானம் எம். எல். ஏ., பேசும்போது— 'மலைவாழ் மக்களுக்குத் தீப்பிடிக்காத வீடுகள் கட்டித்தர வேண்டும்' என்று அரசைக் கேட்டுக் கொண்டார்.

திரு. ஜி. கிருஷ்ணராஜ் எம். எல். ஏ., முன்பு 'நாடோடி மன்னன்' திரைப்படத்தில், 'சோறுபோடு, இல்லையேல் வேலைகொடு' - என்று புரட்சித் தலைவர், மன்னனிடம் கேட்பது போல் ஒரு காட்சி வரும். அவர் ஆட்சிப் பொறுப்பேற்றபின் ஏழை எளிய மக்களுக்குச் சோறும் போடுகிறார்; வேலையும் தருகிறார்' என்று தமது பேச்சில் குறிப்பிட்டார்.

திரு. பி. தேவராஜன் எம்.பி., பேசும்போது - 'பிரதமர் ராஜீவுடன் உள்ள நல்ல நட்பின் அடிப்படையில், தமிழகத்தின் வறட்சி நிவாரணத்திற்காக முதல்வர் அவர்கள் நிறைய நிதி பெற முயல வேண்டும்' என்றார்.

திரு சி. பழனிமுத்துஎம்.எல்.ஏ. 'சேலம் மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

கைத்தறித் துறைத்தனி அதிகாரி திரு அனகாபுத்தூர் இராமலிங்கம் பேசும்போது, 'மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த இலவச சீருடைத்திட்டத்தால், பல்லாயிரக்கணக்கான நெசவாளர் குடும்பங்களுக்குப் பலன் கிடைக்கும். நெசவாளர் இறந்து போனால் ஐயாயிரம் ரூபாய் நிதி தருவது என்கிற திட்டத்தை நம்முடைய முதல்வர் அவர்கள்தான் அறிவித்தார்.

## சேலம் குடிநீர்த் திட்டம்

**சேலம் மாவட்டத்தில் 1977ஆம் ஆண்டு முதல் குடிநீர்த் திட்டங்களுக்கு ரூ.339.96 இலட்சங்களும், வடிகால் திட்டத்திற்கு ரூ.130.42 இலட்சங்களும் செலவிடப்பட்டுள்ளன. இத்திட்டங்களால் இம்மாவட்டத்தைச் சேர்ந்த 6 பேரூராட்சிகள் மற்றும் பல கிராம ஊராட்சிகளில் வாழும் சுமார் 7,88,600 மக்கள் பயனடைந்து வருகின்றனர். மேலும் சுமார் 11,49,000 மக்கள் பயனடையும் வகையில் ரூ. 2,224 இலட்சங்கள் மதிப்பீட்டில் திட்ட வேலைகள், மூன்று நகராட்சிகளிலும் ஐந்து பேரூராட்சிகளிலும் நடைபெற்று வருகின்றன.**

**சேலம் மாவட்டத்தில் உள்ள 8 ஊரகப் பேரூராட்சிகளுக்கும், 1 நகரப் பேரூராட்சிக்கும் திட்டங்கள் ஆய்வில் உள்ளன.**

# மாண்புமிகு முதல்வர்- அமைச்சர்கள் பங்கேற்பு

இதுபோன்ற நல்ல காரியங்களை நிறைவேற்றுவதால்தான் மக்கள் அவரை இதயதெய்வம் என்கி றார்கள்' என்றார்.

டாக்டர் கே.பி. இராமலிங்கம் எம். எல். ஏ., 'இன்று இங்கே நம்முடைய மாண்புமிகு முதல் வர் புரட்சித் தலைவர் அவர் களால் துவக்கி வைக்கப்படுகிற திட்டங்கள், இந்தியாவுக்கே வழி காட்டும் திட்டங்களாகும்' என்று தமது உரையின்போது குறிப் பிட்டார்.

திரு செ. செம்மலை எம்.எல்.ஏ பேசும்போது, 'நம்முடைய மாவட் டத்தில், யாரும் எதிர்பார்க்காத நேரத்தில், மாண்புமிகு முதல்வர் அவர்களின் பொற்கரங்களால் பலமாபெரும் திட்டங்கள் துவக்கி வைக்கப்படுவதற்கு மகிழ்ச்சி' என்று தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி உரை யாற்றுகையில் 'இன்று நிறை வேற்றப்படும் திட்டப்பணி களால் என்னுடைய தொகுதி பெரும் பயன்பெறுகிறது; ஆகவே என்னுடைய தொகுதிமக்கள் சார்பில் நம் இதயதெய்வத்துக்கு நன்றி தெரிவித்துக் கொள் கிறேன்' என்றார்.

திரு. பி. கண்ணன் எம். பி., 'இந்த அரசு ஆற்றிவரும் இது போன்ற நல்ல பணிகளுக்கு நாட்டு மக்கள் நாளும் துணை யிருக்க வேண்டும்' என்றுகேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தலைவர் திரு எஸ். டி. உக்கம்சந்த்பேசியதாவது: 'சேலம் நகருக்கு இன்று துவக்கப்பட விருக்கிற குடிநீர் வழங்கு திட்டப் பணிகளுக்கு 20 சதவிகிதம் சேலம் நகராட்சி கட்டினால் போதும்; மீதி 80 சதவிகிதம் அரசு மானியமாகும். உலகவங்கி உதவியோடு இத்திட்டம் மேலும் 44 பேரூராட்சிகளுக்கு விரிவாக் கப்படும். சேலம் மாவட்டத்தி லுள்ள 500 வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.'

## ஏக்கத்தை நீக்கியவர்

வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. வி. ஆர். மணிமாறன்— 'குடும்பத்திற்கு ஒரு வீடு என்கிற மாண்புமிகு முதல்வர் அவர் களின் கொள்கை வழி நடப்பதே தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தின் தலையாய குறிக்கோள்' என்று தமது உரையின்போது தெரிவித்தார்.

# மேட்டூர் மின் திட்டம்

மேட்டூர் அனல் மின் நிலையத்தின் நிறுவனக் கொள்ளளவு 4 மின் உற் பத்திக் கலன்; ஒரு கலன் 210 மெகாவாட்.

நிர்ணயிக்கப்பட்ட திட்டச் செலவு ரூ. 736 கோடி.

நாள் ஒன்றுக்கு, ஒரு கலனுக்குத் தேவைப்படும் நிலக்கரி 3,000 டன்.

ஆண்டொன்றுக்கு ஒரு கலனுக் கான எரிபொருள் தேவை 67 இலட்சம் டன்.

ஒரு யூனிட் மின்சாரத்தின் உற் பத்திச் செலவு 60.75 பைசா.

ஆண்டொன்றுக்கு ஒரு கலத்தின் மின் உற்பத்தித் திட்ட அளவு 112.5 கோடி யூனிட்.

திரு. தங்கபாலு எம். பி., பேச்சு விவரம் வருமாறு: 'இந்தச் சமுதாயத்திலே தலைவர்கள் வருவார்கள் போவார்கள்; ஆனால் ஒரு சில தலைவர்களே சரித்திரத்தில் நிற்பார்கள்; தமிழ கத்தில், காமராசருக்குப் பிறகு அப்படிப் பெருமை பெற்றுத் திகழ்பவர் டாக்டர் எம்.ஜி.ஆர். வரலாற்றுப் புகழ்மிக்க அவர் வருகையால் சேலம் மாவட்டம் பெருமையடைகிறது. இருபது அம்சத் திட்டத்தினை நிறை வேற்றுவதிலும், தேசிய ஒருமைப் பாட்டைக் கட்டிக் காப்பதிலும் வேறெந்த மாநில முதல்வர் களைக் காட்டிலும் நம்முடைய முதல்வர் அவர்களே பிரதமர் ராஜீவுடன் இணைந்து நின்று பாடுபட்டு வருகிறார்.'

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மு. தங்கதுரை இ.ஆ.ப., —''43 கோடி ரூபாய் மதிப் பீட்டில் 67 திட்டப் பணிகள் துவக்கி வைக்கப்படுகின்றன. இந்த வளர்ச்சிப் பணிகளால் 33 நகராட்சி, 11 ஊராட்சி, 266 கிராமப்புற மக்கள் பயன் பெறுவார்கள்'' என்ற விவர உரையாற்றினார்.

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. ஏ. அருணாசலம் அவர்கள் பேசுகை யில் - 'ஆதிதிராவிட மக்கள்நலம் கருதி நல்லபல திட்டங்கள் தீட்டி நிறைவேற்றிப் பெருமை கொள் ளும் அரசு இது. ஏழை, நடுத்தர மக்கள் நலன்காக்கும் இந்த அரசுதான் ஆதிதிராவிடர் இறந்து போனால் ஈமச்சடங்கிற் காக ஆயிரம் ரூபாய் அளிக்கும் திட்டத்தைக் கொண்டுவந்தது'. என்றார்.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு ஆனூர் கோ. ஜெகதீசன் அவர்கள்— 'எழுச்சிமயமாக மக்கள் திரண்டு வந்திருக்கிறார்கள் அந்த அள வுக்கு இந்த அரசின் அரிய பணிகள் மக்கள் மனதில் ஆழப் பதிந் திருக்கின்றன. பட்டு வளர்ச்சிக் கான தலைமை அலுவலகம் இந்த சேலம் மாவட்டத்திலேதான் அமைக்கப்பட்டது. இதனால் பல்லாயிரக்கணக்கான குடும் பங்கள் பலன் பெற்றுள்ளன' என்றார். தமது உரையில், தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குச் சிறப்பு 'ழ' கரம் போன்ற வடிவ மைப்பில் கட்டடம் கட்டமாண்பு மிகு முதல்வர் அவர்கள் ஆணை யிட்டதையும் அவர் பெருமை யோடு சொன்னார்.

## பால் நினைந்தூட்டும் தாய்

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் பேசிய தாவது; 'இன்று துவக்கப்படும் பணியில் சுமார் 2 கோடி ரூபாய்க் கான பணிகள் வீட்டுவசதிசெய்து தருவதற்கானதாகும். இந்த நகரப் பஞ்சாயத்தில் இது ஒரு மகத்தான சாதனை. தாய் மார்கள் இரண்டு வகைப்படுவர்; குழந்தை அழுதால் தான் சில தாய்மார்கள் பாலூட்டுவர்; சில தாய்மார்கள் குழந்தையின் குறிப் பறிந்து பாலூட்டுவர்; அப்படிப் பால்நினைந்தூட்டும் தாயாக விளங்கி வருபவர்தான் நமது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள். எதிர்காலத் தில் இந்த ஆட்சிக்காலம் தமிழ கத்தின் பொற்காலம் என்று போற்றப்பட இருக்கிறது.'

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சு. முத்து சாமி அவர்கள் பேசும்போது, 'தர்மபுரி மாவட்டத்தில் 1-4-87ல்.



அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம் துவக்கி வைக்கப் படவிருக்கிறது' என்பதை அறிவித்தார்.

மாண்புமிகு நாடாளுமன்றத் துணைத் தலைவர் டாக்டர் மு. தம்பிதுரை அவர்கள் பேசும் போது - 'மக்கள் வாழ்க்கை நலனைக் கருதி, அவர்களுக்காகத் திட்டங்களைத் தீட்டும் ஒரே முதல்வராக இருப்பவர் நம்முடைய மாநில முதல்வர் தான். இதை நாடாளுமன்றத்திலேயே பாராட்டுகிறார்கள் ; ஏன், இந்தியப் பிரதமரே போற்றிப் புகழ்கிறார்' என்றார்.

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் பேசியதாவது: 'தாய்போலிருந்து மக்களைக் காப்பதே ஒரு நல்ல அரசுக்கு அடையாளம் என்பார்கள்; அந்த இலக்கணம் வழுவாத அரசு இது. குடும்பத்திற்கொரு வீடு என்று நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்தார். உடனே, வீடு கட்டக் கடன் தர ஒரு வங்கியே துவக்கப்படும் என்று மத்திய அரசு அறிவிக்கிறது; கேரள அரசும் குடும்பத்திற்கோர் வீடு என்கிறது. இப்படி நமது திட்டங்களை மற்றவர்களும் உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள். ஆகவே திட்டங்கள் தீட்ட அறிவு மட்டும் போதாது; அருளும் வேண்டும், மூளையால் மட்டும் தீட்டிவிட முடியாது ; இதயத்தாலும் திட்டங்களைத் தீட்ட வேண்டும் என்பதை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் நன்கு உணர்ந்திருக்கிற காரணத்தாலேதான் நம்முடைய திட்டங்களெல்லாம் வெற்றி பெறுகின்றன.'

இதற்குப் பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மாலைகள் துண்டுகள், அணிவிக்கப்பட்டன. நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள், அரசுத் துறைகளின் பல்வேறு திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றினார்.

## முதல்வர் உரை :

மாண்புமிகு முதல்வர் அவர்களின் பேச்சு விவரம்வருமாறு:

''என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழி நடத்திச் செல்லும் பெரியோர்களே! என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புகளே!

"வாழப்பாடியில் இன்று நடைபெறும் இந்த விழாவில் கலந்து கொண்டு உங்களைச் சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

''மக்களால் தேர்ந்து எடுக்கப்படும் ஓர் அரசு மக்களின் வளர்ச்சிக்காகப் பாடுபடும் அரசாக இருக்க வேண்டும். பசியால் வாடும் சிறுவர்களுக்குப் பசி நீங்க உணவு கிடைக்க வேண்டும்.

"ஆதரவு இல்லாத வயதான ஏழை மக்களின் பசிப்பிணியைப் போக்க வேண்டும்.

"இதை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு சத்துணவுத் திட்டத்தைச் செயற்படுத்தியே ஆகவேண்டும். பள்ளியில் படிக்கும் ஏழை மாணவர்கள் படிப்பு தடைப்படாமல் இருக்க இலவசப் பாடப் புத்தகங்களும் இலவசச் சீருடையும் வழங்குகிறோம்.

"இந்தத் திட்டங்களால் பள்ளியில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது. வசதியின்மையால் படிப்பைப் பாதியில் நிறுத்தும் மாணவர்களின் தொகை வெகுவாகக் குறைந்து வருகிறது.

''பல லட்சக்கணக்கான ஏழை எளிய மக்கள் குடியிருக்க வீடுகள் இல்லாமல் வெட்ட வெளிகளிலும், தெரு ஓரங்களிலும் குடியிருக்கிறார்கள். அவர்கள் வெயிலாலும் மழையாலும் பாதிக்கப்பட்டுத் தவிக்கிறார்கள். அவர்களுடைய துயர்போக்கும் விதத்தில் 3 ஆண்டுகளில் 30 லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்.

''இன்று மொத்தம் 43 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் பல நல்ல திட்டங்கள் இந்தப் பகுதி மக்களுக்காக நிறைவேற்றப்பட்டு - திறக்கப்படவும் தொடங்கப்படவும் இருக்கின்றன. இவற்றை உங்களுக்குக் காணிக்கை ஆக்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க.

நன்றி வணக்கம்.''



# பொலிவு பெறும்
# புது விக்கிரகங்கள்

சேலம் மாவட்டம் தாரமங்கலத்தில் உள்ள அருள்மிகு கைலாச நாதர் திருக்கோயில் புகழ்பெற்ற ஒன்றாகும். இக்கோயிலில் பஞ்ச லோகத்தால் ஆன உற்சவ விக்கிரகங்களான உமா மகேஸ்வரன், உமா மகேஸ்வரி அம்மன் மற்றும் தனி அம்மன் ஆகிய மூன்றும் 1979-ஆம் ஆண்டு களவாடப்பட்டுக் காவல்துறையினரால் மீண்டும் மீட்கப்பட்டன; இப்போது அவை நீதிமன்றத்தில் உள்ளன.

மேற்கண்ட விக்கிரகங்கள் தற்போது சிதைந்த நிலையில் இருக்கின்றன. தாரமங்கலம் பகுதி மக்களின் கோரிக்கைப்படி மேற்படி விக்கிரகங்களை உடனடியாகப் புதியதாகச் செய்வதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இந்தத் தகவலை மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு வி. வி. சுவாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்.

மேலும் இதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகையில், இச்சிலைகள் இன்னும் நான்கைந்து மாதங்களில் செய்து முடிக்கப்படும் என்றும், அதற்காக முயற்சி உடனடியாக எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இந்த விக்கிரகங்கள் சுமார் ரூ. 70 ஆயிரம் செலவில் தமிழ்நாடு கைவினை கலைப் பொருள்கள் தொழில் நிறுவனத்தின் பூம்புகார் நிறுவனம் மூலம் செய்யப்பட உள்ளன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கோயிலில் உற்சவ விக்கிரகம் களவாடப்பட்டதால் கடந்த பல ஆண்டுகளாக இங்கே முறையாக நடைபெறாதிருந்த தேர்த் திருவிழா மீண்டும் நடைபெற அனைத்து ஏற்பாடுகளும் செய்ய சம்பந்தப்பட்ட அறநிலையத்துறை அலுவலகர்களுக்கு ஆணையிடப்பட்டுள்ளதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

## மேட்டூர் அனல் மின் திட்டம் ஒரு கண்ணோட்டம்

| | முதற் கட்டம் | இரண்டாம் கட்டம் |
|---|---|---|
| | (பிரிவு 1 & 2) | (பிரிவு 3 & 4) |
| திறன் | 420 மெகாவாட் | 420 மெகாவாட் |
| திட்டச் செலவு | ரூ. 384.30 கோடி | ரூ. 351.76 கோடி |
| கொதிகலன் | | |
| நீராவி அளவு | மணிக்கு 700 டன் | மணிக்கு 700 டன் |
| அழுத்தம் | 138 கி.கி/ச. செமீ. | 138 கி.கி/ச. செமீ |
| வெப்பம் | 540 செ. | 540 செ. |
| முதன்மை எரிபொருள் | நிலக்கரி | நிலக்கரி |
| எண்ணெய் எரிதிறன் | 60 சதவீதம் | 100 சதவீதம் |
| சுழலி: | | |
| வெளிப்படும் சக்தி | 210 மெகாவாட் | 210 மெகாவாட் |
| நீராவி அழுத்தம் | 130 கி.கி/ச. செமீ. | 130 கி.கி/ச.செமீ |
| நீராவி வெப்பம் | 535 செ. | 535 செ. |
| மின்னாக்கி | | |
| திறன் | 247 எம். வி. ஏ. | 247 எம். வி. ஏ. |
| மின் அழுத்தம் | 15,750 வோல்டு | 15,750 வோல்டு |
| குளிர்விப்பது | ஹைட்ரஜனும் தண்ணீரும் | ஹைட்ரஜனும் தண்ணீரும் |

## மற்ற விவரங்கள் (முதல் யூனிட்)

| | |
|---|---|
| நிலம் கையகப்படுத்தியது | டிசம்பர்'82 |
| கால் கோள் துவங்கியது | ஆகஸ்டு '83 |
| கொதிகலன் உருளை உரிய இடத்துக்கு ஏற்றியது | 28-11-84 |
| நீர் அழுத்த சோதனை | 12-2-86 |
| கொதிகலன் எரியூட்டப்பட்டது | 9-8-86 |
| அமிலம் கொண்டு துப்புரவாக்கியது | 16-9-86 |
| காரத்துப்புரவு | 29-8-86 |
| நீராவி மூலம் துப்புரவாக்குதல் | |
| தொடக்கம் | 21-10-86 |
| முடிவு | 23-12-86 |
| சுழலி வேலை முடித்து மூடுதல் | 24-6-86 |
| எண்ணெய் பாய்ச்சித் துப்புரவாக்குதல் | 15-10-86 |
| சோதனை இணைப்பு | 4-1-87 |
| முக்கிய சாதனங்களின் மொத்த எடை | 12,000 டன் |
| மின்வழி வடம் (கேபிள்) நீளம் | 700 கி. மீ. |
| முதற் கட்டத்துக்குப் பயன்பட்ட சிமெண்ட் | 65,000 டன் |
| முதற் கட்டத்துக்குப் பயன்பட்ட இரும்பு | 42,500 டன் |

# இலவசக் காலணி வழங்கும் திட்டம்



1987 மார்ச் 7, 8, 9 தேதிகளில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சேலம் மாவட்டச் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, அரசு அமல்படுத்த விருக்கும் இலவசக்காலணி வழங்கும் திட்டம் பற்றித் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்

இலட்சக் கணக்கான ஏழைத் தாய்மார்களும், சிறுவர்களும் கல்லிலும் முள்ளிலும் வெயிலிலும் மழையிலும் காலணி இல்லாமல் நீண்ட தூரம் நடந்து செல்லும் அவலநிலையைக் கண்டு மனம் புண்பட்டேன். அவர்களுக்கு உதவும் வகையில் இலவசமாகக் காலணி வழங்கவேண்டும் என்று உத்தரவு போட்டுள்ளேன்.

காலணி அணிவதால் கொக்கிப் புழுவால் ஏற்படும் இரத்தச்சோகை நோய் பெருமளவில் தடுக்கப்படும். முக்கியமாக, கர்ப்பமாக இருக்கும் தாய்மார்கள் சிறுவர்கள் இரத்தச் சோகையிலிருந்து பாதுகாக்கப்படுவார்கள். இந்தத் திட்டத்தால் 60 இலட்சம் தாய்மார்கள், 60 இலட்சம் பள்ளி மாணவர்கள் பயன் அடைவார்கள்.

இதன் மூலம் ஆயிரக்கணக்கான காலணி தொழிலாளர்களுக்கு நிரந்தரமான வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

நான் உங்களுக்குச் செய்துகொடுக்கும் இத்தகைய திட்டங்களைச் சிலர் பரிகசித்தும் எதிர்த்தும் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு ஏழைகளின் கஷ்டம் தெரியாது. அதைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதும் இல்லை.

இந்த நல்ல திட்டங்களை நிறைவேற்றும் போது, திசை திருப்பச் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். நீங்கள் அவர்களுக்கு நல்ல பாடம் புகட்டி வருகிறீர்கள்!

**மாண்புமிகு தமிழக முதல்வர்**
**டாக்டர் எம்.ஜி.ஆர்.**

இலவசச் செருப்பு வழங்கும் அரசின் திட்டத்தைச் சிலர் கேலி பேசுகிறார்கள். பத்து ஜோடி செருப்பு வைத்திருக்கும் வசதி படைத்தவர்களுக்கு இந்தத் திட்டத்தின் அருமை தெரியாது. செருப்பே இல்லாமல் வெயிலில் பள்ளிக்குப் போய்வரும் குழந்தையைப் பெற்றெடுத்த தாய்மார்களுக்குத்தான் இந்தத் திட்டத்தின் அருமை தெரியும்!

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்
**திரு சு. முத்துசாமி**

முன்பெல்லாம் தமிழகத்தில் ஆதி திராவிட மக்கள் செருப்புடன் நடக்கக்கூடாது என்கிற நிலைமை சில இடங்களில் இருந்தது. ஆதிதிராவிடர்களுக்காக அரிய பல திட்டங்களை நிறைவேற்றிவரும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இலவசக் காலணி வழங்கும் திட்டத்தையும் அறிவித்திருக்கிறார். விரைவிலேயே அவர்களெல்லாம் காலில் செருப்பணிந்து நடக்கவிருப்பதை நாடு கண்டு மகிழப்போகிறது!

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்
**திரு ஏ. அருணாசலம்**

''காலுக்குச் செருப்புமில்லை, கால் வயிற்றுக் கூழுமில்லை, பாழுக் குழைத்தோமடா..'' என்று பாடினார் பொதுவுடைமைக் கவிஞர் ஒருவர். அந்த ஏக்கத்தைப் போக்கி, அந்தக் கனவை நனவாக்கும் திட்டமே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் இலவசக் காலணி வழங்கும் திட்டமாகும்!

தலைவர், த.நா. வீட்டுவசதி வாரியம்
**திரு வி.ஆர். மணிமாறன்**

இலவசக் காலணி வழங்குவது என்ற புரட்சிகரமான திட்டம் நம் புரட்சித் தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தால்—ஏழை, நடுத்தர, தாழ்த்தப்பட்ட, குடிசைவாழ் மக்களெல்லாம் பயன் பெறுவார்கள். காலணித் தொழிலாளர்களெல்லாம் வேலை வாய்ப்புப் பெற்றுக் களிப்படைவார்கள் என்பது உறுதி!

**திரு ஆர். அருணாசலம்**
எம்.எல்.ஏ.

## தாரமங்கலம்:

# புதிய வழித் தடங்கள் துவக்கம்



மாண்புமிகு முதல்வர் அவர்கள் தம்முடைய சேலம் மாவட்டச் சுற்றுப் பயணத்தின்போது, தாரமங்கலத்தில் (8-3-'87) நடைபெற்ற மாபெரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அப்போது அவர், ஒரு கோடியே 62 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்களையும், வளர்ச்சிப் பணிகளையும் தொடங்கி வைத்தார் - கால்கோள் நாட்டினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களால் இந்த விழாவில் மூன்று புதிய வழித் தடங்கள் துவக்கி வைக்கப்பட்டன.

''இந்தத் தாரமங்கலத்தில்தான் சிற்பச் சிறப்புமிக்க அற்புதமானதோர் திருக்கோயில் அமைந்துள்ளது. அதில் உள்ள இராமன்-வாலி சிலைகள் புகழ்பெற்றவைகளாகும். இராமன் சிலையிலிருந்து நாம் பார்த்தால் வாலி சிலை தெரியும்; வாலி சிலை அருகே நின்று பார்த்தோமானால் இராமனைத் தெரியாது! சுயமரியாதை இயக்கத்திலே குறிப்பிடத்தக்கவராக இருந்த இரத்தினசாமி பிள்ளை இங்கேதான் நகரசபைத் தலைவராக இருந்து 1952 பொதுத் தேர்தலிலே போட்டியிட்டார்.

''இதே தாரமங்கலத்தில்தான் அறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப்படம், கலைவாணர்-என். எஸ். கே. அவர்களால் அறிஞர் அண்ணா அவர்களின் முன்னிலையிலேயே திறந்து வைக்கப்பட்டது. இன்றைக்கு நாடாளுமன்றத் துணைத்தலைவராக இருக்கிற தம்பிதுரை அவர்கள் இந்தத் தொகுதிதான்'' என்றெல்லாம் தாரமங்கலத்தின் பெருமையைத் தமது வரவேற்புரையிலே குறிப்பிட்ட மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் திரு க.இராசாராம் அவர்கள்,அரசின் ஆக்கப் பணிகள் பற்றியும் விவரித்தார்.

திரு கே. பி. நாச்சிமுத்து எம். எல். ஏ., பேசுகையில், மாண்புமிகு முதல்வர் அவர்களின் அருமை பெருமைகளை எடுத்துரைத்தார்.

திரு. ப. தனபால், எம்.எல்.ஏ. 'இந்த ஆட்சியை மக்களெல்லாம் தம் சொந்த ஆட்சியாகப் பாவிப்பதாகச் சொல்லிப் பெருமைப்பட்டார்.

திரு மு.ஆறுமுகம், எம்.எல்.ஏ. பேசும்போது, 'பல்வேறு விதமான சோதனைகளையெல்லாம் தாண்டிப் புகழ்குவித்து வருகிற ஆட்சி இது' என்றார்.

திரு கே. பி. இராமலிங்கம் எம். எல். ஏ., 'சமுதாயத்தின் அடித்தள மக்களுக்காகப் பாடுபடுபவர் என்பதை வெறும் தேர்தல் வாக்குறுதியாக மட்டும் விட்டுவிடாமல், அப்படியே பாடுபட்டும் வருபவர் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர்' என்று கூறினார்.

திரு கே.அன்பழகன் எம்.எல்.ஏ., மத்திய அரசின் ஒத்துழைப்பை நல்லமுறையில் பயன்படுத்திக் கொண்டு சிறப்புற ஆட்சி நடத்தி வரும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் திறமையை வியந்து பாராட்டினார்.

**வரவேற்பும், விண்ணப்பமும்**

தொகுதிச் சட்டமன்ற உறுப்பினரான திரு செ. செம்மலை பேசுகையில் குறிப்பிட்டதாவது:

'ஏழை எளிய மக்களுக்குத் தாயுள்ளத்தோடு மட்டுமல்ல; கடவுள் உள்ளத்தோடும் கருணை காட்டிவருபவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள். இந்தத் தொகுதியிலே ஒரு பாலம் தேவையென்றேன்; உடனேயே விண்ணப்பம் எழுதித் தரச் சொல்லி, அதிலேயே அனுமதியும் வழங்கி, அந்தப் பணியை முடுக்கிவிட்டு, சென்ற மாதம்தான் அந்தப் பாலம் திறந்து வைக்கப்பட்டது. தொளசம்பட்டிக்கு நான் ஒரு 'அவுட்போஸ்ட்' வேண்டுமென்றுதான் கேட்டேன். ஒரு போலீஸ் ஸ்டேஷனையே ஏற்படுத்திக் கொடுத்தார். மேச்சேரியில் ஒரு மத்தியக் கூட்டுறவு வங்கியை உருவாக்கித் தந்தி

ருக்கிறார்... என்றெல்லாம் இந்த அரசு தன்னுடைய தொகுதிக்கு ஆற்றியுள்ள நற்பணிகளை எடுத்துச் சொல்லி, துவக்கி வைக்கப்படவிருக்கும் திட்டங்களுக்கு வரவேற்புத்தெரிவித்ததோடு, தனது தொகுதியில் வீட்டுவசதி வாரியம் வீடு கட்டித் தரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

திரு எஸ்.சிவப்பிரகாசம், எம்.எல்.ஏ., இந்த அரசின் அறிவிப்புகளும் ஆக்கப்பணிகளும் அண்டை மாநில அரசுகளால் மட்டுமல்ல; மத்திய அரசினாலும் போற்றிப் புகழப்படுவதைச் சொல்லிப் பெருமிதம் கொண்டார்.

திரு ஆர்.அருணாசலம், எம்.எல்.ஏ., பேசும்போது, 'மற்ற மாவட்டங்களையெல்லாம் விட சேலம் மாவட்டத்திற்கு அதிக நிதி ஒதுக்கி, இம் மாவட்டத்தின் வளர்ச்சியில் என்றும் அக்கறை காட்டிவரும் இதய தெய்வத்தை வாழ்த்தி வரவேற்கிறேன்' என்றார்.

'மாண்புமிகு முதல்வர் அவர்களின் கரத்தைப் பலப்படுத்துவோம்' என்று தனது பேச்சில் குறிப்பிட்டார் திரு பி.கண்ணன், எம்.பி.

மக்களின்அடிப்படைத் தேவையான குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதில் போர்க்கால வேகத்தோடு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதைத் தெரிவித்தார், குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் திரு எஸ்.டி. உக்கம்சந்த்.

'தமிழ்நாட்டுக் கிராமங்களெல்லாம் முழுப்பயன் பெறும் விதத்தில் தன்னிறைவுத் திட்டம் கண்ட தன்னிகரற்ற தலைவர் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவரே' என்று தெரிவித்தார் முன்னாள் அமைச்சர் திரு மதி விஜயலட்சுமி பழனிச்சாமி.

'தாட்கோ' தலைவர் திரு கண்ணன் பேசும்போது, ஆதிதிராவிடர் வீட்டுவசதி பெற்ற விவரங்களை விரிவாக எடுத்துச் சொன்னார்.

''தந்தை பெரியாரின் தத்துவங்கள்—பேரறிஞர் அண்ணாவின் இலட்சியங்கள் இன்றைய அரசில் தான் நிறைவேற்றப்பட்டு வருகின்றன' என்று கூறினார், கைத்தறித் தனி அதிகாரி திரு அனகாபுத்தூர் இராமலிங்கம்.

**கோரிக்கை ஏற்பு**

வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு வி.ஆர்.மணிமாறன் பேசுகையில், 'இந்தத் தொகுதியில் மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சரின் அனுமதி பெற்று, விரைவில் பத்து ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 60இலட்சம் ரூபாய் செலவில் 150 குடும்பத்தார் பயன்பெறும் வகையில் வீட்டு வசதி வாரியத்தால் வீடுகள் கட்டித் தரப்படும்' என்றார்.

'ஆதிதிராவிட மக்களுக்கு அரசு அடுக்கடுக்காக மிக நல்ல பணிகளை ஆற்றி வருகிறது' என்று தமது உரையில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு ஏ.அருணாசலம் அவர்கள் குறிப்பிட்டார்.

'கடந்த பத்து ஆண்டுக் காலத்தில், பொதுப்பணித்துறையின் மூலம் 200 கோடி ரூபாய்க்கு மேலான மதிப்பீட்டில் நாட்டு மக்களுக்காக நல்ல பல திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தப்பட்டுள்ளன' என்றார், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்கள்.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு ஆனூர் கோ. ஜெகதீசன் அவர்கள் தமது உரையில் தெரிவித்தாவது: 'இந்த அரசில்தான் ஊரகத் தொழில் துறை ஊக்கம் பெற்றிருக்கிறது. இன்றைய தினம் இங்கே ஆதிதிராவிட மக்கள் மேம்பாட்டிற்காக 173 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பெரிய காடம்பட்டி அரிசன ஸ்டார்ச் மற்றும் சேகோ தயாரிப்பாளர் தொழில் கூட்டுறவுச் சங்கம் துவக்கப்படுகிறது. இதன் மூலம் நூற்றுக்கணக்கான ஆதிதிராவிட மக்கள் வேலைவாய்ப்புப்பெறுவார்கள்.'

மாண்புமிகு சத்துணவு மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் திரு ஆர். சௌந்தரராஜன் பேசும் போது, 'தலைநகரத்தை விட்டுவிட்டு எல்லா அமைச்சர்களும் சேலத்துக்குப் போய்விட்டார்கள் என்று, இது ஏதோ தவறு போல் சிலர் பேசியிருக்கிறார்கள். இராமன் இருக்கிற இடம் தான் அயோத்தி என்று கம்பராமாயணத்தில் கூறப்படுவது போல மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவர் அவர்கள் இருக்கிற இடம்தான் எங்களுக்கெல்லாம் தலைநகரம். வளர்ச்சிப் பணிகளைத் துவக்கிவைக்க ஒரு மாவட்டத்திற்குச் செல்வது எப்படித் தவறாகும்?' என்று கேட்டார்.

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள், ''முறையோடு திட்டமிட்டு ஆட்சி செய்யும் மன்னன் மக்களால் தெய்வமாக மதிக்கப்படுவான் என்றார் திருவள்ளுவர். அந்த வகையிலே அயராமல் பாடுபடும் மாண்புமிகு முதல்வர் அவர்களை மக்கள்இறைவனாகக் கருதுகிறார்கள்' என்றார்.

மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் திரு சி.பொன்னையன் அவர்கள் தம்முடைய



# சேலம் பணிகள்: விரைவுபடுத்த முதல்வர் ஆணை!

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் சேலம் அர்ச்சுவான் ஏரி பஸ் நிலையம், பாதாள சாக்கடைத் திட்டம், சென்ட்ரல் தியேட்டர் அருகில் மேம்பாலம், கமலாபுரத்தில் திட்டமிடப்பட்ட விமான நிலையம், நாமக்கல் கால்நடைக் கல்லூரி ஆகியவற்றுக்கான பணிகளை நிறைவேற்றுவது பற்றித் தமிழக அரசின் சிறப்பு ஆணையர் மற்றும் தனி அலுவலர் எச்.பி.என். ஷெட்டி,இ.ஆ.ப.வுடன் சேலம் பயணியர் மாளிகையில் ஆலோசனை நடத்தினார்.

மேற்கண்ட பணிகளை விரைந்து நிறைவேற்றப் பணித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், அதில் ஏதேனும் சிக்கல் இருக்குமாயின் தன் கவனத்திற்குக் கொண்டு வருமாறு கூறினார்.

இத்தகவலை, சேலத்தில் முகாமிட்டிருந்த செய்தி - மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப. செய்தியாளர்களுக்குத் தெரிவித்தார்.

உரையில் கல்வி வளர்ச்சியும் சட்டப் பாதுகாப்பும் இப்போது எவ்வளவு கண்ணுங் கருத்துமாகக் கவனிக்கப்படுகிறது என்பதை விவரித்தார்.

மாண்புமிகு நாடாளுமன்றத் துணைத்தலைவர் டாக்டர் மு. தம்பிதுரை அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கண்ட அண்ணாயிசம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு மு. தங்கதுரை இ.ஆ.ப., அவர்கள் இன்று துவக்கப்படுகிற திட்டங்களால் 70 ஆயிரம் பேருக்குமேல் பயன்பெறுவார்கள் என்று சொன்னார்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி அவர்கள் பேசும்போது, ''இந்தியத் துணைக்கண்டத்திலேயே முத்திரை பதிக்கும் விதத்தில் தமிழகம் இருக்கிறதென்றால் அதற்குக் காரணமே மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் தலைமைதான்'' என்றார்.

**முதல்வர் பேச்சு**

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் விழா நிறைவுச் சிறப்புரையாற்றினார். அதன் விவரம் வருமாறு:

''என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே!

என்னை வழி நடத்திச் செல்லும் பெரியோர்களே!



என் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புகளே!

இன்று தாரமங்கலத்தில் நடைபெறும் இந்த விழாவில் பங்கேற்க எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விழாவின் மூலம் உங்களைச் சந்திப்பதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

ஏழை எளிய மக்களுக்கு நல்ல பலனளிக்கும் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

இந்த அரசு வேறு எங்கும் காணாத வகையில் சத்துணவுத் திட்டத்தைச் சிறப்பான முறையில் நிறைவேற்றி வருகிறது.

பள்ளி மாணவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகமும், சீருடையும் வழங்குகிறோம்.

குடியிருக்க வீடு இல்லாமல் அவதிப்படும் ஏழை, எளிய மக்களுக்கு 3 ஆண்டுகளில் மொத்தம் 30 லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்.

இதன் மூலம் பல லட்சம் ஏழை எளியமக்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

வீட்டு வசதி வாரியம், வேளாண்மைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை இவற்றின் மூலம் ரூ.2 கோடியே 88 லட்சம் செலவில் பல திட்டங்கள் தொடங்கி வைக்கப்படவும் திறந்து வைக்கப்படவும் இருக்கின்றன.

இவற்றை உங்களுக்கு அர்ப்பணிப்பதில் நான் பெருமை அடைகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!
நன்றி! வணக்கம்!''

# ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலத்திட்டம்

வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள, மற்றும் வசதியில்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக, பல்வேறு திட்டங்களை, தமிழக அரசு தீட்டி உள்ளது. அதில் சேலம் மாவட்டத்தில் உள்ளவர்களின் பொருளாதார நிலையினை உயர்த்த ரூ 198 லட்சம் நடப்பு 1986—87ம் நிதி ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வசதியில்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ`, மாணவிகளுக்கு, படிப்பு உதவித் தொகையாக ரூ. 45/- லட்சம் வழங்கப்பட்டு, 22,500 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

ரூ. 108 லட்சம் செலவில், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக 61 விடுதிகள், 45 பழங்குடியினர் உண்டுறை பள்ளிகள் மற்றும் 12 ஆதிதிராவிட நலப்பள்ளிகள் ஆகியவை நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றால் 11,000 மாணவ மாணவியர் பயனடைந்து வருகின்றனர். இவற்றுள் கல்ராயன் மலையில், கருமந்துறையில் உள்ள பழங்குடியினர் உண்டுறை உயர்நிலைப்பள்ளி, முள்ளுக்குறிச்சியிலுள்ள பழங்குடியினர் உண்டுறை மேல்நிலைப் பள்ளி, கொல்லிமலையில் வாழவந்தி நாட்டில் உள்ள வல்வில்ஓரி உண்டுறை மேல்நிலைப்பள்ளி மற்றும் களங்காணியில் உள்ள ஆதிதிராவிட நலமேல் நிலைப்பள்ளி ஆகியவை அடங்கும்.

இவ்விடுதியில் உள்ள மாணவ மாணவியருக்கு ரூ. 7·56 லட்சம் செலவில் ஆண்டுக்கு இருமுறை சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.



# 'நான் உங்களில் ஒருவன்'

மாண்புமிகு முதல்வர் அவர்களின் சேலம் மாவட்டச் சுற்றுப் பயணத்தின் 3 ஆம் நாள் நிகழ்ச்சி 9-3-87 அன்று சங்ககிரியில் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது.

இந்தியா சிமெண்ட் உயர்நிலைப் பள்ளித் திடலில் அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தலில் நிகழ்ச்சி தொடங்குமுன்- அதனருகே இருந்த சின்னஞ்சிறு சிங்காரப் பந்தலில் அண்ணா போக்குவரத்துக் கழக இசைக் குழுவின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள், நிகழ்ச்சி நடைபெற்ற இடத்திற்கு மாபெரும் மக்கள் கடலின் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு வந்து சேர்ந்தபோது, அப்பகுதிப் பெண்மணியொருவர் ஆரத்தி எடுத்து வரவேற்றார்.

வரவேற்புரையாற்றிய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மு. தங்கதுரை, இ.ஆ.ப. அவர்கள் ஒரு கோடியே 13 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான பணிகள் இன்று துவக்கப்படவிருப்பதாகவும் இவற்றின் மூலம் அப்பகுதியிலுள்ள 50 ஆயிரம் மக்களுக்குமேல் பயன் பெறுவார்கள்'என்றும் கூறினார்.

கைத்தறித் துறை ஆலோசகர் திரு எஸ். எஸ். எம். சவுண்டப்பன் பேசும்போது - 'இந்தியாவிலேயே எந்த ஒரு மாநிலமும் செய்திராத நல்ல பல பணிகள், பிரதமர் அவர்களே பிரமிக்குமளவில் தமிழகத்தில்தான் நடைபெறுகின்றன' என்றார்.

திரு. கே. பி. நாச்சிமுத்து எம். எல். ஏ.'சேலம் மாவட்டமே மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரவால் தனிச் சிறப்படைகிறது' என்றார்.

திரு. எஸ். கோவிந்தசாமி எம். எல். ஏ., பேசியதாவது: 'பிரதமர் ராஜீவுடன் இணைந்து நின்று ஏழை எளிய மக்களின் மேம்பாட்டுக்கான பலதரப்பட்ட பணிகளைச் சிறப்புறச் செய்து வருகிற பெருமையுடையவர் நம் தமிழக முதல்வர்.'

திரு மு. ஆறுமுகம் எம்.எல்.ஏ. பேசுகையில் - 'திப்புசுல்தான் ஆண்ட சிறப்புடைய சங்ககிரி, இன்று அதைவிடச் சிறப்புற்றிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் ஆக்கப்பணிகள் மாற்றுக் கட்சியினரையெல்லாம் அதிர்ச்சியடையச் செய்திருக்கின்றன. ஆலைகளில் கதவடைப்பு என்கிற நிலையே இல்லாமல் செய்த சிறப்புமிக்க ஆட்சி இது' என்று குறிப்பிட்டுவிட்டு, வாழ்த்துக் கவிதையொன்றும் படித்தார்.

'தமிழகத்தின் வரலாற்றில் புதியதோர் சகாப்தம் படைத்தவர் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர்' என்று பெருமிதத்தோடு தெரிவித்தார் டாக்டர் கே. பி. இராமலிங்கம் எம்.எல்.ஏ.

திரு. பி. கண்ணன் எம். பி., பேசுகையில்'இங்கே இடைப்பாடி தொகுதியில் எந்தத் தொழிற்சாலையும் இல்லை என்ற நிலை மாற,ஆவன: செய்ய வேண்டும்' என்று அரசைக் கேட்டுக்கொண்டார்.

தொகுதிச் சட்டமன்ற உறுப்பினரான திரு ப. தனபால் 'மாபெரும் விபத்தில் சிக்கிய என் உயிர்காத்தகடவுள்புரட்சித் தலைவர் ஆவார். எங்கள் குடும்பமே அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறது' என உருக்கத்தோடு தெரிவித்தார்.

'நலப்பணிகளை நல்லபடி நிறைவேற்றி வருகிற இன்றைய அரசுக்கு நாட்டு மக்கள் நல்லாதரவு தரவேண்டும்' என்றார் ஆதிதிராவிடர் வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு கண்ணன்.

கைத்தறித் தனி அலுவலர் திரு அனகாபுத்தூர் இராமலிங்கம் - 'வறுமையில் வாடிய நெசவாளர் குடும்பங்கள் இன்று வளம் பெற்றுள்ளன. அவர்கள் வீட்டுப் பிள்ளைகளெல்லாம் இன்று ஏராளமான அளவில் பள்ளிக்குச் செல்கிறார்கள் என்றால், சத்துணவுத் திட்டமே அதற்கு முக்கியக் காரணம்' என்று கூறினார்.

வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு வி. ஆர். மணிமாறன்- 'வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் என்ற பாரதி வாசகத்தைச் செயல்படுத்தும் அரசு இது. உண்ண உணவு, உடுக்க உடை, வசிக்க வீடு என்கிற மனித இனத்தின் மாற்ற முடியாத தேவைகள் தட்டுப்பாடின்றிக் கிடைக்கிற மாநிலம் தமிழகம்தான். 55 கோடி ரூபாய் அளவில் 86-87-ல் தீட்டப்பட்ட வீட்டு வசதித் திட்டம், 87-88-இல் இப்போது 105 கோடி ரூபாய் அளவில் தீட்டிச் செயல்படுத்தப்பட்டு வருகிறதென்றால் இது வளர்ச்சியல்லவா?' என்று கேட்டார்.

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திரு. ஏ. அருணாசலம் அவர்கள் பேசியதாவது :

'ஆதிதிராவிடர் - மலைவாழ் மக்களின் நல்வாழ்வில் நாட்டமுடைய அரசு இது. கல்ராயன் மலைவாழ் மக்களுக்காக 1000 ஏக்கரில் பழத்தோட்டம் அமைத்துத் தரப்படவிருக்கிறது. அங்கும்

அறுநூத்து மலை, கொல்லிமலை போன்ற பகுதிகளிலும் உள்ளவர்களுக்காக மாதிரிப் பட்டு வளர்ப்பு மையத் திட்டங்களெல்லாம் அமல்படுத்தப்படவிருக்கின்றன. ஏர்க்காடு, வாழவந்திநாடு, ஓமலூர் போன்ற இடங்களில் உள்ள மலைவாழ் மாணவ மாணவிகளுக்கு விடுதி கட்ட 35.34 இலட்சம் ரூபாயில் திட்டமிடப்பட்டுள்ளது.'

மாண்புமிகு சத்துணவுமற்றும் சமூகநலத்துறை அமைச்சர் திரு. ஆர். சௌந்தரராஜன் அவர்கள் பேசும்போது - 'விதியை மதியால் வெல்லலாம் என்பார்கள். ஒரே ஒரு மார்க்கண்டேயன்தான் அப்படி வென்றதாகப் புராணம் கூறுகிறது. ஆனால் 85 இலட்சம் குழந்தைகளின் விதியை மதியால் சத்துணவுத் திட்டத்தால் வென்றவர் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவரே ஆவார்' என்றார்.

'தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும்; தேடுங்கள் கிடைக்கும் என்றார் ஏசுநாதர். தட்டாமலே திறக்கப்படுவது எங்கள் புரட்சித் தலைவரின் இதயம்; கேட்காமலே கொடுக்கப்பழகியது அவரது கரங்கள்; தேடாமல் நம்முடைய தேவைகளை நிறைவேற்றுவது அவருடைய குணம். இதனாலேதான் நாட்டு மக்கள் அவரை நடமாடும் தெய்வமாகப் போற்றித் துதிக்கிறார்கள்' என்றார் மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள்.

மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் பேசியதாவது : 'அண்ணா வழி நடக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவரின் ஆட்சிக் காலம்தான் கல்வித் துறையின் பொற்காலம். 1977-க்கு முன்பெல்லாம் கல்வி வளர்ச்சிக்கு 127 கோடி ரூபாய் தான் ஒதுக்கப்பட்டது; இப்போது ஆண்டுக்கு 500 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது. '67-க்கு முன், பள்ளி செல்லும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்தது; இப்போதோ 103 இலட்சமாக உயர்ந்திருக்கிறது.'

மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் பேச்சு விவரம் வருமாறு: 'மற்ற மாநிலத்தவர்களும் இங்கே வந்து தொழில் தொடங்க நினைக்கிறார்கள். அந்த அளவுக்குத் தமிழகம் தொழில்வளம் உடையதாகியிருக்கிறது. உணவு உற்பத்தியிலே மட்டுமல்ல, சர்க்கரை உற்பத்தியிலும் தமிழகமே முதலிடம் பெற்றிருக்கிறது. புகளூரில் கரும்புச்சக்கையிலேயே காகிதம் செய்யும் தொழிலை இந்த அரசுதான் துவக்கியது!'

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி அவர்கள் பேசியதாவது:'இன்று அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் இங்கே ஐந்து புதிய வழித்தடங்கள் துவக்கி வைக்கப்படுகின்றன. 1977-ல் தமிழகத்தில் 4 ஆயிரமாக இருந்த பேருந்துகளின் எண்ணிக்கை, இன்று 11 ஆயிரமாக வளர்ந்திருக்கிறது. அன்று 7 போக்குவரத்துக் கழகங்கள்தான் இருந்தன; இப்போது 15 போக்குவரத்துக் கழகங்கள் உள்ளன. இவைகளின் சிறப்பான இயக்கத்தைப் பாராட்டி, மத்திய அரசே 15 முறை பரிசளித்திருக்கிறது. போக்குவரத்துத் துறையிலே மட்டும் 41 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு ச. இராமச்சந்திரன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது: 'இன்னும் ஓராண்டுக் காலத்திற்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்படாத அளவுக்கு அரிசிக் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. கடந்த பத்தாண்டுக் காலமாக, காஷ்மீர் முதல் கன்னியாகுமரிவரை தமிழ்நாட்டில்தான் அரிசி விலை அப்படியே இருக்கிறது. இதனால் 100 கோடி ரூபாய் இழப்பு என்றாலும், தாய் காக்கும் காப்பாக மக்களைக் காக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதுபற்றிக் கவலைப்படவில்லை.'

—இதன்பின், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய விழா நிறைவுப் பேருரை விவரம் வருமாறு:

''என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே!

என்னை வழி நடத்திச் செல்லும் பெரியோர்களே!

என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புகளே!

நான் அமெரிக்காவில் இருந்து உடல் நலம் பெற்றுத் திரும்பி வந்தேன். 2 ஆண்டுகள் கழித்து இன்று உங்களைக் காண்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் உடல் நலம் பெறுவதற்கு அன்னை இந்திராகாந்தி அவர்களும் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களும் எனக்கு எல்லா உதவிகளும் செய்தார்கள்.

அவர்களுக்கு என் நன்றி!

நீங்கள் எல்லோரும் என் மீது அக்கறையும், நம்பிக்கையும் உள்ளவர்கள். நான் உங்களில் ஒருவன்.

உங்களுக்காக உழைப்பவன் நான். உங்கள் முன்னேற்றமே என்னுடைய குறிக்கோள் ஆகும். தீயசக்திகளை ஒழிப்போம்.

என்னுடைய இந்தக் குறிக்கோளுக்குத் தடையாகச் சில தீய சக்திகள் வேலை செய்கின்றன; வன்முறையைத் தூண்டுகின்றன; அமைதியைக் கெடுக்கின்றன; ஒற்றுமையைக் குலைக்கின்றன.

அந்த தீய சக்திகளை ஒழிக்க, வன்முறையை நீக்க, அமைதியைப்





# மாணவர்களுக்கு இலவசப் பல் பரிசோதனை

சென்னை மாநகராட்சியும், சென்னைப் பல் மருத்துவமனையும் இணைந்து நடத்திய பல் சிகிச்சை முகாம்களை 26.1.1987 அன்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு ப.உ.சண்முகம் அவர்கள் நேரு விளையாட்டரங்கில் துவக்கி வைத்தார். அன்று 1000 மாணவர்களுக்குப் பல் பரிசோதனை செய்யப்பட்டு தேவையானோருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து துறைமுகம், தொண்டையார் பேட்டை, வண்ணாரப்பேட்டை ஆகிய பகுதிகளிலுள்ள 3000 மாணவ,மாணவியர்களுக்கு 4.2.87 அன்று சென்னைத் துறைமுகக் கழகக் குடியிருப்பில் உள்ள மாநகராட்சிப் பள்ளியில் நடைபெற்ற பல் சிகிச்சை முகாமில் பல் பரிசோதனை செய்யப்பட்டது. செம்பியம், பெரம்பூர் பகுதிகளிலுள்ள மாநகராட்சிப் பள்ளி மாணவ மாணவியர் 3000 பேர்களுக்கு 9.2.87 அன்று மாதவரம் நெடுஞ்சாலை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற பல் சிகிச்சை முகாமில் பல் பரிசோதனை செய்யப்பெற்றது. சூளை, ஓட்டேரி பகுதியில் உள்ள மாணவ, மாணவியர் 3000 பேர்களுக்கு 10.2.87 அன்று குக்ஸ் சாலை பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற பல் சிகிச்சை முகாமில் பரிசோதனை செய்யப்பெற்றது. இதுவரை 10,200 மாணவ,மாணவியர் பல் சிகிச்சை முகாமின் வாயிலாகப் பயன் பெற்றுள்ளனர். மார்ச்சு முதல் வாரத்திற்குள் மேலும் 20,300 மாணவர்களுக்கு சிகிச்சையளிக்கப்படும்.

இந்த முகாமில் முதற்கண், பல் சுகாதாரம் பற்றிய கண்காட்சியில் பலவிதப் படங்களின் மாதிரிகள் மூலம் பல் சுகாதாரக் கல்வி புகட்டப்படுகிறது. அதையடுத்து பல் சுகாதாரம் பற்றிய திரைப்படக் காட்சி காண்பிக்கப்படுகிறது. இதன் மூலம் மாணவர்களுக்குப் பல் சுகாதாரம் பற்றிய அறிவு ஏற்படுகிறது.

அதன் பின் மாணவர்களுடைய வாயும் பற்களும் பல் மருத்துவர்களால் சோதிக்கப்படுகின்றன. சொத்தைப் பற்கள், உடைந்த பற்கள், உருமாறிய பற்கள், நிறம் மாறிய பற்கள், இழந்த பற்கள், பல் காரை, ஈறு நோய்கள், வாய்ப் புண்கள், பிற நோய்கள் ஆகியவற்றை மருத்துவர்கள் ஆய்கிறார்கள். அதன் பின் சிகிச்சையளிக்கப்படுகிறது.

20 டாக்டர்கள் அடங்கிய குழு, பல் மருத்துவக் கல்லூரி முதல்வர் திரு. பி.பி. ராஜன் தலைமையில் இம்முகாம்களை காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடத்துகிறது. பெரும்பாலான மாணவ, மாணவியர் சாம்பல், கரிப் பொடி ஆகியவற்றைப் பயன்படுத்தி ஈறு உபாதைகளாலும் பல் சொத்தையாலும் அவதிப்படுகிறார்கள் என்பது இம்முகாம்களின் மூலம் தெரியவந்துள்ளது.

---

பாதுகாக்க, ஒற்றுமையைப் பாதுகாக்க நீங்கள் எல்லோரும் அரசுடன் ஒத்துழைக்க வேண்டும்.

கடந்த சில நாட்களாக இலங்கைஅரசு தமிழ் மக்கள் மீது கடுமையான விமானத் தாக்குதல் நடத்தி வருகிறது. ஜெயவர்த்தனாவின் இந்தக் கொடூரச்செயல் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

இதற்கு விரைவில் நல்ல தீர்வு காணும் பொருட்டு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று நம் பிரதமருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

இந்த அரசு ஏழைகளின் துயர் போக்கும் நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

குழந்தைகளுக்கும், ஆதரவில்லாதவர்களுக்கும் சத்துணவுத் திட்டம், இலவசப்பாடப் புத்தகம் மற்றும் சீருடைத் திட்டம் இவற்றைச் சிறப்பாக நடத்தி வருகிறோம்.

வீடு இல்லாத ஏழை எளிய மக்களுக்கு 30 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம், ஏழைத் தாய்மார்களுக்கும் பள்ளி மாணவர்களுக்கும் இலவசமாகக் காலணிகள் வழங்கும் திட்டம் ஆகியவை அமல்படுத்தப்படும்.



இந்தத் திட்டங்களினால் 60 இலட்சம் தாய்மார்கள், 60 இலட்சம் பள்ளி மாணவர்கள் பயன் அடைவார்கள்.

ஆயிரக்கணக்கான காலணி செய்யும் தொழிலாளிகளுக்கு நிரந்தர வேலை கிடைக்கும்.

அண்ணா நாமம் வாழ்க!

நன்றி வணக்கம்!''

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

மாண்புமிகு முதல்வர் இக்கூட்டத்தில் ஒரு பெண் குழந்தைக்கு 'சத்தியா' என்று பெயர் சூட்டினார். அவருக்கு ஏராளமான மாலைகளும், கைத்தறி ஆடைகளும், சால்வைகளும் அணிவிக்கப்பட்டன. அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. கொங்குவேளிர் சங்கம் சார்பில் வாழ்த்திதழ் அளிக்கப்பட்டது.

நிகழ்ச்சித் தொகுப்பு,
பி. எல். ராஜேந்திரன்.

# சேலம் மாவட்டம் :

## வளர்ச்சிப் பணிகள் முழு விவரம்

| திட்ட விவரம் | ரூபாய் இலட்சத்தில் | பயனடைவோர் |
|---|---|---|
| **வாழப்பாடி** | | |
| உலக வங்கி நிதி உதவியுடன் குடிநீர் வழங்கும் திட்டம் (கால் கோள் விழா) | 3885.39 | 7,56,807 |
| குறைந்த செலவில் சுகாதாரத் துப்புரவுத் திட்டம் ... | 65.02 | 50,537 |
| அதிக மற்றும் நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கான வீடுகள் மற்றும் மனைகள் ... | 194.73 | 746 |
| ஆதி திராவிடர் குடியிருப்பு மனைகள், சமுதாயக் கூடங்கள், துணைசுகாதார நிலையம் மற்றும் பிற திட்டங்கள் .... | 45.20 | 25,045 |
| கிளை நூலகம் (சங்ககிரி, தாசநாய்க்கன் பட்டி) ... | 5.18 | 35,777 |
| கழிப்பிடவசதி, ஜெனரேட்டர், பட்டுநூல்அறை ... | 3.25 | 3,100 |
| **தாரமங்கலம்** | | |
| தவணை முறைக் குடியிருப்பு ... | 57.66 | 204 |
| விதை சுத்திகரிப்பு நிலையம் ... | 13.00 | 15,000 |
| ஆதி திராவிடர் குடியிருப்பு, பள்ளிக் கட்டடங்கள், துணைச் சுகாதார மையங்கள், சத்துணவுக் கூடங்கள் மற்றும் பிற திட்டங்கள் ... | 48.21 | 53,813 |
| அரிசன ஸ்டார்ச் தொழிற்கூட்டுறவுச் சங்கம், பெரிய காடம்பட்டி ... | 17.00 | 100 |
| விசைத்தறிக் கூடம், மேச்சேரி ... | 27.00 | 100 |
| **சங்ககிரி** | | |
| பார உந்து நிலையக்கட்டடம், பள்ளிக் கட்டடங்கள் மற்றும் பிற திட்டங்கள் ... | 30.25 | 1050 |
| பழங்குடியினர், ஆதி திராவிட மாணவர் விடுதிகள், நேபாளி தறியலகு மற்றும் பிற திட்டங்கள் | 35.34 | 369 |
| பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டங்கள் ... | 15.78 | 4,828 |
| பள்ளிக் கட்டடங்கள், ஆதி திராவிடர் குடியிருப்புக்கள், சமுதாய நலக் கூடங்கள் மற்றும் பிற திட்டங்கள் ... | 31.84 | 33,342 |




# பாலை சோலையாகிறது!

பி. ஆர். பிந்துமாதவன்
இ. ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருநெல்வேலி கட்டபொம்மன்
மாவட்டம்.

'மானாவாரியில் நீர்பராமரிப்பு மற்றும் அதன் சேகரிப்பு முன்னோடித் திட்டம்' தமிழ் நாட்டிலேயே திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் தான் முதன் முதலில் அறிமுகப் படுத்தப்பட்டது.

மானாவாரி நிலங்களில் பெய்கிற மழை நீர் அதிக அளவில் வீணாகி விடாமல் சேகரித்து, அந்த சேமிக்கப்பட்ட நீரைக் கொண்டு மானாவாரிப் பயிர்களை வளர்த்து, உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதுதான் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் மழை குறைவான பகுதி. சராசரியாக ஒரு வருடத்திற்கு 800 மி. மீட்டர் மழை பெய்யும். இதை விடவும் குறைவாக மழை பெய்யும் பகுதியும் இம்மாவட்டத்தில் இருக்கிறது. அவைகளில் ஒன்றுதான் அழகிய பாண்டியபுரம் பகுதியாகும்.

இந்த அழகிய பாண்டியபுரம் பகுதியில் வருடத்திற்குச் சராசரியாக 766 மி.மீட்டர் மழைதான் பெய்யும். இதிலும் வடகிழக்குப் பருவ மழைக்காலமான அக்டோபர், நவம்பர் மாதங்களில் 431 மி.மீட்டர் மழை பெய்து வருகிறது. அதாவது வருடத்தில் மொத்த மழையில் 'பாதுக்கு மேல் உள்ள மழை' இரண்டே மாதங்களில் பெய்து விடுகிறது.

இந்த மழைக்காலமான அக்டோபர், நவம்பர் மாதங்களில் தான் அழகிய பாண்டியபுரம் பகுதி விவசாயிகள் தங்கள் நிலங்களில் பயிர் செய்வது வழக்கம். இரண்டு மாத மழைக்குப் பின், எப்போதாவது தான் மழை பெய்யும். ஆக, இந்த அக்டோபர், நவம்பர் மாத மழையை நம்பிப் பயிர் செய்வதில் சில சமயங்களில் பின் மழை இல்லாமல், பயிர்கள் வாடி, நஷ்டம் ஏற்பட்டே வந்துள்ளது. ஒரு மாதமோ அல்லது 50 நாட்களோ அந்த இடங்களில் ஈரப்பதம் இருக்கும்படி செய்தால் விவசாயிகள் மகசூல் எடுக்க வாய்ப்பு உண்டு என்று கருதி இத்திட்டம் அழகிய பாண்டியப்புரம் பகுதியில் செயல்படுத்தப்படுகிறது.

திட்டம் செயல்படுத்தப்படும் இடம் 2,000 ஏக்கர் பரப்புள்ள ஒரு சிறிய நீர்ப்பிடிப்புப் பகுதியாகும். இந்த இடத்தில் மேடு பள்ளங்கள் நிறைந்த பகுதி, கூழாங்கற்களாகவே நிறைந்து கிடக்கும் பகுதி, ஓடையில் அரிப்புகள் ஏற்பட்ட பகுதிஎன்று பல பாகங்களாகப் பிரித்துக் கொண்டு அந்தந்தப் பாகத்திற்கு ஏற்ற வேளாண்மைப் பொறியியல் பணிகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

பொதுவாக இத்திட்டம் மூன்று வகையாய்ப் பிரித்துச் செயல்படுத்தப்படுகிறது.

சம உயர வரப்பிடுதல், நிலச் சமன் செய்தல், சம உயர கூழாங்கற் சுவர் கட்டுதல், நீர்த் தேக்கும் குழிகள் வெட்டுதல், பண்ணைக்குட்டைகள் அமைத்தல் ஆகியன இந்த முதல் பகுதிப் பணிகளில் அடங்கும்.

கசிவு நீர்க்குட்டைகள் அமைத்தல், பெரிய ஓடைகளில் குறுக்கே தடுப்பு அணைகள்

## வீட்டுக் குறிப்புகள்

- நல்ல மணமுள்ள தேநீர் தயாரிக்க தேநீர் டப்பாவில் உலர்ந்த ஆரஞ்சு துண்டங்களைப் போட்டால் தேநீர் நன்றாக இருக்கும்.
- ஆப்பிள் பழங்கள் அதிக நாள் கெடாமல் இருக்க வேண்டும் என்றால் பழங்களை ஒன்றோடு ஒன்று தொடா வண்ணம் வைக்க வேண்டும்.
- காயாக இருக்கும் வாழைப்பழம் வேகமாக பழுக்க அவற்றை நன்கு பழுத்த பழத்துடன் கலந்து வைத்தால் சீக்கிரம் பழுத்துவிடும்.
- பூண்டின் தோலை எளிதாக உரிக்க சிறிது நேரம் வெந்நீரில் ஊறவைத்தபின் உரிப்பது சுலபம்.

கட்டுதல், பண்ணைக்காடுகள் தடுப்பு, காற்று அரிப்புத் தடுப்பு, தாவரச்சாலை அமைத்தல் ஆகிய பணிகள் இரண்டாவது பகுதியில் அடங்கும்.

ஓரளவு நீர் வசதி உள்ளபகுதிகளில் பழ மரக்கன்றுகள் வளர்க்கும் திட்டப்படி 110 எக்டேர் பரப்பில் பழ மரக்கன்றுகள் வளர்க்க ஒதுக்கப்பட்டுள்ளது. இது மூன்றாம் பகுதிப் பணியாகும்.

ரூ. 27.03 இலட்சம் செலவிலான இத்திட்டம் 1-10-85 முதல் செயல்பட்டு வருகிறது. இரண்டு வருடத்தில் அனைத்துப் பணிகளும் செயல்படுத்தப்பட உள்ளன.

அழகிய பாண்டியபுரம் பகுதியைச சார்ந்த செட்டி குறிச்சி, சுப்பையாபுரம், தேவர் குளம், மேல இலந்தைக் குளம், கட்டாரங்குளம் ஆகிய கிராம மக்கள் இத்திட்டத்தைத் தற்போது நன்கு புரிநது கொண்டு, அரசு அலுவலர்களுகக்கு நன்கு ஒத்துழைப்பு நல்குகின்றனர். தண்ணீர் தேவையான அருமையை உணர்ந்து, எப்படியும் தண்ணீரைச் சேமித்துச் சேதமில்லாமல் பயன்படுததிப் பயிர் விளைச்சல்காண வேண்டும் என்று ஆர்வமாக இருக்கின்றனர்.

கசிவு நீர்க்குட்டைகள் கட்டப் போதுமான புறம்போக்கு நிலம் இப்பகுதியில் இல்லாத நிலையில் தங்கள் சொந்த நிலங்களையே அரசிற்கு நன்கொடையாய்த் தர முன் வந்துள்ளனர். 6 முதல் 8 ஏக்கர் பரப்புள்ள இடங்களை அரசிற்கு நன்கொடையாகவும் அளித்துள்ளனர். அது போக, சொந்தச் செலவில் ரூ. 5000 - வரை செலவாகும் பண்ணைக் குட்டைகள் அமைக்கவும் முன் வந்துள்ளனர்.

கடந்த 1½ வருட காலத்தில், திட்டம் நிறைவேறும் சமயம், மழை அவ்வப்போது சிறிய அளவில் பெய்தது. இதன் காரணமாக, திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட 'சம உயர வரப்புப் பகுதிகள், நீர் சேமிப்புக் குழிகள், கசிவு நீர்க்குட்டைகள், பண்ணை குட்டைகள் ஆகிய பகுதிகளில் நீர் தேக்கப்படாத மக்கள் நேரில் கண்டறிந்தனர். அதன் பின்னர் இத்திட்டப் பகுதியைச் சார்ந்த கிணறுகளில் நீர் மட்டம் உயர்வதை 'வேளாண்மைப் பொறியியல் துறை' கணக்கிட்டது போலவே, விவசாயிகளும் நேரடியாகக் கண்டறிந்தனர். முன்பு ஒரு மணி நேரம் நீர் இறைக்க வாய்ப்பு இருந்தால் தற்போது— அதே கிணற்றில் மூன்று மணி நேரம் நீர் இறைக்க முடிகிறது. என்று அவர்கள் கூறுகின்றனர்.



இந்த மானாவரியில் நீர் பராமரிப்பு மற்றும் அதன் சேகரிப்பு முன்னோடித் திட்டம் நிறைவேற்றி முடிக்கப்படும் சமயம் பல்வேறு பயன்கள் கிடைக்கக்கூடும்.

விவசாயப் பணிகள் இல்லாத காலங்களில் வேலை இன்றித் தவித்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, இத்திட்டம் கடந்த 1½ வருட காலத்தில் நாள்தோறும் 200 க்கும் அதிகமானோருக்கு வேலை கொடுக்கப்பட்டுள்ளது. இதன்படி 1,05,400 மனித நாட்கள் வேலைகள் நடந்துள்ளன. விவசாயமும், வேலையும் இல்லாமல், கேரளா போன்ற பிற மாநிலங்களுக்குச் சென்ற இக்கிராம மக்கள், தற்போது வேலை வாய்ப்புக் கிடைப்பதால், திரும்பி வர ஆரம்பித்துள்ளார்கள்.

கிராமப்புற வேலை வாய்ப்பு மூலம் 2 ஆண்டுகளில் 2,14,374 மனித நாட்களுக்குப் பணி கிடைக்கிறது. மேலும் திட்டம் முடிந்து பின்னர் ஆண்டுக்கு 3,40,000 மனித நாட்களுக்கான பணி கிடைக்கும்.

நீர் வளமும், நில வளமும் காக்ககப்படுவதால் அதிக உற்பத்தி கிடைக்கிறது. காற்றரிப்பைத் தடுக்க 30 கி.மீ. நீள தாவரச் சாலைகள் அமைப்பதால் நில வளம் பெருகுகிறது.

பெய்கிற கொஞ்ச மழையும் ஒரு சொட்டுக் கூட வீணாகாமல் சேகரிக்கப்பட்ட இருப்பதால், கிணறுகளில் அடிமட்ட ஊற்று ஏற்பட்டு அதன் மூலம் அதிக் உற்பத்தி கிடைக்கிறது.

பழ மரங்கள், தாவரச் சாலைகள் மூலமாகவும் உறுதி செய்யப்பட்ட விளைச்சல் மூலமாகவும் வருடத்திற்கு ரூ. 29,18,160, வருமானம் இப்பகுதியில் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

31.1.1987 முடிய சம உயர வரப்பிடுதல், நிலச் சமன் செய்தல், கசிவு நீர்க்குட்டைகள் அமைத்தல், பண்ணைக்குட்டை கட்டுதல், சரிவுக்குக் குறுக்கே உழவுகள் செய்தல், வண்டல் மண் அடித்து நிலம் வளப்படுததுதல், பண்ணைக் காடுகள், பழ மரக்கன்று நடுதல், குழாய்கள் பதித்தல், 30 கி.மீட்டர் நீளத்திற்கு தாவரச் சாலைகள் அமைத்தல் ஆகிய பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பணிகளுக்கு 1.10.85 முதல் 31.1.87 வரை ரூ 22.65 இலட்சம் செலவாகி உள்ளது. ஏனைய பணிகள் நடந்து வருகின்றன. இதுவரை 1,82,000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இம் மரக்கன்றுகள் நட்ட பின் அப்படியே விட்டு விடாமல், தண்ணீர் ஊற்றிப் பராமரிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக இது வரை 35 ஆழ்குழாய்கள் போடப்பட்டு, அடி பம்புகள் பொருத்தப்பட்டுள்ளன.வேளாண்மைப் பொறியியல் துறையினரால் செடிகளை நீர் விட்டுப் பராமரிக்கும் பணி செவ்வனே நடக்கிறது.

இத்திட்டப் பணிகளைப் பார்வையிட்ட தமிழக அரசின் இரண்டாவது செயலாளர் திரு டி. கே. ஓசா, இ.ஆ.ப. அவர்களும், தமிழக அரசின் உணவு உற்பத்தித் துறை ஆணையர் திருமதி அஞ்சனி தயானந்த், இ.ஆ.ப., அவர்களும் மற்றும் வேளாண்மைத் துறை ஆணையர் மற்றும் செயலர் திரு ஏ. வெங்கட்ராமன், இ.ஆ.ப., அவர்களும் வறட்சிக்கு இலக்காகும் பகுதி இயக்குநர் திரு. சசிசேகர் இ.ஆ.ப., அவர்களும் திட்டத்தை வெகுவாகப் பாராட்டினர்.

மேலும் வெளிநாட்டிலிருந்து வந்த நிபுணர்களும் இத்திட்டத்தைப் பாராட்டியுள்ளார்கள். கனடா நாட்டிலிருந்து டாக்டர் மில்லட் , டென்மார்க் நாட்டிலிருந்து வந்த திரு ஜோர்கென்சன் திரு. பீட்டர்சன் ஆகியோர் வேளாண்மைப்பொறியியல்துறையின் இந்த அழகிய பாண்டியபுரம் பகுதிப் பணியினைப் பாராட்டி 'பாலைவனம் சோலையாகிறது' என்று தங்களது குறிப்புரையில் கூறியுள்ளனர்



# கோவை ஒரு பார்வை

'தென்னிந்தியாவின் மான் செஸ்டர்', 'ஏழைகளின் ஊட்டி' என்று பெயர் பெற்ற கோவை இனறு தமிழநாட்டில் சிறப்பான தொரு இடத்தினைப் பெற்றுள் ளது.

உதகைக்கடுத்து மேற்குத் தொடர்ச்சி மலையின் தட்ப வெப்ப நிலையினை இம்மாவட் டம் பெறறுள்ளது. கோவை மாவட்டம 7434-62 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடையது.1981 ஆம் ஆண்டுக்கணக்கெடுப்பின்படி இம்மாவட்ட மக்கள் தொகை 30.60 இலட்சம் ஆகும்.

இம்மாவட்டம் கோவை, திருப் பூா, பொள்ளாச்சி என்ற 3 வருவாய்க் கோட்டங்களாகப் பிாிக்கப்பட்டுள்ளது. கோவை மாநகராட்சியையும், 4 நக ராட்சிகளையும், 7 வருவாய் வட் டங்களையும், 21 ஊராட்சி ஒன்றியங்களையும், 60 பேரு ராட்சிகளையும், இம்மாவட்டம் கொண்டுள்ளது.

கோவை மாவட்டம் பெரு மைக்கும் சிறப்புக்கும் உரிய திருத் தலங்களையும், சுற்றுலா இடங் களையும் கொண்டுவிளங்குகிறது.

திருமுருகப் பெருமானின் 7-வது படைவீடு எனப் போற்றப் படும் 'மருதமலை' என்னும் புகழ் பெற்ற திருத்தலம் கோவை மாநகரின் மேறகே 15 கி.மீ. தொலைவில் மேற்குத்தொடர்ச்சி மலையில் 3 புறமும் மலைகளால் சூழப்பட்டு நடுவே அமையப் பெற்றுள்ளது. மருத மரங்கள் அடர்ந்த சோலையின் நடுவே இத்திருக்கோயில் அமையப் பெற்றுள்ளதால் இவ்விடம் மருத மலையென்னப்படுகிறது. இங்கு திருக்கோலம் பூண்டுள்ள முருகப் பெருமான் மருதாசலமூர்த்தி, மருதப்பன், மருதமலையான் என்றெல்லாம் வழங்கும் மருத மலை ஆண்டவனாகிய முருகன் நின்ற திருக்கோலத்தில் அழகுறு ஞானதண்டாயுதபாணியாக எழுந்தருளியுள்ளார். இத்திருக் கோயில் இம்மாவட்டத்தின் புகழ்பெற்ற சிறப்புக்குரிய ஒரு திருத்தலமாகும்.

கோவை மாநகரிலிருந்து 8 கி.மீ. தொலைவிலுள்ள 'மேலைச் சிதம்பரம்' என்று பெயர் பெற்ற பட்டீஸ்வரர் ஆலயம் இம்மாவட் டத்தில் புகழ் பெற்ற திருத்தல மாகும். இங்குள்ள ஒரே கல்லில் செதுக்கப்பட்ட கற்சிலைகள் அனைவரது கவனத்தையும் ஈர்க்கும் வகையில் சிற்பக்கலை யின் எழிலுக்கு எழில் ஊட்டும் வண்ணம் அமைந்துள்ளன.

கனகசபையின் மேற்புறம் அண்ணாந்து நோக்கினால் நடுவில் அஷ்டதிக்கு பாலகர்கள் தத்தம் வாகனங்களில் திருவுரு வங்களில் விளங்கவும், நடு மையத்தில் கமல மலர்கள் இதழ் பரப்ப அவற்றில் கிளிகள் அமர்ந் திருப்பதுபோல் செய்யப்பட்டு நான்கு மூலைகளிலும் சங்கிலிகள் சுழக்கூடிய வளையங்கள் கருங் கல்லால் வெகு திறமையாக செய்து, காண்போர் வியக்கத் தக்க வகையில் அமைந்திருப்பது சிறப்புக்கும் பெருமைக்குமுரிய தாகவுள்ளது.

கோவை மாநகரிலுள்ள தண்டு மாரியம்மன், கோனியம்மன், சவுண்டம்மன், கோட்டைஈஸ் வரன் ராமர்கோயில், சாயிபாபா கோயில், ஈச்சனாரி விநாயகர் ஆலயம் மற்றும் புலியகுளம் அந்தோணியார் ஆலயம், ஒப் பணக்காரத்தெருவிலமைந்துள்ள அந்தர் ஜமாத் பள்ளிவாசல் போன்ற ஆலயங்கள் இம்மாவட் டத்தில் சிறப்புக்குரியனவாக அமைந்துள்ளன.

கோவையிலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் அமைந் துள்ள 'காசியில் பாதி' என்று புகழ்பெற்ற அவிநாசி ஈஸ்வரர் ஆலயம், புத்தி சுவாதீனமற்றவர் களுக்கு அருள்பாலிக்கும் திரு முருகன் பூண்டி, வெள்ளிங்கிரி மலை, காரமடை, உடுமலை திருமூர்த்தி மலையில் அமைந்

துள்ள அமனலிங்கேஸ்வரர், மேட்டுப்பாளையம் வனபத்திர காளியம்மன் முதலான திருக்கோயில்கள் இம்மாவட்டத்தின் சிறப்புக்குரியனவாகும்.



கோவையின் புகழுக்குப் புகழ் சேர்க்கும் வண்ணம் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், கோவை மருத்துவக் கல்லூரி, கான் இயல் பயிற்சிக் கல்லூரி மற்றும் சிறப்புக்குரிய கல்வி நிலையங்களையும் இம்மாவட்டம் பெற்றுள்ளது.

கோவை மாநகரில் வழங்கப்படும் சிறுவாணி குடிநீர் உலகத்திலேயே இரண்டாவது சிறப்பான குடிநீர் எனப் புகழ் பெற்றது.

**கோவையின் சுற்றுலா இடங்கள்**

கோவையிலிருந்து *30* கி.மீ. தொலைவிலுள்ள பெரியாறு நீர் வீழ்ச்சி, தோற்றத்தில் சிறிய குற்றாலம் போன்று விளங்குவதால் இது கோவை குற்றாலம் என்று அழைக்கப்படுகிறது. இது அடர்ந்த காட்டின் நடுவே இயற்கைச் சூழ்நிலையில் அமைந்துள்ளது. இப்பகுதியில் யானை, சிறுத்தை, புலி, புள்ளிமான், கடமான் போன்ற மிருகங்கள் உள்ளன. இதனைச் சுற்றுலாத் தலமாக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

கோவையிலிருந்து *80* கி.மீ. தொலைவில் அமைந்துள்ள டாப்சிலிப் என்னும் வனவிலங்கு சரணாலயம் இம்மாவட்டத்தில் சிறப்புக்குரிய தொன்றாகும். இயற்கைச் சூழலில் அமைந்துள்ள அடர்ந்த காடுகளில் யானை, சிறுத்தை, புலி, கடமான், புள்ளிமான், காட்டெருமைகள், காட்டுக்கோழி, காட்டுப்பன்றிகள் முதலான மிருகங்கள் சுற்றித் திரிவதைக் காண்பதற்காக மக்கள் திரண்டு வருகின்றனர்.

உடுமலைக் கருகிலுள்ள அமராவதி முதலைப் பண்ணை தமிழ் நாட்டில் குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

வால்பாறை செல்லும் வழியில் குரங்கு நீர்வீழ்ச்சி (மங்கி பால்ஸ்) உள்ளது. இதனையும் சுற்றுலாத் தலமாக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

வால்பாறை மலைப்பகுதி அடர்ந்த தேயிலைத் தோட்டங்கள் நிறையப் பெற்றது. வால்பாறை சிறந்த சுற்றுலாத் தலமாக விளங்கி வருகிறது.

ஆளியார், அமராவதி, திருமூர்த்தி, தூனக்கடவு, பரம்பிக்குளம், லோயர் நீரார், உப்பார் போன்ற அணைக்கட்டுகள் இம் மாவட்டத்தில் சிறப்புக்குரிய அணைக்கட்டுகளாகும்.

கோவையிலிருந்து உதகை செல்லும் வழியில் கல்லார் பழப் பண்ணை உள்ளது. உதகைக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் கல்லார் சென்று வருவதை எப்போதும் காணலாம். கல்லார் பழப்பண்ணை இம்மாவட்டத்தில் சிறப்புக்குரிய சுற்றுலாத் தலமாக விளங்குகிறது.



**கோவைக்குப் பெருமை சேர்த்த சான்றோர்கள்-விடுதலை வீரர்கள்**

இந்தியத் திருநாட்டின் விடுதலைக்கு வித்திட்டு, நாட்டின் விடுதலையைப் பெற்றுத் தந்த அண்ணல் மகாத்மா காந்தியடிகள் *1921, 1934,* மற்றும் *1946* ஆம் ஆண்டுகளில் கோவை மாவட்டத்திற்கு வருகை புரிந்துள்ளார்.

இம்மாவட்டத்தில் சென்னைக்கு அடுத்து முதன் முதலாக தொழிற் சங்கத்தை வ.உ. சிதம்பரனார் அவர்கள் தொடக்கி வைத்திருக்கிறார். வ.உ. சிதம்பரனார் செக்கிழுத்த சிறை கோவை மத்திய சிறைச்சாலையாகும். சிறையிலிருந்து விடுதலையான பின் வ.உ.சி. கோவை நகரில் மாவு மில்ரோட்டிலும் பின்,



திரு. கே. எஸ். ராமசாமி கவுண்டர், திரு. ஈஸ்வரமூர்த்தி கவுண்டர், செட்டிபாளையம், திரு. அய்யாசாமி கவுண்டர், திரு. என். எஸ். ராமசாமி அய்யங்கார், திரு. பாலாஜிராவ், திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார், திரு. வெள்ளிங்கிரி கவுண்டர், திரு. ராமலிங்கம் செட்டியார் திரு. சின்னசுல்தான் சாயபு, திரு. சுப்பிரமணிய பாண்டே,

பேரூரிலும் குடியேறி, கோவை மாவட்ட வாசியாக வாழ்ந்திருக்கிறார்.

தேசியக் கொடியினை உயிரினும் மேலாக எண்ணி, கொடி காத்த குமரன் வாழ்ந்த விடுதலை வேட்கை மிகுந்திருந்த மாவட்டம் கோவை மாவட்டமாகும். திருமணமாகி 10 மாதத்திற்குளளேயே இந்தியத் திருநாட்டின் விடுதலை வேண்டி திருப்பூர் கச்சேரி வீதியில் 12 பேர்களோடு ஊர்வலம் சென்ற திருப்பூர் குமரன் கொடியேந்திச் சென்ற போது தடியடிப் பிரயோகத்தில் ஆங்கிலேய போலீசாரால் அடிக்கப்பட்டார். கொடியினைக் கொடுக்க மறுத்து உயிர்போகும் வரை கொடியினைக் கையிலிருந்து பிடுங்கக்கூட இயலாது கையில் தாங்கி உயிரை விட்ட பெருமைக்குரிய விடுதலை வீரர் திருப்பூர் குமரன் ஆவார்.



தந்தை பெரியார், தந்தை திரு. சி.பி.சுப்பையா, திரு. சுபரி, பெரியார் அவர்களின் துணைவி திரு. தி.அ. அவிநாசிலிங்கம் யார் திருமதி. நாகம்மையார், செட்டியார் திரு. சி. சுப்பிர திருப்பூர் திரு. பி.எஸ். சுந்தரம், மணியம், திரு. ஆர். ஏ. சண்முகத்

தொழிற் சங்கத் தலைவராக வாழ்ந்து, தொழிலாளர்களின் நலனுக்காகவே பாடுபட்டு விடுதலைப் போரில் ஈடுபட்டவர் தியாகி என். ஜி. இராமசாமி. கோவை சரோஜா மில்லில் சாதாரண மில் தொழிலாளியாக இருந்த இவர், தீரர் சத்தியமூர்த்தி அவர்களின் பரிந்துரையின் பேரில் சட்டமன்றத்திற்குப் போட்டியிட்டுப் பெருவாரியான வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

தொழிலாளர் நலனுக்காகப் பாடுபட்ட இவர் குண்டர்களால் தாக்கப்பட்டு, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்ற போது மருத்துவமனையிலும் தாக்கப்பட்டார். மண்டை, இடுப்பு, கால் அடிபட்டுக் கிடந்த இவர் சிகிச்சை பெற்று தடி ஊன்றிச் சென்றும் தொழிற் சங்கப் பணிகளைச் செய்தார். இவர் கோவை மாவட்ட பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தின் முதல் தலைவராவார். தொழிலாளர்கள் நலனுக்காக வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட பெருமைக்குரிய தலைவர் திரு. என். ஜி. இராமசாமி ஆவார்.

## சூரிய ஒளி சிக்னல்

இந்தியாவிலேயே முதன் முதலாக சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரித்து, அதைப் பயன்படுத்திப் போக்குவரத்து 'சிக்னல்' விளக்கு ஒன்றை அமைத்து, சென்னை மாநகரக் காவல்துறை சாதனை படைத்துள்ளது.

இந்த 'சிக்னல்' சென்னை கிண்டி மேம்பாலம் அருகே அமைக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

இந்த சிக்னல் மீது 6 மணி நேரம் சூரிய வெளிச்சம் பட்டால் போதும். அந்த வெளிச்சத்தை வைத்துக்கொண்டு மின்சாரம் தயாரித்து 30 நாட்களுக்கு இந்த சிக்னல் தானாக இயங்கப் போதுமான சக்தியைச் சேகரித்துக் கொள்ளும்.

இதுபோன்ற மேலும் ஒரு போக்குவரத்து சிக்னல் விளக்கு, ரூ. 2 இலட்சத்து 21 ஆயிரம் செலவில் சென்னை வேப்பேரிப் பகுதியிலுள்ள டவுட்டனில் அண்மையில் நிறுவப்பட்டுள்ளது.

தேவர், கரடிவாவி திரு. குப்பா நாயுடு, கணபதி திரு. சுப்பண்ண கவுண்டர், அத்துப்பாளையம் திரு. ராமகிருஷ்ண நாயுடு போன்ற எண்ணற்ற தியாகிகள் இம்மாவட்டத்தில் விடுதலைப் போராட்டத்தில் பங்குபெற்று இம்மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார்கள்.

**கோவை – தொழில் மாவட்டம்**

'தென்னிந்தியாவின் மான்செஸ்டர்' என்ற புகழினைப் பெற்றுள்ள கோவை மாவட்டம் தொழில் வளர்ச்சியில் சிறப்பானதொரு இடத்தினைப் பெற்று இந்தியாவிலேயே தொழில் வளத்தில் மேன்மை பெற்றுள்ள மாவட்டமாகத் திகழ்ந்து வருகின்றது. இம்மாவட்டத்தில் வேளாண்மையும், ஆலைத்தொழிலும், பொறியியல் தொழிலும் முக்கியமான தொழில்களாகும். பெரிய தொழிற்சாலைகளும், நூற்பாலைகளும், சிறுதொழிற்சாலைகளும் இன்று வளர்ச்சி பெற்று பல இலட்சம் தொழிலாளர்களுக்கு வாழ்வளித்து வருகின்றன. பல்வேறு பொறியியல் பட்டம் பெற்றவர்கள் சுயமாகத் தொழில்களை உருவாக்கி நடத்தி வருவதை இம்மாவட்டத்தில் எங்கு நோக்கினாலும் காணலாம். 100-க்கும் மேற்பட்ட பெரிய நூற்பாலைகளின் தொழில் பெருக்கமும், இவ்வாலைகளுக்கு தேவையான இயந்திரங்களும் அதன் உதிரிப் பொருட்களும் இம்மாவட்டத்திலேயே உற்பத்தியாவதோடு மற்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வருகின்ற சிறப்பையும் இம்மாவட்டம் பெற்று நிற்கின்றது.

100-க்கும் மேற்பட்ட நூற்பாலைகள், 200 சிறுரக கழிவு நூற்பாலைகள், 40-க்கும் மேற்பட்ட பெரிய மற்றும் நடுத்தர வார்ப்படம் மற்றும் இயந்திரச் சாதனங்கள் உற்பத்திக்கூடங்கள் தோன்றி பீடுநடை போட்டு வருகின்றன. இயக்கு ஊர்திகள், ரேடியேட்டர்கள் மின் இயக்குகள், மின் மோட்டார் பம்புகள், மெசின் டூல் எனப்படும் இந்திரக்கருவிகள், உர வகைகள், வெல்டிங் சாதனங்கள் செயற்கை வைரக் கற்கள், வாயு வகைகள், குளுகோஸ், சர்க்கரை, தேயிலை, காபி, சிமிட்டி போன்றவை இங்கு வெகுவாக உற்பத்தியாகின்றன. இங்கு தயாரிக்கப்படும் நூற்பு மற்றும் நெசவு இயந்திரங்கள் உலகச் சந்தையில் போட்டி போடுவது இம்மாவட்டத்தின் சிறப்பாகும்.

சிறுதொழில் வளர்ச்சியிலும் இம்மாவட்டம் சிறந்து விளங்குகிறது. பவுண்டரிகள், மோட்டார் பம்புகள், வெட்கிரைண்டர் வகைகளில் கோவைத் தயாரிப்புக் களையே அனைவரும் விரும்புகின்றனர். மரப்பொருட்கள், ஸ்டீல் பர்னிச்சர்கள், காகிதப் பொருட்கள், உலோகப் பொருட்கள், மின்சார சாதனங்கள் மற்றும் நாகரிக மக்களிடையே அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பெரும்பாலான பொருட்கள் இங்கு உற்பத்தியாகின்றன.

திருப்பூரில் உற்பத்தியாகும் பனியன்கள் உலகப் புகழ் பெற்றவையாகும். திருமுருகன் பூண்டியில் கண்கவர் கற்சிலைகளும், குறிச்சி, புதுப்பாளையம் முதலான இடங்களில் கண்கவர் காகிதக் கூழ்ப் பொம்மைகளும் சுந்திராபுரத்தில் சுவர் அலங்காரப் பொருட்களும், இவை போன்று பல வேறுவகைப் பொருட்கள் இம்மாவட்டத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுதொழில்கள் மற்றும் கைவினைத் தொழில்கள் நடைபெற்று வருகின்றன.

# ஏலக்காய்

பல்லாயிரக்கணக்கான மக்களைப் பல இடங்களுக்கும் பிரார்த்தனைக்கு அழைத்து, ஒற்றுமைப்படுத்தும் சக்தியாகவும் ஒரே நம்பிக்கைக்கும், உணர்ச்சிப் பூர்வமாக ஒன்றுபடவும் ஆன்மீக ஒருமைத்தன்மைக்கும் உதவும் கருவியாகவும் மதம் திகழ்கின்றது.

நமது நாட்டில், அரித்துவாரம் கோடிக்கணக்கான இந்து பக்தர்களையும், பக்ரீத் கொண்டாட்டங்களும், கிறித்துவ விழாக்களும் இதே எண்ணிக்கையில் சகோதர பாவத்துடன் மக்கள் ஒன்றுகூட வகை செய்கின்றன. எம்மதமானாலும், எத்தகைய கொண்டாட்டமானாலும், தங்குதடையின்றி மணம் பரப்பி முக்கிய இடம் பெறுவது ஏலக்காய்.

பண்டிகைகளில் இனிப்புப் பண்டங்களைத் தயாரிக்க உதவும் ஏலக்காய், குருத்துவாரங்களில் தயாராகும் கேசரியிலும், முஸ்லீம் இல்லங்களில் சீர் செய்யவும், கிறித்துவ கொண்டாட்டங்களின் போது வழங்கிடும் 'கேக்' தயாரிப்பிலும், இந்துக்களின் நாவூறும் பாயசத்திலும் ஏலக்காய் நீக்கமற இடம் பெற்று மணம் கமழச் செய்கின்றது.

தரமான ஏலக்காய் குறித்து அறிவுறுத்துவதுடன், மக்களிடையே ஒருமைப்பாட்டினை நிலைநிறுத்த புதிய முறையொன்றினை ஏலக்காய் வாரியம் கண்டுள்ளது. நாடெங்கிலும் நடைபெறும் விழாக்கள், கொண்டாட்டங்களின்போது, ஏலக்காய் விற்பனை மேம்பாட்டுக் கண்காட்சிகளை வாரியம் சமீபத்தில் நடத்தத் துவங்கியுள்ளது. அரித்துவாரத்தில் கும்பமேளா கொண்டாட்டங்களின்போது பதினொரு பங்கீட்டு மையங்களை வாரியம் திறந்தது. இம்மையங்களில் 5 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட 30 கிராம் ஏலக்காய் பொட்டலங்களுக்கு கும்பமேளாவில் பெரும் ஆதரவு இருந்தது. கிட்டத்தட்ட 50,000 பேர் இந்தப் பொட்டலங்களை வாங்கிச் சென்றனர்.

தமிழகத்தில், நாகப்பட்டினம், வேளாங்கண்ணி மாதா விழாவின் போது, மாநிலத்தின் பல பாகங்களிலிருந்தும் இலட்சக்கணக்கான பயணிகள் கலந்துகொள்வார்கள் செப்டம்பர் முதல் வாரத்தில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியின் போதும், ஏலக்காய் வாரியம் விற்பனை மையங்களைத் துவக்கி ஏழை - எளிய மக்களும் வாங்கக் கூடிய நிலையில் 30 கிராம் ஏலக்காய்ப் பொட்டலங்களை வழங்குகிறது. வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதா, சிக்கல் முருகன், நாகூர் தர்கா என எம்மதத்து நிகழ்ச்சியானாலும் மக்களை ஒற்றுமைப்படுத்தி, மணம் கமழும் சக்தியாகத் திகழ்கின்றது ஏலக்காய்!

# வளமான வாழ்வுக்கு
# வழிகாட்டும் வங்கி



வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வங்கி
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி!
தாய்மையின் தனிப்பரிவுடன் உங்கள் சேமிப்பு
எங்களிடம் பூரிப்புடன் வளர்கிறது!

உங்களது அனைத்து சேமிப்புகளுக்கும் ¼%
கூடுதல் வட்டியும் கிடைக்கிறது.

மக்களுக்கேற்ற வங்கி—
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி.

TNSC BANK

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001

TNSC—வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி

TNSC BANK/164

# வறட்சி நிவாரணப் பணிகள் :
# திருச்சியில் மாவட்ட





தமிழ்நாட்டில் மழை பொய்த்த தின் காரணமாகப் பல்வேறு மாவட்டங்களில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து வறட்சி நிவாரணப்பணிகள் குறித்தும், குடும்ப நலத்திட்டம், சிறு சேமிப்புத் திட்டம், 20 அம்சத் திட்டம் பற்றியும் ஆலோசனை செய்வதற்காக 1-3-87 அன்று 11 மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. ஏ. அருணாசலம் ஆகியோர் கலந்துகொண்டு ஆலோசனை செய்தார்கள்.

தலைமைச் செயலாளர் திரு. ஏ. பத்மநாபன், இ. ஆ. ப., வருவாய் நிருவாக ஆணையர் திரு அரிபாஸ்கர் இ. ஆ. ப., நிலச் சீர்திருத்த ஆணையர் திரு பி. வி. வெங்கிடகிருஷ்ணன் இ. ஆ. ப., நல்வாழ்வுத்துறைச் செயலாளர் திரு சண்முகம், இ. ஆ. ப., நிதித் துறை இணைச் செயலாளர் திரு நரேஷ் குப்தா இ. ஆ. ப., திட்டத் துறை கூடுதல் செயலாளர் திரு குருமூர்த்தி, இ. ஆ. ப., சிறு சேமிப்புத்துறை இயக்குநர் திரு சம்பத்குமார் இ. ஆ. ப., குடும்ப நல இயக்குநர் திருமதி ஓ. பி. சோசம்மா, இ. ஆ. ப. ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் பின்வரும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பங்கு கொண்டனர்.

திரு விஸ்வநாதன் இ. ஆ. ப., (திருச்சி); திரு. எம். இராமு, இ. ஆ. ப. (தஞ்சாவூர்) திரு எல். பழமலை, இ. ஆ. ப. (புதுக்கோட்டை) திரு எம். மாதவன் நம்பியார் இ. ஆ. ப. (அண்ணா) திரு ஆர். வரதராஜுலு, இ. ஆ. ப (மதுரை); திரு. ஆர். கோபாலன் இ. ஆ. ப. (பசும்பொன் முத்து ராமலிங்கம்) திரு எல். என். விஜயராகவன், இ. ஆ. ப., (காமராஜர்); திரு தேவேந்திரநாத் சாரங்கி, இ. ஆ. ப. (இராமநாதபுரம்); திரு பிந்து மாதவன், இ. ஆ. ப. (திருநெல்வேலி கட்டபொம்மன்); திரு ஆர். ஆறுமுகம், இ. ஆ. ப., (சிதம்பரனார்); திரு. முனீர் ஹோதா, இ. ஆ. ப. (கன்னியாகுமரி);

தலைமைச் செயலாளர் திரு. ஏ. பத்மநாபன் அவர்கள் பேசுகையில், மாநில அளவில் வறட்சி நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்துச் செயல்படுத்தும் வகையில் வருவாய் நிருவாக ஆணையாளர் திரு அரிபாஸ்கர், இ. ஆ. ப., அவர்கள் மாநில வறட்சி நிவாரண ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வாரந்தோறும், அவர் மாநிலம் முழுதும் செயல்படுத்தப்பட்டு வரும் வறட்சி நிவாரணப் பணிகளை ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிப்பார் என்று அறிவித்தார்.

மாநாட்டில் வறட்சிநிவாரணப் பணிகள் குறித்த ஆலோசனை சுமார் மூன்று மணி நேரம் நடந்தது. சிறு சேமிப்பு வசூலில் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்தும், குடும்ப நலத் திட்டம் குறித்தும் ஆலோசனைகள் நடைபெற்றன.

ஆலோசனைக் கூட்டம் முடிவுற்ற பின்னர் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளிக்கையில், தற்போது மாவட்டங்களில் நிலவி வரும் வறட்சி மற்றும் திட்டங்களின் நிலைமை குறித்து ஆராயப்பட்டது எனவும், பருவ மழை தவறியதால் ஏற்பட்டுள்ள நிலைமை உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டது எனவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தெந்தப் பகுதிகள் பாதிக்கப் பட்டுள்ளன, எப்படி நிவாரணம் அளிக்கலாம் என்பது பற்றியும்

# ஆட்சித்தலைவர்கள் மாநாடு





**ப. சாமிநாதன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**திருச்சிராப்பள்ளி மாவட்டம்.**

அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றியும் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டது எனவும் கூறினார்.

குறிப்பாக, குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க அவசரகால நடவடிக்கைகள் அனைத்தும் உடனடியாக எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்திரவிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, தமிழ்நாடு முழுவதும், 8,591 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க ரூ. 28 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்லும் அமைக்கப்படவுள்ள குழாய்க் கிணறுகள் விபர மாறு:—

திருச்சிராப்பள்ளி 533; தஞ்சை 638; புதுக்கோட்டை 291; மதுரை 381; அண்ணா 265; சிதம்பரனார் 325; காமராஜர் 280; நெல்லை 361; இராமநாதபுரம் 342; பசும்பொன் முத்துராமலிங்கம் 290; கன்னியாகுமரி 267.

இந்த ஆழ் குழாய்க் கிணறுகளைப் போர்க்கால நடவடிக்கையில் அமைக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

காலநடைத் தீவனங்களைப் பொறுத்தவரை, எந்தெந்த மாவட்டங்களில் உபரியாகக் கிடைக்கிறதோ அந்த மாவட்டங்கள் பற்றாக்குறையாக உள்ள மாவட்டங்களுக்கு அனுப்பும்படியும் கூறப்பட்டுள்ளது.

வறட்சிப் பகுதிகளில் வேலை வாய்ப்புக்கான நடவடிக்கைகள் எடுக்கும்படியும் கூறப்பட்டுள்ளது.

அந்தந்த மாவட்டங்களின் நிலைமைக்கு ஏற்ப வரி தள்ளுபடி செய்வது பற்றி, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளை அரசு பரிசீலனை செய்து அனுமதி வழங்கும்.

கிராமங்களில் லாரிகள், மினி டிரைலர்கள் மூலம் தண்ணீர் வினியோகம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

குறிப்பாக, தமிழகத்தில் தற்போது ஏற்பட்டுள்ள வறட்சி நிலைமை பற்றிய முதல் அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு விட்டது. தொடர்ந்து மாதந்தோறும் வறட்சி நிலைமையை ஆராய்ந்து மத்திய அரசுக்குத் தகவல் அறிக்கை அனுப்பப்படும். இறுதி அறிக்கை இன்னும் மூன்று மாதங்களுக்குள் அனுப்பப்படலாம். இவ்வாறு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கூறினர்.

ஆழ்குழாய்க் கிணறுகள் மிக விரைவாக அமைக்கப்படும் என்று உறுதி கூறிய நிதி அமைச்சர், குடிநீர் வடிகால் வாரியம் வேளாண்மைத்துறை ஆகியவற்றில் ரிக் இயந்திரங்கள் போதுமான அளவு இல்லாமையால் தனியார் நிறுவனங்களில் உள்ள 'ரிக்' இயந்திரங்கள் பயன்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் பேசுகையில், குடும்ப நலத்திட்டத்தைச் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் தமிழகம் செயல்படுத்தி மத்திய அரசின் முதற் பரிசான ரூ. இரண்டரை கோடியைத் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக வென்றுள்ளது எனவும், கடந்த ஆண்டு மட்டும் ஐந்து இலட்சத்து அறுபதாயிரம் பேருக்குக் கருத்தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டு மத்திய அரசின் கருத்தடைக்கான குறியீடு, கடந்த ஆண்டைவிட ஒரு 1 இலட்சம் அதிகரிக்கப்பட்டிருந்தாலும் மத்திய அரசின் முதற் பரிசினைப் பெறுவதற்கான முயற்சிகள் தீவிரப்படுத்தப்படும்'' எனவும் கூறினார்.

# தாய்மார்களுக்குச் சில அறிவுரைகள்







தாய்மை என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். கருவுற்றிருக்கும் பெண்கள் உடல் நலத்தைக் கவனமாகப் பாதுகாக்க வேண்டியது அவசியம். ஏனென்றால், பெரியவர்கள் சொல்வதுபோல ஒருயிர் மட்டுமல்ல, இரண்டு உயிர்களைப் பராமரிக்கும் நிலை அப்போது நிலவுகிறது.

கரு, தன் தாயின் உணவிலுள்ள சத்துப் பொருட்களை எல்லாம் தனது உணவாக்கிக் கொள்கிறது. குறைவான ஊட்டச் சத்தை உண்ணும் தாய்களுக்குப் பிறக்கும் குழநதைகள் குறைந்த எடை கொண்டதாக, குறைந்த அளவு சக்தி கொண்டதாக, முன்னதாக இறந்து போகக்கூடிய வாய்ப்புகள் கொண்டதாக இருக்கின்றன.

பருமனான தாய்மார்களின் கரு பெரிதாக இருக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே, பிரசவம் கடினமாகவும், அபாயம் விளைவிக்கக்கூடியதாகவும் அமையும் சாதாரணமான பேறு காலத்திற்கும், சுகப்பிரசவத்திற்கும் ஏதுவாக, கருவுற்றிருக்கும் காலத்தில், தாய்மார்கள் தங்களது எடையைச் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். கருவுற்றிருக்கும் முதல் 3 மாதக் காலத்தில் ஒன்றரைக் கிலோகிராம் எடை அதிகரிக்கலாம். பின்னர் ஒவ்வொரு மாதமும் ஒன்றரைக் கிலோ அதிகரிக்கலாம். கடைசி இரண்டு மூன்று மாதங்களில் இன்னும் சிறிது எடை கூடலாம். இவ்வாறாக நிறைமாதக் கர்ப்பிணியாய் இருக்கும்போது 10 முதல் 12 கிலோகிராம் வரை மொத்த எடை அதிகரித்திருக்கும். கருவுற்றிருக்கும் முதல் சில காலத்தில் அளவுக்கு அதிகமாக வாந்தி எடுப்பதால், எடை சற்றுக்குறையக்கூடும். தாய் நல்ல சத்தான உணவை உட்கொண்டால் குழந்தையின் உடல்நலம் சிறப்பாக இருக்கும்.

முழுமையான 10 மாதங்களுக்குப் பிறகு பிறக்கும் குழந்தை சுமார் 3.2 கிலோகிராம் எடை, 300 மில்லி லிட்டர் இரத்தம், 500 கிராம் புரதச்சத்து, 30 கிராம் சுண்ணாம்புச்சத்து, 15 கிராம் பாஸ்பரஸ் சத்து, 300 முதல் 400 மில்லிகிராம் வரையிலான இரும்புச்சத்து கொண்டதாக இருக்கும். இவையனைத்தும் தாயிடமிருந்து பெறப்பட்டதாகும்.

நிறைமாதக் கர்ப்பிணியாய் இருக்கும்போதும், பிரசவத்திற்குப் பின்னரும், தாய் சாப்பிடும் உணவு சத்துள்ளதாக அமைய வேண்டும். 45 கிலோ கிராம் எடையுள்ள ஒரு தாய் நாளொன்றுக்கு 2,000 கலோரி கொண்ட உணவைச் சாப்பிட வேண்டும்.

வாந்தி எடுக்கும் கர்ப்பிணிகள் கார்போஹைட்ரேட், கொழுப்புச் சத்து ஆகியவற்றைத் தவிர்க்கலாம். ஆனால் புரதச்சத்து மிகுந்த உணவைக் கண்டிப்பாக உண்ண வேண்டும். கருவுற்றிருக்கும் காலத்தில் வைட்டமின் சத்து குறையாமல் பார்த்துக் கொள்வது அவசியம். அப்போதுதான் குழந்தை,தேவையான சத்துடன் பிறக்கும்.

அனைத்து அடிப்படை வைட்டமின் சத்து மிகுந்த உணவையும் உட்கொள்ளலாம். அடிக்கடி குழந்தை பெறுவது, சத்துக் குறைவான உணவு உட்கொள்ளுதல், ஆகியவற்றால் இரத்தச் சோகை ஏற்படக்கூடும். சிறுநீர்க்கோளாறு காரணமாக, இரும்புச்சத்து குறைந்து,சோகை ஏற்படும். எனவே இரும்புச் சத்தை உணவில் சேர்த்துக் கொள்வது அவசியம்.

கருவுற்றிருக்கும் பெண்கள் 'டெடனஸ்' ஏற்படாமல் காத்துக் கொள்வது மிக மிக அவசியமாகும். ஏனெனில் குழந்தைகள் பிரசவத்தின்போது இறந்துவிடுவதற்கு 'டெடனஸ்' காரணமாகிறது.

குழந்தையைக் கவனிப்பது பிரசவத்தின்போதே தொடங்கிவிடுகிறது. அந்தப் பச்சிளம் குழந்தையை மிகக் கவனமாகப் பாதுகாக்க வேண்டும். அது நனைக்கும் துணிகளைக் கவனமாகத் துவைத்து 'ஸ்டெரிலைஸ்' செய்ய வேண்டும். பாலருந்தும் புட்டிகளையும் 'ஸ்டெரிலைஸ்' செய்ய வேண்டும். இவற்றையெல்லாம் மிகுந்த அக்கறையுடன் செய்வது, பெற்றோர்களின் கையில்தான் உள்ளது.

வயது வந்தவர்களைவிடக் குழந்தையின் செயல்பாடு அதிகமாகும். குழந்தையாக இருக்கும்போதுதான் அடிப்படை வளர்ச்சி அதிகமாக இருக்கும். எனவே உடல் எடையில் கிலோ ஒன்றுக்குப் பெரியவர்களைவிட, குழந்தைகளுக்கு அதிகக் கலோரி தேவைப்படுகிறது. குழந்தையின் வளர்ச்சிக்கு அதிகக் கலோரி அவசியமாகும். திசுக்கள் நன்கு செயல்படுவதற்கு நிறையப் புரதச்சத்து அவசியமாகிறது. குழந்தைக்கு அளிக்கப்படும் கலோரிகளில் 14 சதவிகிதம் புரதச்சத்தாக இருக்கலாம்.

தாய்ப்பால்தான் குழந்தைகளுக்கு மிகச்சிறந்த உணவு ஆகும். எனவே கண்டிப்பாக, குறைந்தது குழந்தை பிறந்த முதல் 3 மாதங்களுக்காவது தாய்ப்பால் கொடுக்க வேண்டும்.

குழந்தைக்குத் தேவையான அனைத்துச் சத்துக்களும், தாய்ப்பாலில் தகுந்த அளவில் இயற்கையாகவே அடைந்துள்ளன. தாய்ப்பால், நோயை எதிர்த்துப் போராடும் சக்தியைக் குழந்தைக்கு அளிக்கிறது. குழந்தைகள் தாய்ப்பால் குடிக்கும் காலம் வரை நோய் எதுவும் தாக்காது என்பது பரவலான கருத்தாகும். மேலும் குழந்தைக்குத் தாய்ப்பால் அளிக்கும் போது, பாலுடன் கூடவே பாதுகாப்பு உணர்ச்சியும் அதற்குக் கிடைக்கிறது. இது மனவளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாததாகும்.

குழந்தைக்கு மூன்று மாதங்களான பிறகு பாலுடன் பருப்பு வகைகள், வேகவைத்த காய்கறிகள், பழரசம் போன்றவற்றையும் சிறிதளவு அளிப்பது அவசியம். ஆறாவது மாதத்திற்குப் பிறகு முட்டை கொடுக்கலாம். உணவுக் கட்டுப்பாட்டில் இருந்தால் வேறு வைட்டமின்களோ, தாதுப் பொருட்களோ தேவையில்லை.

சிறுநீர் நன்றாகக் கழிக்கும் வகையில் நிறைய நீராகாரம் அளிக்க வேண்டும். ஒருநாளைக்கு உடல் எடையின் கிலோ ஒன்றுக்கு 150 மில்லி லிட்டர் நீராகாரம் கொடுப்பது மிகவும் அவசியம். வெயில் காலத்தில் மேலும் அதிக நீராகாரம் கொடுக்கலாம். ஒவ்வொரு இரண்டு மணிநேர இடைவெளியில தண்ணீர் கொடுப்பது மிகவும் நல்லது.

உணவை வேளை தவறாமல் அளிக்க வேண்டும். உணவைப் பொறுத்தவரையில் எந்தவித விருப்பு வெறுப்பும் இருக்கக் கூடாது. கட்டாயப்படுத்தித் திணிக்கக்கூடாது. மாறாக தொடர்ந்து வலியுறுத்தி வந்தால் குழந்தைகளே விரும்பிச் சாப்பிடக்கூடும். சாப்பிட மாட்டேன் என்று அடம்பிடிக்கும் குழந்தைகளுக்கும் பசியை உண்டு பண்ண எந்த டாக்டராலும் ஊசியும் இதுவரை தயாரிக்கப்படவில்லை.

குழந்தைகளைக் கவனிப்பதில் 'ஸ்டெரிலைசேசன்' மிகவும் முக்கியமான ஒன்றாகும். முறையாக 'ஸ்டெரிலைஸ்' செய்யாமலிருப்பதால், சளி, வயிற்றுப் போக்கு நோயில் ஆரம்பித்து 'டிப்தீரியா' 'காஸ்ட்ரோ எண்டரிடிஸ்' போன்ற நோய் வரை பாதிக்கக்கூடும். தற்போது ஸ்டெரிலைஸ் செய்யப்பட்ட ஆகாரங்கள் கிடைக்கின்றன. எனவே, பால் புட்டிகள் ஸ்டெரிலைஸ் செய்ய வேண்டியது அவசியமற்றதாகிறது.

தொற்று நோய் குழந்தைகளைப் பரவலாகப் பாதிக்கும். மலச்சிக்கல், டயரியா, வாந்தி போன்ற நோய்கள் குழந்தைகளை அதிகமாகத் தாக்குகின்றன. போதுமான அளவு நீராகாரம் உட்கொள்ளாமல் இருப்பதால் மலச்சிக்கல் ஏற்படுகிறது. குறைந்த அளவு உணவு உட்கொள்வது, செயற்கை உணவு உட்கொள்வது ஆகியவையும் மலச்சிக்கலுக்குக் காரணமாகின்



றன. மலச்சிக்கல் ஏற்பட்டால், உடனே அதிகமான நீரைச் சேர்த்து உணவு வகைகளை அளிக்க வேண்டும்.

பசும்பால் அல்லது எருமைப் பால் குடிக்கும் குழந்தைகளுக்கு மலம் முறையாகக் கழிக்க முடியவில்லை என்றால், பாலைக் குடிப்பதற்கு முன் 5 நிமிட நேரம் காய்ச்சி, பிறகு குடித்தால் மலம் கழிப்பதில் சிரமமிருக்காது. வாழைப்பழம் போன்ற கார்போஹைடிரேட் சத்துக் கொண்ட பொருட்களை உண்பதாலும் மலச்சிக்கல் தீரும்.

பாத்திரங்கள், பால்புட்டிகள், பால், தண்ணீர் ஆகியவற்றை முறையாக ''ஸ்டெர்லைஸ்'' செய்யாமல் இருப்பதால், குழந்தைகளுக்குக் குடலில் தொற்றுநோய் ஏற்படுகின்றன. குழந்தைகளைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் சுவாசத்தில் கேடு விளையக்கூடும். கார்போஹைடிரேட்ஸை அளவுக்கு அதிகமாகச் சேர்த்தால், வயிற்றுப் போக்கு ஏற்படக்கூடும். கொழுப்புச்சத்து அதிகரித்தாலும், குறைந்த அளவு உணவு அளிப்பதாலும் வயிற்றுப் போக்கு ஏற்படும்.

வயிற்றுப்போக்கினால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு நிறையத் தண்ணீர் கொடுக்க வேண்டும். முறையான உணவு அளிப்பதை நிறுத்தி 0.45 சதவிகிதம் சலைன் (தண்ணீரில் உப்பைக் கலந்து) தண்ணீரை அடிக்கடி கொடுக்க வேண்டும். கலோரிகள் அதிகரிப்பதற்காகச் சர்க்கரையும் கொடுக்கலாம். பழரசம் கொடுப்பதால் பொட்டாசியம் சத்து கிடைக்கிறது. குழந்தைகளுக்கு நோய்கள் வராமல் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும். தொண்டைப்புண், கக்குவான், போன்ற நோய்கள் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும், குழந்தை பிறந்த ஓராண்டிற்குள் தடுப்பூசி போடுவது மிகவும் அவசியம். அரசு மருத்துவ மனைகளும் தடுப்பூசிகள் போட எல்லா வசதிகளையும் செய்து தருகின்றன.

குழந்தையின் உடல், பல வளர்ச்சியை நன்கு அறிந்து கொள்ள மாதம் ஒருமுறை, முறையாக, மருத்துவப் பரிசோதனை செய்ய வேண்டும். குழந்தைகள் மற்ற எல்லாக் காலத்தையும்விட, தமது முதலாவது ஆண்டில் மிகத் துரிதமாக வளர்கின்றன என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். எனவே முதலாம் ஆண்டில் குழந்தைகளின் உணவுத் தேவை சரியாகப் பூர்த்தி செய்யப்படுகிறதா என்று பார்ப்பது தாய்மார்களின் கடமையாகும்.

குழந்தைகளைக் கவனிப்பது என்றால் உணவளிப்பது, உடை உடுப்பது, தடுப்பூசி போடுவது, கல்வியறிவு அளிப்பது மட்டுமல்ல, இவையனைத்துக்கும் மேலாக, குழந்தை வளர்ந்த பின் வாழ்வில் எதிர் நோக்கக் கூடிய எல்லாப் பிரச்சனைகளையும் சமாளிக்கும் திறனுள்ளவராகும் வகையில், அவரது தனித் திறமையை வெளிப்படுத்தும் வகையில் வளர்ப்பதே மிகவும் முக்கியமானதாகும். நல்ல கவனத்துடன் பராமரிப்பதால்தான் சிறிய விதை பெரிய மரமாக வளர்கிறது.

# அறிவுச்சுடர்



1. நம் நாட்டில் ரூபாய்,' அஞ்சல் தலை எங்கு தயாரிக்கப்படுகின்றன ?
—நாசிக்கில் உள்ள செக்யூரிட்டி அச்சகத்தில்.

2. மனித மூளையின் எடை என்ன?
—அவன் எடையில் 2%

3. கோடையில் கடிகாரம் மெதுவாகப் போவதேன்?
—வெப்பத்தினால் உலோகம் விரிவடைவதால் பெண்டுலம் நீள்கிறது; அதனால் மெதுவாகப் போகிறது.

4. கார்பன் டைஆக்ஸைடில் (கரியமில வாயு) உள்ள பொருட்கள் என்ன?
—கார்பன் (கரி), பிராணவாயு.

5. தாஜ்மகால் எந்த ஆற்றின் கரையிலுள்ளது?
—யமுனா.

6. இந்தக் காலத்தில் துல்லிய கால அளவீடுகளுக்குப் பயன்படும் கடிகாரங்கள் கூறு:
—அணுவியல் கடிகாரம்,
குவார்ட்ஸ் படிகக் கடிகாரம்.

7. அதிகமாகப் பால் கொடுக்கும் தமிழ்நாட்டிலுள்ள பசுவினம் எது?
—சிந்தி.

8. சூரிய ஒளி பெரிய அளவில் கொடுக்கும் வைட்டமின் எது?
—வைட்டமின் -டி.

9. சமையல் உப்பின் இரசாயனப் பெயர் என்ன?
—சோடியம் குளோரைடு.

10. டர்பன்டைன் தைலம் எந்த மரத்திலிருந்து எடுக்கப்படுகிறது?
—சின்கோனா மரம்.

11. சத்தம் போடாத மிருகம் எது?
—ஒட்டகச் சிவிங்கி.

12. 'ஸ்டாப் பிரஸ்' என்றால் என்ன?
—பத்திரிகைகளில் கடைசி நேரச்செய்திக்காக ஒதுக்கப்படும் இடம்.

13. இங்கிலாந்திலுள்ள மிகப் பழமையான பல்கலைக்கழகம் எது?
—ஆக்ஸ்போர்டு.

14. ரிவால்வாரைக் கண்டு பிடித்தவர் யார்?
—சாமுவேல் கோல்ட்



மாணவர் பக்கம்

15. பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள தூரம் எவ்வளவு?
—156 கோடி கி.மீ.

16. சூரிய குடும்பத்தில் மிக வெப்பமான கோள் எது?
—புதன்.

17. எதைக் கொண்டு ஒரு மரத்தின் வயதைக் கண்டுபிடிப்பது?
—அதன் அடிமரத்தில் காணப்படும் வளையங்களின் எண்ணிக்கையைக் கொண்டு.

18. எறும்புகள் ஒன்றோடொன்று எப்படிப் பேசிக்கொள்கின்றன?
—தலைக்கு முன்னாலுள்ள 'ஆன்டெனா' என்ற கருவியின் மூலமாக.

19.—காந்தியடிகள் வைத்திருந்த மூன்று குரங்குப் பொம்மைகளின் கருத்தென்ன?
—தீயவற்றைப் பார்க்காதே.
தீயவற்றைக் கேட்காதே.
தீயவற்றைப் பேசாதே

20. இறக்கையில்லாத பறவை எது? அது எந்த நாட்டைச் சேர்ந்தது?
—கிவி, நியூஜிலாந்து.

21. தமிழனாகச்சாகவிரும்பிய ஆங்கிலேயர் யார்?
—ஜி.யூ.போப்.





## முயற்சி திருவினையாக்கும்!

—பல்லவன்

பலமுறை திருத்தி வரைந்தால்தான்
பாங்காய் ஓவியம் உருவாகும்!
பலமுறை பாடிப் பயின்றால்தான்
பண்ணுடன் குரலும் வளமாகும்!

பலமுறை நடந்து பார்த்தால்தான்
பாதை புதிதாய் உருவாகும்!
பலமுறை ஓடிப் பார்த்தால்தான்
பந்தயப் பரிசும் கைகூடும்!

பலமுறை படித்துப் பார்த்தால்தான்
பாடம் மனத்தில் பதிவாகும்!
பலமுறை நினைத்துப் பார்த்தால்தான்
படித்தவை கல்மேல் எழுத்தாகும்!

மயங்கி, தயங்கி நிற்காதே!
மனம் தளர்ந்து போகாதே!
முயன்று முயன்று பார்த்தால்தான்
முடிவில் வெற்றி உனைத்தேடும்!

## கணித மேதையின் கணக்குப் புதிர்

கணித மேதை ராமானுஜன் பைகிராப்ட்ஸ் ரோட்டிலுள்ள ஒரு ஓட்டலில் சாப்பிட்டு வந்தார். ஒரு நாள் அவர் சர்வரிடம், ''ஒரு சதுரமான மேஜையில் ஒரு பக்கத்திற்கு 4 பேர்கள் உட்கார்ந்து சாப்பிடுகிறார்கள். நீ தான் அவர்களுக்குப் பரிமாறுகிறாய் என்று வைத்துக்கொள். அப்படியானால் நீ மொத்தம் எத்தனை பேர்களுக்குப் பரிமாறுவாய்?'' என்று கேட்டார். உடனே சர்வர், ''மொத்தம் 16 பேர்களுக்குப் பரிமாறுவேன்'' என்றாராம். ராமானுஜன், "விடை தவறு; மொத்தம் 12 பேர்கள்தான் இருப்பார்கள்!" என்று கூறியதோடு தனது நோட்டுப் புத்தகத்தில் விடைக்கான படமும் போட்டுக் காண்பித்தாராம்!

—ரகமி

விடைக்கான படம்:






## விளையும் பயிர்

மதுரை, விகாசா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில், எட்டாவது படிக்கும் மாணவன், பி. ராதாகிருஷ்ணன், இவன் கல்வியோடு பிறதுறைகளிலும் சிறந்து விளங்குகிறான்.

நூல்களைப் படிப்பதிலும், அதிலும் பள்ளி நூலகம் மட்டுமல்ல, வெளி நூலகங்களையும் பயன்படுத்திக்கொள்வதில் அதிக ஆர்வம் உடையவன். கிடார் மற்றும் மிருதங்கம் வாசிப்பதிலும் திறமையுள்ள இம்மாணவன் மதுரையிலுள்ள பல்வேறு பள்ளிகள் நடத்திய போட்டிகளில் பங்கு கொண்டு பரிசுகள் பெற்றுள்ளான். இந்து, ஏர் இந்தியா நடத்திய பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெற்று, அமெரிக்கா செல்லும் வாய்ப்பைப் பெற்றுள்ள இம்மாணவனை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

# அன்னையின் பெருமை!

சு. ப. சுருளிசுப்பு

அன்னையே உன்தெய்வம்-என்றும்
அவளே ஒளியாவாள்
உன்னையே நினைத்தபடி-தம்பி
உலகினில் வாழ்ந்திடுவாள்!

கண்ணீரில் விழிமூடி-துன்பக்
காலத்தைக் கழித்தாலும்
மண்மீதில் உனைக்கண்டே-மெத்த
மகிழ்வினில் திளைத்திடுவாள்!

காலையில் எழுந்தவுடன்-கல்வி
கற்றிடத் தூண்டிடுவாள்;
சோலையில் மலர்கின்ற-பூக்கள்
சேர்த்திடும் மணத்தைப்போல்

நாளைவரும் வாழ்வினிலும்-உனக்கு
நன்மைகள் செய்திடுவாள்;
வேளைவரும் என்றெண்ணி-தம்பி
வேதனை மறந்திடுவாள்...

# நெல்லின் வளர்ச்சிப் பருவங்கள்

**டாக்டர் மா. சுப்பிரமணியம்**
**தலைவர் மற்றும் பேராசிரியர்**
**நெல் ஆராய்ச்சி நிலையம்,**
**அம்பா சமுத்திரம்**

அரிசி நமது முக்கிய உணவுப் பயிர். தமிழ்நாட்டில் சுமார் 26 லட்சம் எக்டேரில் நெல் பயிர் செய்யப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்னால் அரிசி உற்பத்தியில் பற்றாக்குறையாக இருந்த தமிழ்நாடு தற்பொழுது தன்னிறைவு பெற்று அண்டை மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு அரிசி உற்பத்தியைப் பெருக்கியுள்ளது.

இப்பொழுது, நெல்லில் நாம் பெற்று வரும் அதிக விளைச்சலுக்கு நெல் சாகுபடியில் கண்டுள்ள பலனுள்ள ஆராய்ச்சி முடிவுகள்தான் காரணம். மிக முக்கியமாக உயர் விளைச்சல் இரகங்களும், பயிர்ப் பராமரிப்பு முறைகளும் இதில் பெரும்பங்கு வகிக்கின்றன. தற்பொழுது எக்டேருக்கு 5 டன் என்ற அளவில் விளைச்சல் கண்ட இடங்களில் எக்டேருக்கு 750 கிலோ அதிகமாகப் பெறவும் ஆவன செய்யப்படுகின்றது. இதை எளிதாக அடைய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் நெல் பயிரில் ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட சில முக்கிய நுணுக்கங்களை மனதில் கொண்டு சாகுபடி செய்தால் நெல்பயிரின் விளைச்சலை எளிதாகப் பெருக்கலாம்.

தற்பொழுது சாகுபடியில் இருந்துவரும் உயர்விளைச்சல் இரகங்களெல்லாம் அதற்குத் தகுந்த சூழ்நிலையில் பரிந்துரைக்கப்பட்ட சாகுபடி முறைகளைக் கையாண்டால் எக்டேருக்கு 8 முதல் 10 டன்கள் விளைச்சல் தரக்கூடிய சக்தி கொண்டவை.

நெல்லின் வளர்ச்சிப் பருவத்தை மூன்று முக்கிய காலமாகப் பிரிக்கலாம்.

ஒன்று (Vegetative stage) என்று சொல்லப்படும் இலைப் பருவம்.

இரண்டு (Reproductive stage) என்று சொல்லப்படும் பூக்கும் பருவம்,

மூன்று (Ripening stage) என்று சொல்லப்படும் பயிர் முதிர்ச்சி அடையும் பருவம் என்பனவாகும்.

இலைப்பருவம் என்பது நெல் முளைப்பதிலிருந்து அதிக எண்ணிக்கையில் துளிர் விடும் காலம் வரை ஆகும். பூக்கும் காலம், **பஞ்சுப் பருவம் தொடங்கி பூக்கள் வெளிவரும் காலம் வரை**



**ஆகும். கதிர் முதிர்ச்சி அடையும் பருவம் எனபது கருவுற்றுப் பால் பருவம் தொடங்கி நெல் மணிகள் நன்றாக முதிர்ச்சி அடையும் காலம் வரை ஆகும்.**

நெல்லில் அதிக விளைச்சல் காண, அதிகக் கதிர்விடும் துளிர்கள் இருக்க வேண்டும். அதிக எண்ணிக்கையில் நெல் மணிகளைக் கொண்ட கதிர்கள் இருக்க வேண்டும். மற்றும் நெல் மணிகளின் எடை அதிகமாக இருக்க வேண்டும். இவைகள் ஒன்றுடன் ஒன்று மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டவை.

ஆகவே இவற்றை மனதில் கொண்டு நெல் விளைச்சலைப் பெருக்குவதற்கு ஒவ்வொரு பருவத்திலும் செய்ய வேண்டிய முக்கிய பராமரிப்புகளைக் தெரிந்துகொண்டு நாம் கடைப் பிடிக்க வேண்டும்.

இலைப் பருவத்தில் விதை முளைப்பு, நாற்று நடவு, வேகமாகத் தூர்கட்டுவது மற்றும் அதிகத் தூர்கட்டுவது போன்ற முக்கிய நிலைகள் உள்ளன. இலைப்பருவம்தான் நெல் இரகத்தின் வயதை நிர்ணயம் செய்கின்றது. 105 முதல் 110 நாட்கள் வரை உள்ள குறுகிய கால நெல் இரகங்கள், 130-135 நாட்கள் வரையுள்ள மத்திய கால இரகங்கள், 140-160 நாட்கள் வரையுள்ள, நீண்ட கால இரகங்கள் ஆகியவற்றில் இலைப் பருவகாலம் மாறுபடும்.

உதாரணமாக 105-110 நாட்கள் வயதுடைய ஒரு குறுகிய கால நெல் இரகத்தின் விதைப்பிலிருந்து 45-50 நாட்கள் வரை இலைப்பருவம் ஆகும். இதே போல் 130-135 நாட்கள் வயதுடைய மத்திய கால இரகத்தில் விதைப்பிலிருந்து, 70-80 நாட்கள் வரை இலைப்பருவம் ஆகும். இதேபோன்று 155-160 நாட்கள் கொண்ட நீண்ட கால ரகத்திற்கு இலைப் பருவம் 105-110 நாட்கள் ஆகும். இவைகளில் இடைக்காலமும் அடங்கும். ஆனால் இந்த இரகங்களில் எல்லாம் பஞ்சுப் பருவம் தொடங்கி கதிர் வெளிவரும் காலம் 30 நாட்களிலும் மற்றும் கதிர் முற்றும் பருவம் 30 நாட்களிலும் முடிந்துவிடும்.

இந்த இலைப் பருவ காலத்தில் அதிக விளைச்சல் தருவதற்கு முதல் முக்கியக் காரணியாக 'அதிகக் கதிர்விடும் தூர்களைப்' பெற நெற்பயிரில் நாம் கவனிக் வேண்டிய முக்கியப் பராமரிப்புக் குறிப்புகள் சில உள்ளன. முதலில் காலத்திற்கேற்ற உயர் விளைச்சல் நெல் ரகங்களைத்தேர்ந்தெடுக்க வேண்டும். நல்ல விதையே அதிக விளைச்சலுக்கு ஒரு அடிப்படை. நல்ல முளைப்புத்திறனுள்ள வீரிய நாற்று விடக்கூடிய தன்மையுள்ள விதைகளைவிதைநேர்த்தி செய்து நல்ல முறையில் தயாரிக்கப்பட்ட நாற்றங்காலில் விதைக்கும் போது ஒரு சதுர மீட்டருக்கு 2000 நெல் விதைகளுக்கு மேற்படாமல் இருக்குமாறு விதைக்க வேண்டும். அப்பொழுதுதான் அவைகள் போதுமான இடை வெளியில் வளர்ந்து நல்ல திட காத்திரமான, கொத்தான வேருடன் கூடிய நாற்றுகளாக வளர்வதற்கு ஏதுவாகிறது.



விதைத்ததிலிருந்து முதல் இலை வெளி வருவதற்கு 3-5 நாட்கள் ஆகின்றன. குறுகிய கால இரகங்களை 25 நாட்களில் பறித்தும் மத்திய கால இரகங்களை 30 நாட்களில் பறித்தும் நட வேண்டும். வயலை நல்ல முறையில் தயார் செய்து ஒரே சீராகச் சமப்படுத்தி சிபாரிசு செய்யப்பட்ட உரங்களை அடியுரமாக இட்டு நாற்றுக்களை 2-செ.மீ. ஆழத்தில் நட்டால், நட்ட 5 நாட்களில் நாற்றுக்களில் பச்சை திரும்பி விடும்.

நாற்றுக்களை நடும்பொழுது குறைந்தது 5 இலைகள் கொண்டு வீரியத்துடன் இருக்க வேண்டும். நடும்போது குறுகிய கால இரகங்களைச் சதுர மீட்டருக்கு 66 குத்துக்கள் என்றும், மத்திய கால இரகங்களைச் சதுர மீட்டருக்கு 50 குத்துக்கள் என்றும் உள்ள எண்ணிக்கையில் நடவேண்டும். அப்பொழுதுதான் போதுமான அளவில், அதாவது ஒரு சதுர மீட்டருக்கு 400 கதிர் கிடைக்க ஏதுவாகிறது. இந்தக் கதிர்களின் எண்ணிக்கை 5டன் விளைச்சலுக்கு மிகவும் முக்கியம். நட்ட வயலில் சிறிது அளவு தண்ணீர் தேங்கவைத்து, நட்ட 5 நாட்களில் சிபாரிசு செய்யப்பட்ட களைக்கொல்லி மருந்தை உபயோகித்து களைகளை அழிக்க வேண்டும். களைகளை முளைக்கு முன் அழிப்பதால் நெற்பயிருக்குக் கிடைக்கும் சத்தை களைகள் உறிஞ்ச வாய்ப்பில்லாமல் போய் விடுகிறது.

இதற்கு அடுத்தபடியாக நாற்றுக்கள் தூர்விடும் காலம் ஆரம்பிக்கின்றது. பொதுவாக நாற்றில் 5 இலைகள் வந்தவுடன் முதல் தூர் உண்டாகிறது. 6வது இலை உண்டாகும்பொழுது இரண்டாவது தூர் உண்டாகிறது. இவ்வாறு இலைகளும் தூர்களும் ஒரு குறிப்பிட்ட காலம்வரை வளர்ந்து அதிக எண்ணிக்கையில் இருக்கும். 105-110 நாட்கள் வயதுடைய நெல் இரகங்களில் அதிக தூர் விடும் காலம் நட்ட 25-30 நாட்களில் முடிந்துவிடும்.

அதேபோன்று 130-135 நாட்கள் வயதுடைய மத்திய கால நெல் இரகங்கள் நட்ட 25 முதல் 30 நாட்களுக்குள் அதிக எண்ணிக்கையில் தூர் விடும். அதாவது 30 நாளில் நட்ட ஒரு மத்திய காலப்பயிர் 55 முதல் 60 நாட்களில் அதிகமாகத் தூர் கொண்டிருக்க வேண்டும். அதன்பின் வளரும் தூர்களெல்லாம் கதிர்களைத் தரக்கூடிய தூர்களாக இருக்காது. அல்லது கதிர்கள் குறைந்த எண்ணிக்கையில் நெல் மணிகளைக் கொண்ட கதிர்களாக இருக்கும். அல்லது தூர்கள் உண்டாகிக் காய்ந்துவிடும். ஆகவே குறிப்பிட்ட காலத்திற்குள் அதிகத் தூர் விடும் தன்மையை வளர்க்க நெற்பயிருக்கு வேண்டிய உரமிடல் வேண்டும். இதனால் தழைச்சத்தை நெற்பயிர் உட்கொண்டு அதிக எண்ணிக்கையில்கதிர் தரும் தூர்கள் விட ஏதுவாகிறது.

இயற்கையிலேயே நெல் இரகங்கள் ஒவ்வொன்றும் தனது பாரம்பரியக் குணத்தின்படி அதிகத் தூர் கட்டுபவையாகவோ அல்லது குறைந்த எண்ணிக்கையில் தூர் கட்டுபவைகளாகவோ இருக்கும். பொதுவாக அதிகத் தூர் கட்டும்ரகங்கள்கதிரில் நெல்மணிகளின் எண்ணிக்கையைக் குறைவாகக் கொண்டும் - குறைந்த எண்ணிக்கையில் தூர்களைக் கொண்டிருக்கும் இரகங்கள் கதிரில் அதிக எண்ணிக்கையில் நெல் மணிகளைக் கொண்டும் விளைச்சலை நிர்ணயம் செய்கின்றன. அல்லது கதிரில் குறைந்த எண்ணிக்கையில் நெல்மணிகள் இருந்தால் நெல்மணிகள் எடை அதிகரித்து விளைச்சலை நிர்ணயம் செய்யும் சக்தி கொண்டது. ஆகவே ஒவ்வொரு இரகத்திற்கும் உள்ள அதிகத் தூர்விடும் சக்தியை உணர்ந்து அவைகளை முழுமையாக வெளிக்கொண்டு வர ஆவன செய்ய வேண்டும்.

குறுகிய கால இரகங்களுக்கு நட்ட 15 நாட்களிலேயே சிபாரிசு செய்யப்பட்ட தழைச்சத்தை முதல் மேலுரமாக இட வேண்டும். மத்தியகால இரகங்களுக்கு நட்ட 25 நாளில் சிபாரிசு செய்யப்பட்ட முதல் தழைச்சத்தை இடுவதால் நெற்பயிர் அதிக எண்ணிக்கையில் கதிர்விடும் தூர்களைக் கட்ட ஏதுவாகிறது.

அடுத்த மிக முக்கியமான பருவம் 'பஞ்சுப்பருவமாகும்.' இத்தருணத்தில்தான் இலைப்பருவம் முடிந்து பூக்கள்தோன்றுகின்றன. இதை ஆங்கிலத்தில் Panicle initiation என்று சொல்வார்கள். நெற்பயிரில் அதிக விளைச்சல் பெற இது முக்கியமான தருணமாதலால் மிகவும் கவனமாகப் பராமரிக்கப்பட வேண்டிய காலமிது. இலைப் பருவத்தைப் போலல்லாமல் குறைந்த வயது இரகமானாலும் சரி, மத்திய கால இரகமானாலும் சரி; பஞ்சுப்

## தமிழ்நாட்டில் முதல் மாவட்ட அறிவியல் மையம்

மாணவர்கள் மற்றும் கிராம மக்களிடையே அறிவியல் அறிவைப் பெருக்கும் நோக்கத்துடன் மாவட்ட அறிவியல் மையங்கள் இந்தியா வெங்கும் நிறுவப்பட்டு வருகின்றன. அவற்றில் ஒன்று தமிழ்நாட்டின் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி கொக்கிரகுளத்தில் 5.69 ஏக்கர் பரப்பில் இம்மையம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையத்திற்கான இடத்தைத் தமிழக அரசு இலவசமாக வழங்கி உள்ளது. இம் மையம் அமைக்க ரூ.40 இலட்சம் செலவாகி உள்ளது. இதில் ரூ. 30 இலட்சத்தை மத்திய அரசும், ரூ.10 இலட்சத்தைத் தமிழக அரசும் வழங்கி உள்ளன.

தமிழ்நாட்டின் மாவட்ட அளவிலான முதல் மையம் இதுதான். இந்தியாவில் இதுபோல மேலும் 3 மாவட்ட அறிவியல் மையங்கள் உள்ளன. அதில் ஒன்று மேற்கு வங்க மாநிலம் புருளியாவிலும், மற்றொன்று கர்நாடக மாநிலம் குல்பர்காவிலும், மூன்றாவது மையம் குஜராத் மாநிலம் தரம்பூரிலும் அமைந்துள்ளன.

இம்மையத்தை 1.3.87 அன்று மாண்புமிகு மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு பி வி. நரசிம்மராவ் திறந்து வைத்தார்.

மக்களுக்கு அறிவியலின்பால் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக இதுபோன்ற மையங்கள் திறக்கப்படுகின்றன. நமது பிரச்சினைகளை அறிவியல் துணை கொண்டு தீர்க்க இவை பயன்படும்.

இந்த மையத்துக்கு ரூ.10 இலட்சம் செலவில் நடமாடும் கண்காட்சி வண்டி ஒன்றும் அளிக்கப்பட்டுள்ளது.

---

பருவம் 30 நாட்களில் முடிந்துவிடும். பூத்த 5 அல்லது 10ஆம் நாளில் பூக்களின் எண்ணிக்கை (Spikeler number) நிர்ணயிக்கப்படுகிறது.

அதிகமான பூக்கள் உண்டாவதற்கு நெற்பயிர்களுக்கு வேண்டிய தழைச்சத்தை நாம் இத் தருணத்தில்தான் கொடுக்க வேண்டும். பஞ்சுப் பருவத்தில் போதுமான தழைச்சத்து நிலத்தில் இல்லாவிடில் பூக்களின் எண்ணிக்கை குறைந்து பின்னால் நெல்லில் அதிக விளைச்சல் தர இரண்டாவது காரணமாகிய 'ஒரு கதிரில் வரும் நெல்மணியின் எண்ணிக்கை' குறைந்துவிடும். 105 முதல் 110 நாட்கள் வயதுடைய நெல் இரகங்களுக்கு அதிக எண்ணிக்கையில் தூர் உண்டாகும் காலத்திற்கும், பஞ்சுப் பருவத்திற்கும் உள்ள இடைவெளி மிகவும் குறைவு, அல்லது இரண்டும் ஒரே காலத்தில் நடக்கும். ஆகையால் இரண்டாவது தடவை போடப்படும் தழைச்சத்தை நட்ட 30-35 நாட்களில் இட்டுவிட வேண்டும்.

மத்திய கால இரகங்களுக்கு நட்ட 40 முதல் 45 நாட்களில் சிபாரிசு செய்யப்பட்ட தழைச்சத்தை இரண்டாவது உரமாக இடவேண்டும். இந்த தழைச்சத்துகதிரில் அதிக எண்ணிக்கையில் நெல்மணிகளைத் தரும். குறுவை இரகங்களைப் போலன்றி மத்திய கால இரகங்களுக்கு அதிகத் தூர்கட்டும் காலத்திலிருந்து பஞ்சுப் பருவத்திற்கு சுமார் 20 நாட்கள் இடைவெளி உண்டு. இந்த இடைக்காலம் மத்திய கால இரகங்கள் தன்னை நிலைப்படுத்தி, அதிக விளைச்சலைத் தருவதற்கு வேண்டிய (Physiological activities) என்ற உயிரியல் வினைகளை மேற்கொண்டு பூக்கும் பருவத்திற்கு உதவுகிறது.

பஞ்சுப்பருவம் தொடங்கிய 20 நாட்களில் அதாவது பூக்கள் வெளிவரும் 7-10 நாட்களுக்கு முன்பு பொதிப் பருவத்தில் இருக்கும். நெற்பயிரில் அதிக விளைச்சல் தர இதுவும் ஒரு முக்கியமான காலம் ஆகும். இத்தருணத்தில் தான் ரியாலிஸ் என்ற செல்பிரிவு ஏற்பட்டு மகரந்தத்தூளும், சினை முட்டையும் உருவாகின்றன. இந்தச் சமயத்தில் வேண்டிய உரம் நிலத்தில் இல்லாவிடில் நெற்கதிரில் அதிகமான பதர்கள் ஏற்பட வழி வகுக்கின்றது. ஆகவே தற்பொழுது இடப்படும் தழைச்சத்தை மூன்று முறைகளுக்குப் பதிலாக இத்தருணத்திலும் ஒரு முறை என்று 4 முறை பிரித்துப் போடுவதால் அதிகப் பலன் கிடைக்க வாய்ப்பு உள்ளது என்று ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பஞ்சுப்பருவம் தொடங்கிய 30 நாட்களில் நெற்பூக்கள் கதிரிலிருந்து வெளிவரத்தொடங்குகிறது. இதை (Flowering) அல்லது (Heading) என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். பூக்கள் வெளிவந்த 7 முதல் 10 நாட்களில் மகரந்தச் சேர்க்கை முடிந்து கருவுறுதல் நடக்கும்.

அடுத்து வரும் பருவத்தைக் கதிர்முற்றும் பருவம் (Ripening) என்று சொல்கிறோம். இப்பருவம் பஞ்சுப்பருவம் போன்று, எல்லாவித இரகங்களிலும் 30 நாட்கள் கொண்டதாகும். இப்பருவத்தில், பால்பிடிப்பு, கடின நிலை, மஞ்சள்நிலை,கதிர்முற்றும் நிலை என்ற நிலைகள் உள்ளன. கருவுறுதல் முடிந்தவுடன் ஒரு வார காலத்தில் நெல்மணிகள் பால்பிடிக்கும் நிலைக்கு வருகிறது. இத்தருணத்தில்தான் நெல் விளைச்சலின் மூன்றாவது முக்கிய காரணியான நெல்மணிகளின் எடை நிர்ணயம் செய்யப்படுகிறது. போதுமான அளவு உரம் இல்லையென்றால் நெல்மணிகள் அதிகமாக வளர்ச்சி அடையாமல் எடை குறைந்துவிடும்.

சீனாவில் மேலும் இரண்டு தடவை தழைச்சத்து இடுகிறார்கள். ஒன்று பூக்கள் வெளிவரும் தருணத்திலும் மற்றொன்று கடின பத நிலையிலும் இடுகிறார்கள். இதனால் நெல்மணிகள் எடை அதிகமாவதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இத் தருணத்தில் உரமிடும்போது நெல் செடிகளின் வேர்கள் நல்ல நிலையில் இருந்து சத்துக்களைப் பூமியிலிருந்து கிரகிக்கக்கூடிய நிலையிலும் Flag leaf என்று சொல்லப்படுகின்ற கண்ணாடி இலை கரும்பச்சையாகவும் இருக்க வேண்டும். இதைத் தெரிந்தபிறகே இத்தருணத்தில் நாம் உரமிட வேண்டும். நெல்மணிகள் எடையை அதிகரிக்க சீனாவில் கடைப்பிடிப்பது போன்று பூக்கும் தருணத்திலும் கடின பதத்திலும் இடும் தழைச்சத்தின் நிலையை அறிய வேண்டி தற்பொழுது ஆய்வுகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

பால் பருவத்திற்குப் பிறகு ஒரு வார காலத்தில் நெல்மணிகள் கடினப்பட்டு முற்றி மஞ்சள் நிறமாக மாறி பூக்கள் வெளிவந்த காலத்திலிருந்து 30 நாட்களில் கதிர்கள் முதிர்ச்சி அடைந்து அறுவடைக்குத் தயாராகிறது. இத்தருணத்தில் அறுவடை செய்தால் நெல்லில் இழப்பினைத் தவிர்க்கலாம்.

ஆகவே விவசாயப் பெருமக்களே நெற்பயிரில் கண்டுள்ள பயிர் வளர்ச்சிப் பருவங்களை மனதில்கொண்டு அதற்குண்டான பராமரிப்புமுறைகளைச் சரியான சமயத்தில் கையாண்டு அதிக விளைச்சல் பெறுங்கள்.

# நித்தம் வளரும் நீலகிரி மாவட்டம்

19-ஆம் நூற்றாண்டு வரை அடர்ந்த காடுகளாகவும், பாதை வசதிகளின்றியும் ஓர் இருண்ட பகுதியாக இருந்துவந்த நீலகிரி ஆங்கிலேயர்களின் காலனி ஆட்சியிலும் சுதந்திர இந்தியாவின் சுய ஆட்சியிலும் படிப்படியாக முன்னேறி வந்துள்ளது. இன்று இப்பகுதி ஒரு தனி மாவட்டமாக மலர்ந்திருப்பதுடன் மாவட்டத் தலைமையிடமான உதகமண்டலம் நமது நாட்டின் மலைகளின் ராணியெனச் சிறப்பாக அழைக்கவும் படுகிறது. இமய மலைத் தொடர்களின் பனிச் சிகரங்கள் மட்டும் இங்கு இல்லையே தவிர அத்தொடர்களின் வனப்பு, எழில்மிகு மற்றும்




மருட்சிதரும் காடுகள், அருவிகள் ஆகிய பல இங்கும் உள.

நீலகிரியின் சரித்திரம் தொன்மை வாய்ந்ததாக இருப்பினும் இதனை வெளி உலகிற்கு அறிமுகப்படுத்திய பெருமை 1818-ல் கோவை மாவட்டத்தின் ஆட்சித்தலைவராக இருந்த ஜான் சல்லிவன் அவர்களையே சாரும். அதன் பின்னர் படிப்படியாக முன்னேற்றங்கள் ஏற்பட்டு 1865-ல் இம்மாவட்டத்திற்கு ஆணையாளராக வந்த ப்ரீக்ஸ் என்பவர் முயற்சியால் உதகை நகரம் மற்றும் நீலகிரி மாவட்டம் பொலிவு பெற்றது. பின்னர் 1.2.1882லிருந்து இங்கு மாவட்ட ஆட்சியர்கள் தொடர்ந்து நியமிக்கப்பட்டார்கள். அதன் தொடர்ச்சியாக ஒரு காலத்தில் கோடை காலத்தின்போது சென்னை மாநிலத்தின் தலைமைச் செயலகமே உதகமண்டலத்தில் இயங்கி வந்திருக்கிறது. பழைய காலனி ஆதிக்கத்தின் சுவடுகள் தற்போது அறவே அழிந்து போனாலும் பரவலாகப் பேசப்படுகிற ஆங்கிலமொழி, கடைப்பிடிக்கப்படுகிற ஒரு சில பழக்க வழக்கங்கள் மட்டும் இன்றும் இம்மாவட்டத்தின் பழம் பெருமைக்குச் சான்றாக விளங்குகின்றது.

இட்டத்தட்ட850ஆண்டுக் காலமாக நீலகிரி என்று அழைக்கப்படுகிற இம்மாவட்டத்தில் மக்களின் வாழ்க்கை பெரிதும் காபி மற்றும் தேயிலைத் தோட்டங்களைச் சார்ந்துள்ளது. உருளைக்கிழங்கு விளைச்சல் இவர்களின் விவசாயத்தில் முக்கிய பங்கு

எழில் மிகு நீலமலையின் வரலாற்றையும் வனப்பையும் வளர்ச்சியையும் எடுத்துரைக்கும் கட்டுரை

வகிக்கிறது. வாசனைத் திரவியங்கள், யூகலிப்டஸ் ஆயில், ஜெரேனியம், பீட்ரூட், கேரட், முட்டைக்கோஸ், காலிபிளவர் போன்ற மலைக் காய்கறிகளும் பிளம்ஸ், பேரி, பிச்சீஸ், ஸ்ட்ராபெரி, ஆப்பிள், கமலா ஆரஞ்சு, மங்குஸ்தான் போன்ற பழவகைகளுக்கும் இந்நீலகிரி மாவட்டம் பெயர் பெற்றுள்ளது. 100 ஆண்டு காலம் பழமையான குன்னூர் சிம்ஸ் பூங்காவும் 140 ஆண்டு காலத்தொன்மை வாய்ந்த உதகை தாவரயியல் பூங்காவும், பர்லியாரில் உள்ள பழங்கள் மற்றும் சுவையூட்டும் பயிர்களுக்கான பழப்பண்ணையும் 70 ஆண்டுகளுக்கும் மேலான குன்னூர் பழப்பண்ணையும், நஞ்சநாட்டிலுள்ள உருளைக்கிழங்கு ஆராய்ச்சிப்பண்ணையும் இம்மாவட்டத்தின் காணற்கரிய இடங்களாகும். தொழிற்துறையிலும் இம்மாவட்டம் பின்தங்கிவிடவில்லை. இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை, ஊசித்தொழிற்சாலை, புரோட்டீன் பொருட்கள் தொழிற்சாலை, அரவங்காடு வெடிமருந்துத் தொழிற்சாலை போன்றவைகள் பல ஆண்டுக்காலமாக இம்மாவட்டத்தில் இயங்கி வருகிறது. தற்போது உலகெங்கிலுமிருந்து சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து இழுக்கிற சுற்றுலா இடமாக விளங்கி வருகிற நீலகிரி

மாவட்டத்தின் பாரம்பரியப் பெருமைக்கு உரியவர்கள் இங்குள்ள பழங்குடியினரான தோடர்கள், கோத்தர்கள், குறும்பர்கள், பணியர்கள் மற்றும் இருளர்கள் ஆவார்கள்.

**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

1975-76-ஆம் ஆண்டிலிருந்து நீலகிரி மாவட்டத்துல் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு இதன்கீழ் வேளாண்மை, தோட்டக்கலை, மண்வளப் பாதுகாப்பு, ரசாயன மருந்துகள் தெளித்தல், உரமிடுதல், கூக்கல் பள்ளத்தாக்கில் கமலா ஆரஞ்சு பயிரிடுதல், தோடர்கள் மறுவாழ்வு, மலைவாழ் பழங்குடியினருக்கு உதவிகள் அளித்தல், பால்வளத்திற்கு உதவுதல், வனவளத்தைப் பெருக்குதல், சுற்றுலா இடங்களைப் பராமரித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சுற்றுலாப் பயணிகளைக் கவருகிற வகையில் கொடநாடு, மூக்கூர்தி, விண்டிகேப், தேவர் மலை, கல்லட்டி, நடுவட்டம், அவலாஞ்சி, ரேலியா அணை ஆகிய எட்டு இடங்களில் காட்சி முனைகளை ( View Points ) அமைக்கும் பணிகளும் நடந்து வருகின்றன.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உதகமண்டலத்தில் பழுதடைந்த பாதாளச் சாக்கடைக் குழாய்களைப் புதுப்பித்து கழிவுநீர் உதகை ஏரியில் சேரா வண்ணம் இருக்க, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்காக அரசு ரூ. 14 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

தோட்டக்கலைத்துறைமலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நவம்பர் மாதம் முடிய 279.630 எக்டேர் பரப்பில் தேயிலை நடவு மேற்கொண்டுள்ளது. பல்லாண்டுப் பயிர்கள் அடுக்குப்பயிர்த் திட்டத்தின்கீழ், இதுவரை 415 எக்டேர் பரப்பில் நடவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிறு மற்றும் குறு விவசாயிகளின் தேயிலைத் தோட்டத்தில் 154.670 எக்டேர் பரப்பில் நடவுமேற்கொள்ளப்பட்டுள்ளது. மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 347.36 எகடேர் பரப்பளவில் பணி மேற்கொள்ளப் பட்டு உள்ளது. மண் பரிசோதனைக்கூடத்தில் இதுவரை 2940 மண் மாதிரிகளும் நுண்ணூட்டச் சத்துத் திட்டத்தில் 6686 மண் மாதிரிகளும் நடமாடும் ஆய்வுக் கூடத்தில் 5634 மண் மாதிரிகளும் ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. நடப்பாண்டில் இதுவரை 12 இடங்களில் கிராமக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

**தொழில் வளர்ச்சி**

சர்வதேச சுற்றுலா மையமாக விளங்குகிற இம்மலை மாவட்டம் தொழிற்துறையிலும் பின்தங்கி விடவில்லை. இந்துஸ்தான் போட்டோபிலிம் தொழிற்சாலை ஊசித்தொழிற்சாலை, புரோட்டீன் பொருட்கள் தொழிற்சாலை, அருவங்காடு வெடிமருந்து தொழிற்சாலை, இந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் தொழிற்சாலை போன்றவைகள் பல ஆண்டுக்காலமாக இம்மாவட்டத்தில் இயங்கி வருகிறது. இன்கோசெர்வ், டேன் டீ, இண்ட்கோ ஆகியவைகள் தேயிலைத்தொழில் வளர்ச்சியில் நாட்டிற்கு முன்னோடியாகத் திகழ்கின்றன. சுற்றுலாத் தொழில்களாக ஓட்டல்களும், போக்குவரத்துக்கு உதவுகிற வாகனத் தொழில்களும் இங்கு வளர்ந்து வருகின்றன

நீலகிரி மாவட்டத்தில் 1979ஆம் ஆண்டிலிருந்து ஒரே கூரையின் கீழ் தொழில் முனைவோருக்கு அனைத்து வசதிகளையும் செய்து தருகின்ற வகையில் தொழில் மையம் இயங்கி வருகிறது. இதற்காக 2 இலட்சம் செலவில் கட்டடம் ஒன்று கட்டப்படவுள்ளது. இந்தியப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் இம்மாவட்டத்தில் 500 பேர்கள் தேர்வு செய்யப்பட வேண்டுமென்பது இலக்கு ஆகும். இதுவரை 321 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். உதகை இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலையில் ரூ.170கோடியில் எக்ஸ்ரே பிலிம் உற்பத்திப் பிரிவு அமைக்கப்படவுள்ளது.

**இன்கோசெர்வ்**

சிறு தேயிலைத் தோட்ட உற்பத்தியாளர்களின் கூட்டுறவு





அமைப்பாக இம்மாவட்டத்தில் 'இன்கோசெர்வ்' (INCO SERVE) இயங்கி வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக இன்கோசெர்வ் தேயிலை விற்பனையில் பெருமளவில் முன்னேற்றம் எய்தியுள்ளது. அத்துடன் பாதுகாப்புத் துறையிடமிருந்து 1.30 கோடி மதிப்பில் 650 மெட்ரிக் டன் அளவுக்கு இரண்டு மிகப்பெரிய விற்பனைக்கான ஒப்பந்தத்தினைப் பெற்றுள்ளது. இன்கோசெர்வ் தற்போது ''பிளேஸ்'' மற்றும் ''குறிஞ்சி'' என்ற இரண்டு ரகத் தேயிலைகளை அறிமுகப்படுத்தி விற்பனையில் முன்னேறி உள்ளது. இந்த அமைப்பு தற்போது ''இண்ட்கோ'' தேயிலையை நேரடியாகத் தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான், மேற்கு ஜெர்மனி, ஸ்வீடன், ஸ்விட்சர்லாந்து, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஆராய்ந்து வருகிறது. 1985-86ல் மட்டும் ரூ. 127.90 இலட்சத்திற்குத் தேயிலை விற்பனை செய்துள்ளது. 'இன்கோசெர்வ்' இந்தியாவிற்கே ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது.

### சுற்றுலா

நீலகிரி என்றாலே சுற்றுலா மையம் என்று இன்று அனைவரும் உணர்ந்துள்ளனர். நாளும் பார்க்க வேண்டிய காட்சிமுனைகளும் இயற்கைக் காட்சிகளும் மேலும் சிறந்தவண்ணம் உள்ளன. சமவெளியிலிருந்து 6500 அடி உயரத்தில் அமைந்துள்ள இம் மாவட்டம் இந்தியாவிலேயே சிறந்த கோடைகாலத் தங்குமிடமாகும். உதகை தாவரயியல் பூங்கா, உதகை படகு இல்லம், குழந்தைகள் ஏரிப்பூங்கா, தொட்டபெட்டா சிகரம், கல்லட்டி நீர்வீழ்ச்சி, முதுமலை வனச் சரணாலயம், தெப்பக்காடு யானை முகாம், சிம்ஸ் பூங்கா, எண்ணற்ற காட்சிமுனைகள் ஆகியவை இங்கு சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற முக்கிய இடங்களாகும்.

### அரசு தாவரயியல் பூங்கா

140 ஆண்டுகள் பழமையான உதகமண்டலம் தாவரயியல் பூங்கா இன்றளவிலும் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற முக்கிய இடமாகத் திகழ்கிறது. ஆண்டுதோறும் இங்கு நடத்தப்படுகிற மலர்க்கண்காட்சியும் - South India Kennel Club - நடத்துகிற நாய்க் கண்காட்சியும் அகில இந்தியாவிலிருந்தும் தொடர்ந்து பார்வையாளர்களைக் கவர்ந்து வருகிறது.

### உதகை ஏரியும் படகு இல்லமும் :

1824-ஆம் ஆண்டில் உண்டாக்கப்பட்ட செயற்கை ஏரியும், படகு இல்லமும் தற்போது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால், பராமரிக்கப்பட்டு வருகிறது. சிறுவர் ரயிலும், வீடியோ விளையாட்டுக்களும் சிறுவர் பூங்காவும் இங்கு பயணிகளைக் கவருகிற மற்ற அம்சங்களாகும். இந்த ஏரியில் சாக்கடை நீர் கலப்பதைத் தடுக்கப் புதிய திட்டம் வகுக்கப்பட உள்ளது. 163 ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த ஏரியில் சாக்கடை மண் சேருதல் காரணமாக ஆண்டுக்கு 0.37 எக்டேர் மண்ணால் மூடப்பட்டுள்ளது. தற்போது ஊட்டி ஏரியின் சுற்றளவு 12.1 கிலோ மீட்டராக உள்ளது. ஊட்டி ஏரியைத் தூர் எடுத்து மண்மூடாமல் பாதுகாத்தல், சாக்கடை நீர் கலக்காமல் இருத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு, ஏரியின் அழகைப் பாதுகாக்கும் வகையில் போர்க்கால நடவடிக்கை மேற்கொள்ளத் திட்டம் தயாரிக்கின்ற பணியில் சென்னைப் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், மண்பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவை ஈடுபட்டுள்ளன. உதகை படகு இல்லத்தில் தற்போதுள்ள 66 படகுகளுடன் இன்னும் 26 படகுகள் விட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. உதகை ஏரி அருகே 22 ஏக்கர் பரப்பில் ரூ. 35 லட்சம் செலவில் மான்கள் பூங்கா அமைக்கப்படவுள்ளது.

### கயற்றுப் பாலம் (Rope way)

ஊட்டியில் உல்லாசப் பயணிகளைக் கவரும்வகையில் கயற்றுப் பாலம் அமைக்கப்படவுள்ளது. இது தமிழ்நாட்டில் முதல் தட

வையாக அமைக்கப்படுகிறது. இரும்புக் கம்பிகளால் ஆன இப் பாலம் 700 மீட்டர் நீளத்திற்கு 15 அடி உயரத்தில் அமைக் கப்படும். ஊட்டி சிறுவர் பூங்கா விலிருந்து படகு இல்லம் வரை இப்பாலம் அமைக்கப்படவுள் ளது. இதில் 200 முதல் 400 பயணிகள் ஊட்டியின் எழில்மிகு காட்சிகளைக் கண்டு களித்துக் கொண்டே செல்லலாம். இக் கயிறுப் பாலம் அமைக்க ரூ.75 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**முதுமலைச் சரணாலயம்**

கேரளா, கர்னாடகா எல்லை களை அணைத்துக்கொண்டு 1000 அடி உயரத்தில் 321 சதுர கிலோ மீட்டர் பரப்பில் அமைந் துள்ள முதுமலைக் காடுகளில் வனச்சரணாலயம் அமைக்கப் பட்டுள்ளது. யானைக் கூட்டங் களும் காட்டெருமைகளும் நிரம் பித் திரிகின்ற இக்காட்டில் சிறுத்தைப் புலி, புலி, நரி, நான்கு கொம்புகள் கொண்ட மான்கள், காட்டுப்பறவை, நாகபாம்பு, கீரிகள், மலைப்பாம்பு, பறவை யினங்களையும் மயில், மைனா, முயல் ஆகியவைகளையும் காண லாம். இவை தவிர தெப்பக் காடு யானை முகாமும் காணற் கரிய காட்சியாகும்.

**தொட்டபெட்டா:**

நீலகிரி மலைத்தொடரில் 2623 மீட்டர் உயரத்தில் அமைந் துள்ள தொட்டபெட்டா மலைச் சிகரமும் அதில் அமைக்கப்பட் டுள்ள தொலைக்காட்சி நிலைய மும் இங்குள்ள முக்கியமான சுற்றுலா இடமாகும். கேத்தி பள்ளத்தாக்குக் காட்சியும் வென் லாக் டவுன்ஸ், லேம்ஸ் ராக், லேடி கேனிங் சீட், டோல்ஃபின்பி நோஸ் ஆகிய காட்சிமுனைகளும், அவலாஞ்சி, மூக்கூர்தி சிகரம், தவளை மலை மற்றும் பைக்காரா அணை ஆகியவைகளும் சுற்று லாப் பயணிகளின் மனங்கவரும் இடங்களாகும்.

சுற்றுலாப் பயணிகள் வன விலங்குகளைக் கண்டு களிக்க முதுமலைக்காட்டில் 43 அடி உயரமுள்ள பார்வைக்கூடம் ஒன்று ரூ.1.32 இலட்சம் செலவில் வனத்துறையால் கட்டி முடிக்கப் பட்டுள்ளது. உதகை ஏரியில் ஆழம் அதிகம் இல்லாத இடத் தில் மிதக்கும் படகு ஓட்டல் அமைக்கவும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. சுற் றுலா மற்றும் பொருளாதாரத் திட்ட வல்லுநர் டாக்டர் ஜெ. கிருஷ்ணசாமி அவர்களின் மூலம் முதுமலையினை அனைத்துத் துறைகளின் மூலம் மேம்பாடு

## முதலமைச்சர் பரிசளித்த யானைக்குட்டி!



பம்பாய்க்கு அருகிலுள்ள திருச் செம்பூர் செடா நகர் சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள், பெண் யானைக்குட்டி ஒன்றைப் பரிசாக வழங்கியுள்ளார்.

மாண்புமிகு மகாராஷ்டிர வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு சுப்பிரமணியம் அவர்களது வேண்டுகோளுக்கிணங்க, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இப்பரிசினை வழங்கி னார்.

தமிழக அரசின் சார்பில் வழங் கப்பட்ட இந்த அன்பளிப்புக்கு நன்றி தெரிவித்து, மாண்புமிகு மகாராஷ்டிர வீட்டுவசதித்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி. வி. சுவாமிநாதன் அவர்களுக்கு 4.3.87 அன்று கடிதம் எழுதி யுள்ளார். அதில் -

இந்த நன்கொடையை அளித்ததற்கு மகாராஷ்டிர அரசும், மக்களும் என்றும் மறக்கமாட்டார்கள் என்றும், பம்பாய் வாழ் தமிழர்கள், பக்தர்கள் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் பல்லாண்டு வாழப் பிரார்த் திப்பதாக முதல்வருக்குத் தெரிவிக்குமாறும் குறிப்பிட் டுள்ளார்.

செய்ய ரூ. 28 கோடி செலவி லான ஒரு பெருந்திட்டம் தயா ரிக்கப்பட்டுள்ளது. மாவட்டச் சுற்றுலா மையங்கள் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் கொடநாடு காட்சிமுனை மேம்படுத்தப்பட வுள்ளது.

**வாயுதூத் - குட்டிவிமானப் போக்குவரத்து:**

உதகமண்டலம் ஒரு சர்வதேச சுற்றுலா மையமாகும். இங்கு வரும் வெளிநாட்டுப் பயணி களின் மூலம் அந்நியச்செலாவணி பெருகுகிறது. இவர்களின் தேவைக்கு ஏற்ற விமான நிலை யத்தைப் பெரிய அளவில் பூர்த்தி செய்ய முடியாவிட்டாலும் 15 பேர் பயணம் செய்யத்தக்க வாயு தூத் விமானம் போக்குவரத்துக் கும், குட்டி விமான நிலையம் ஏற்படுத்தவும் உதகமண்டலத் தில் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

**புதிய விளையாட்டு அரங்கம்:**

உதகையில் புதிதாக விளை யாட்டு அரங்கம் கட்ட தமிழக அரசு ரூ 32 லட்சம் நிதி ஒதுக் கீடு செய்துள்ளது. பிரீக்ஸ் பள் ளிக்கூட மைதானத்தில் இந்த விளையாட்டு அரங்கம் கட்டப் படும். 5.6 ஏக்கர் பரப்பில் அமையும் இவ்வரங்கு கட்ட ரூ 77 இலட்சம் செலவாகும். கட்டு மானப்பணி விரைவில் துவங்க வுள்ளது. உதகையில் மாவட்ட நலனுக்காக ஒரு டெலிவிஷன் டிரான்ஸ்மிட்டர் அமைக்கும் முயற்சிகளும் 1988-89-ல் பண் பலை வானொலி ஒலிபரப்பு நிலையம் அமைக்கும் முயற்சி களும் மேற்கொள்ளப்பட்டுள் ளன.

நீலகிரி மக்களின் வருமானத் தைப் பெருக்கவும், இறைச்சி மற்றும் கம்பளத்துக்காகவும் முயல்கள் வளர்க்கும் திட்டம் இம்மாவட்டத்தில் அமல்படுத் தப்படவுள்ளது. தொட்டபெட் டாவில் அமைந்திருப்பதுபோல அணிக்கல்பெட்டா என்ற இடத் திலும் கரடிமலை என்ற இடத் திலும் காட்சிமுனைகளை ஏற் படுத்தவும் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

**கோடை விழா:**

இவ்வாண்டு மே மாத சீசனைச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் ஒரு மாதத்திற்குக் கோடை விழா ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. சீசனையொட்டி, கார், மோட்டார் சைக்கிள் பந் தயம், துப்பாக்கி சுடும் பந்தயம் ஆகியவை நடத்தப்படும். உதகை குதிரைப் பந்தய மைதானத்தில் வெல்லிங்டன் ராணுவக் கல்லூரி குதிரைகளின் சாகச நிகழ்ச்சியும் நடத்தப்படும். முதல் தடவையாக கோத்தகிரியில் மே முதல் வாரம் ஒருநாள் மலர்க்கண்காட்சியும் 3 நாள் கோடைவிழா கலை நிகழ்ச் சியும் நடத்தப்படவுள்ளன.



# சென்னைக் குடிநீர்

## அச்சமுறத் தேவையில்லை

கடந்த 1986-ம் வருடம், வடகிழக்கு பருவமழை பொய்த்ததனால் சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்க, தண்ணீர் சேமித்து வைக்கும் மூன்று நீர்த்தேக்கங்களான பூண்டி, சோழவரம், செங்குன்றம் ஆகியவையின் முழு அளவான 6,483 கன அடி, 1.1.1987 அன்று 1,493 கன அடியாகக் குறைந்துள்ளது. 1.1.1986ல் இது 5,369 கன அடியாக இருந்தது. 1.1.1983ல் 1,251 கன அடியாக இருந்தது. இந்நிலை சற்றுக் கடுமையானதென்றாலும், சென்னை நகர மக்களுக்கு, குடிநீர் வழங்கும் முறையைச் சரிவர முறைமைப்படுத்த தமிழக அரசும், சென்னைக் குடிநீர் வாரியமும் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

பூண்டி நீர்த்தேக்கத்திலுள்ள நீர் அனைத்தும் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு விட்டது. சோழவரம் நீர்த் தேக்கத்திலுள்ள நீரின் படுக்கை அளவுக்கு மேலுள்ள தண்ணீர் ஏற்கனவே எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் படுக்கை அளவுக்கு கீழுள்ள நீர் மூன்று இராட்சச இயந்திரங்களைக் கொண்டு இறைக்கப்பட்டு வருகின்றது. செங்குன்றம், நீர்த்தேக்கத்தில் தற்போது ஈர்ப்பு முறையில் நீர் எடுக்கப்பட்டு வருகின்றது. ஈர்ப்பு ஓட்டம் நின்றவுடன், இராட்சச நீரிறைக்கும் இயந்திரங்கள் மூலம் நீரிறைக்கப்படுகின்றது.

மேல் பரப்பு நீர்க் குறைவை சமாளிக்க சென்னைக்குடிநீர் வாரியம் அரசின் வழிகாட்டுதலுடன், நிலத்தடி நீரைச் சென்னை நகர உபயோகத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. தாமரைப்பாக்கம் நில நீர்த்தளத்தில், எட்டு புதிய ஆழ்துளைக் கிணறுகள் தூர்த்துப்போன கிணறுகளுக்குப் பதிலாக எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் பதினாறு கிணறுகள் தாமரைப்பாக்கம், பஞ்செட்டி நிலநீர்த்தளங்களில் தோண்டப்படவுள்ளன.

ஒரு நாளைக்குச் சென்னை நகருக்கு குடிநீர் 42 மில்லியன் காலன் அளவு வழங்கப்படுகிறது. அதுகீழ்க்கண்ட இடங்களிலிருந்து, கீழ்கண்ட அளவுகளில் வழங்கப்படுகிறது.

| | மில்லியன்காலன் |
|---|---|
| செங்குன்றம் மேல்மட்டம் மூலமாக | 31 |
| தாமரைப்பாக்கம் நிலத்தடிநீர் மூலமாகவும், பூண்டி நிலநீர்த்தளம் மூலமாகவும் | 9 |
| பெசண்ட் நகர், திருவான்மியூர், நீலன் கரை மற்றும் போரூர் தொட்டிகளிலிருந்து நிலத்தடிநீர் மூலமாக | 42 |

நிலத்தடிநீர் அளவு, அதிக அளவுக்கு இறைக்கப்படாமல் முறையாக கண்காணிக்கப்படுகிறது. பூண்டி, தாமரைப்பாக்கம் நீர்ப் படுகை, கன்னிகைப்பேர் ஆகிய இடங்களிலுள்ள புதிய நிலநீர்த்தளங்களிலிருந்து பனிரெண்டு மில்லியன் காலன் நீரிறைக்கும் திட்டத்திற்கு தமிழக அரசு 15 கோடி ரூபாய் அளித்துள்ளது. இதற்கான பணிகள் விரைவாக நடைபெறுகின்றன. முதல் மூன்று மில்லியன் காலன் நீர், மார்ச் மாத இறுதியில் கிடைக்கும், மீதமுள்ள அளவு, படிப்படியாக கிடைக்கும்.

சென்னை நகரத்திற்குள் மற்ற உபயோகத்திற்காக நிலத்தடிநீர் எடுக்கப்படுகிறது. சென்னை நகரம் முழுமையிலும், 3,631 ஆழ்துளைக்கிணறுகள், கை இறைப்பான்கள் (Hand Pump) உள்ளன. இவைகள் புதுப்பிக்கப்படுகின்றன. தண்ணீர் கிடைப்பதில் பிரச்சினை உள்ள இடங்களில் 1,500 ஆழமான ஆழ்துளைக் கிணறுகள் எடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இப்பணி மார்ச் மாதம் 20-ம் தேதி தொடங்கி 31-ம் தேதிக்குள் முடிவடைந்து விடும். 1,121 இந்தியா மார்க்-2 நீரிறைப்பான்கள் உள்ளன. பழுதடைந்த நீரிறைப்பான்கள் பழுதுபார்க்கப்பட்டு, மேலும் 120 இந்தியா மார்க்-2 நீரிறைப்பான்கள் நிறுவ ஏற்பாடு செய்யப்படுகிறது. பல்வேறு நிவாரணப்பணியின் முதல் பகுதிக்காக, 163 லட்சம் ரூபாய் தமிழக அரசால் சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை நகரில் 808 இரும்புத் தொட்டிகள் வைக்கப்பட்டு, குறிப்பாக குடிசைப் பகுதிகளில் வைக்கப்பட்டு, லாரிகள் மூலம் குடிநீர் நிரப்பப்படுகின்றன. மேலும் 200 இரும்புத் தொட்டிகள் தயாராக வைக்கப்பட்டு, தேவையான தருணத்தில் நிறுவப்படும்.

சென்னைக்குடிநீர் வாரியத் தலைமை அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தப்பட்டு, பொதுமக்களின் புகார்களை தொலைபேசி மூலம் பெற்று, சம்மந்தப்பட்ட கள அலுவலர்களுக்கு உடனடியாகத் தெரிவிக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. பெறப்படும் புகார்கள் உடனடியாக சம்பந்தப்பட்ட கள அலுவலர்களுக்குத் தெரிவிக்கவும், சென்னையிலிருந்து வெகுதொலைவிலுள்ள நிலநீர்த்தளங்களில் நீரிறைத்தலுடன் ஒத்துழைக்கவும், மார்ச் மாதம் இறுதிக்குள் கம்பியில்லாத் தொலைபேசி முறையை நிறுவ எண்ணமிடப்பட்டுள்ளது.

இப்படிப் பல்வேறு சாத்தியமான வழிகளில் சென்னை நகர மக்களுக்கு குடிநீர் வழங்க, சென்னை குடிநீர் வாரியம் எடுத்து வருவதால், சென்னை நகர மக்கள் அச்சமுறத் தேவையில்லை.

# மூலிகையில் சிறந்த கரிசலாங்கண்ணி

நமது இந்திய நாடெங்கும் பரந்து காணப்படுகின்ற மூலிகைகளில் சிறந்தது கரிசலாங்கண்ணிக் கீரை. இது இமயமலைச் சரிவுகளிலும் அமோகமாக வளர்ந்து காணப்படுவதைப் பயிரியல் வல்லுநர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

மூலிகை உலகத்திலே இக்கீரைக்குப் பெருமை அதிகம், சித்தர் வடிவத்தில் வந்த இராமலிங்க அடிகளார்கூட இதைப் பற்றிச் சிறப்பித்திருக்கிறார். சங்க இலக்கியங்களில் ஒன்றாகிய மலைபடுகடாம் கையாந்தகரை என்று கூறும்.

தமிழ் மூலிகை சாத்திரத்தில் இதற்குப் பல பெயர்களுண்டு. அவையாவன: கரிசலாங்கண்ணி, கரிசணாங்கண்ணி, கையார்ந்த கீரை, கரிப்பான், பிருங்கராஜம், பொற்கொடி, பொற்பாவை,

கரிசலாங்கண்ணி



பொற்றிலைப்பாவை, கரிசாலை, கைகேசி.

கரிப்பான் என்ற கரிசலாங்கண்ணிக்கீரை காயசித்தி நல்கும் உயர்ந்த மூலிகையாகும். இது உடலுக்குப் பொன் வடிவத்தையும், யானையை ஒத்த வலிமையையும் அளிக்கக் கூடியது; மருத்துவ மகிமை அதிகமாக உள்ளது எனச் சித்த வைத்திய மூதாதையர்கள் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். என்றாலும், பெருமை மிகுந்த இது, மருந்தாகப் பயன்படுகிறது. இதன் இலை, தண்டு, வேர் அனைத்துமே மருத்துவத்திற்கு உரியது.

**பொற்றலை கையாந்த கரை**

திருவுண்டாம் ஞானத்
தெளிவுண்டா மேலை
யுருவுண்டா முள்ளதெல்லா
முண்டாங்-குருவுண்டாம்
பொன்னாகத் தன்னாகம்
பொற்றலைக்கை யாந்தகரை
தன்னாகத் தின்றாகத் தான்

பொருள் : பொற்றலைக் கையானை (மஞ்சள் கரிசாலை) கறியாகச் செய்து உண்ண, அறிவும் தெளிவும் திருவும்சேரும்.

**தீரும் வியாதி**

மூலநோய், தேள்கடி, மயக்கம், பித்த எரிச்சல், நீர்க்கட்டு, மலக்கட்டு, காசம், இளைப்பு, பாண்டு, சோகை, கல்லீரல்நோய், யானைக்கால் நோய், காய்ச்சல், வீக்கம், கட்டி, தொழுநோய், காதுவலி, ஜலதோஷம், விஷப் பூச்சிக்கடி, கண்காசம், இருமல், காமாலை, தலைப்பொடுகு, இரத்தப்போக்கு, கடுப்பு, உடல் கனம் ஆகிய நோய்கள் இதனால் நீங்குவதுடன் இரத்தமும் சுத்தியாகும்.

**சோகை, மயக்கம், பித்த எரிச்சல், நீர்க்கட்டு, மலக்கட்டு இவை நீங்குவதற்கு...**

தேவையான, கரிசலாங்கண்ணி, குப்பைமேனி, செருப்படைஇலை ஆகிய இம்மூன்று வகையான இலைகளையும் ஒரே சமமாக எடுத்து வெயிலில் நன்கு காய வைத்தால் சருகுபோல் ஆகிவிடும். இதை எடுத்து அம்மியில் வைத்துத் தட்டித் தூள் செய்து மெல்லிய துணியில் சலித்து (வடிகட்டி) வைத்துக்கொண்டு, அத்தூளில் இரண்டு கிராம் அளவு எடுத்து அதே அளவு சர்க்கரையைச் சேர்த்துக் கலந்து, வாயில் போட்டு வெந்நீர் அருந்தவும். தொடர்ந்து அரைமண்டலம் (24 நாள்) அருந்திவர, சோகை சம்பந்தமான மேற்கண்ட பிணிகள் நீங்கி நலம் பெறும்.

ஏ. ஆர். என். துரைராஜ்

**காசம்-இளைப்பு நீங்க ...**

தேவையான கரிசலாங்கண்ணி இலையைக்கொண்டுவந்துசுத்தம் பார்த்து, வெயிலில் காயவைத்து, நன்கு சருகு போல்காய்ந்த பிறகு அதை எடுத்து, அம்மியில் வைத்துத் தட்டி, தூள் செய்து, 140 கிராம் அளவு எடுத்துக் கொள்ள வேண்டும். பின், மெல்லியதுணியில் சலித்து வைத்துக் கொள்ளவும். பிறகு அரிசி, திப்பிலி 35 கிராம் எடுத்து இடித்துத் தூள் செய்து அதையும் மெல்லிய துணியில் போட்டுச் சலித்து, இந்த இரண்டையும் கலந்து சேமித்து வைத்துக்கொண்டு, தேவையானபோது 5 கிராம் சூரணம் வீதம் இரு வேளை, தேனில்கலந்து சாப்பிட்டுவரவும். 20 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வரும் பட்சத்தில் காசம், இளைப்பு ஆகியவை நீங்கி நலம் விளையும்.

குறிப்பு: புளி சேர்க்கக்கூடாது; மீன், கருவாடு நீக்க வேண்டும்.

**பாண்டு-சோகை நீங்க ...**

தேவையான கரிசலாங்கண்ணி இலையைக்கொண்டு வந்துசுத்தம் பார்த்து வெயிலில் நன்கு காய வைத்து, சருகுபோல் ஆனபிறகு எடுத்து அம்மியில் வைத்துத் தட்டிச் சூரணம் செய்து இச்சூரணத்தை அயச்செந்தூரத்திற்கு அனுபானமாகக் கொள்ள மேற்கண்ட பிணிகள் நீங்கும்.

**காமாலை நீங்க ...,**

தேவைப்பட்ட கரிசலாங்கண்ணி இலையைக்கொண்டு வந்து சுத்தம் பார்த்து அம்மியில் வைத்து, நீர்விட்டு, இடித்து, சுமார் 25 கிராம் சாறெடுத்து, காலையில் மட்டும் அருந்து வரும் பட்சத்தில் காமாலை நீங்கிச் சுகம் பெறலாம்.

குறிப்பு : அவ்வப்போது புதிதாகச் சாறெடுத்துப் பயன்படுத்த வேண்டும்.

**யானைக்கால் நீங்க ...,**

தேவைப்பட்ட கரிசாலையைக் கொண்டு வந்து சுத்தம் பார்த்து, அம்மியில் வைத்து, நல்லெண்ணெய் விட்டு அரைத்து, அவ்விழுதை மேலுக்குப் பூசலாம். மூத்திரத்தில் ரத்தம் வர நேர்ந்தால் இதனுடைய இலைச்சாறு 100 மி.லி. வீதம் தினம் 2 வேளை கொடுக்க, சுகம் காணும்.

**உடல் தோல் பொன் நிறம் காண...**

தேவைப்பட்ட கரிசாலை இலையைக்கொண்டுவந்துசுத்தம் பார்த்து அம்மியில் வைத்து, நீர் விட்டு அரைத்து, அவ்விழுதை உடலில் தேய்த்துக் குளிக்க, நாளடைவில் தோல் பொன்னிறமாகமாகும்.

**கல்லீரலில் சுருக்கம் ஏற்படுவது நீங்கவும் பசி இல்லாமை குணமாகவும்..**

மஞ்சள் கரிசலாங்கண்ணி கீரையைச்சுத்தம்பார்த்து, பிறகு, சமையலில் பருப்புடன் சேர்த்துப் பொரியல் செய்து அல்லது கடைந்து, முதல் சாதத்தில் போட்டுச் சிறிது நெய்விட்டுப் பகல்உணவில் சாப்பிடவேண்டும். 2 வாரத்திற்கு இது மாதிரி அனுதினமும் சாப்பிட, மேற்கண்ட பிணி நீங்கி, பசி நன்கு எடுக்கும்

குறிப்பு : இக்கீரையை இரவில் சாப்பிடக்கூடாது.

**காய்ச்சல்-வீக்கம்-கட்டி- தொழுநோய் இவை நீங்க..**

தேவைப்பட்ட, கரிசலாங்கண்ணி இலையினுடைய சாறு ஒரு பங்கும், ஆமணக்கு நெய் ஒரு பங்கும் கலந்து, கெடாயில் ஊற்றி, அதில் கொஞ்சம் வெள்ளைப் பூண்டு சேர்த்து, அடுப்பில் வைத்து எரித்து, பதத்தில் வந்த பிறகு இறக்கி, வடிகட்டி, பாட்டிலில் சேமித்து வைத்துக்கொண்டு, வேளை ஒன்றிற்கு 35 கிராம் வீதம் அருந்த, மேற்கண்ட பிணிகள் நீங்கி நலம் பெருகும்.

**மாலையில் கண் பார்வை மங்கலாக காண்பவர்கள் நலம் பெற..**

தேவையான, மஞ்சள் கரிசாலை இலையையும் முசுமுசுக்கை இலையையும் சமமாக எடுத்துச் சுத்தம் பார்த்து அம்மியில் வைத்துச் சிறிது நீர்விட்டு அரைத்து, எலுமிச்சை அளவு எடுத்து, உருட்டி, அதிகாலையில் பல் துலக்கிய பிறகு உள்ளுக்குச் சாப்பிட்டு 200 மி.லி. பால் அருந்தவும், இந்த விதமாக அருந்தி வரும் பட்சத்தில் சுமார் 3 வாரத்தில் கண்பார்வை சீர் பெறும்.

**காதுவலி ஜலதோஷம் நீங்க..**

கரிசாலைச் சாறு இரண்டு துளி எடுத்துக்கொண்டு இரண்டு கிராம் தேனில் கலந்துகொடுக்க, கைக் குழந்தைகளுக்கு உண்டாகும் ஜலதோஷம்(அதாவது 'நீர்க் கோவை) நீங்கும். மற்றும் வலிக்கும் காதுகளில் இரண்டு சொட்டு இலைச் சாற்றை விட, காதுவலி நீங்கும்.



**சேத்தும பாண்டு குணமாக..,**

தேவைப்பட்ட கரிசலாங்கண்ணி இலையும், மிளகும் சேர்த்து அம்மியில் வைத்து அரைத்து, புன்னைக்காயளவு எடுத்து, ஐந்து நாட்கள் காலை-மாலை உட்கொண்டு வந்தால் சேத்தும பாண்டு நீங்கும்.

பத்தியம் : கருவாடு, மீன், அகத்திக்கீரை, சிறுகீரை, பறங்கிக்காய் நீக்கவும்.

**பற்களின் மஞ்சள் நிறம் நீங்க...**

தினமும் அதிகாலையில் கரிசலாங்கண்ணியின் வேரால் பல் துலக்கவும். பல் துலக்கிய பிறகு, இக்கீரையை 2 பிடி எடுத்து மென்று தின்று ஒரு டம்ளர் தண்ணீர் அருந்தவும். நாளடைவில் பற்களில் மஞ்சள் நிறக் கறை படிவது மறைந்தேபோகும்.

**விஷப் பூச்சிகள் தீண்டினால்...**

தேவைப்பட்ட, கரிசலாங்கண்ணி இலையைக் கொண்டு வந்து சுத்தம் பார்த்தபின், அம்மியில் வைத்து அரைத்து நெல்லிக்காய் அளவு எடுத்து, 200 மி.லி. வெள்ளாட்டுப் பாலில் கலந்து 3 நாள் கொடுக்க, மேற்படி விஷம் மாறி நலமாகும்.

**கண் காசம், காது நோய் நீங்க...**

கரிசலாங்கண்ணிச் சாறு 400 மி.லி., நெல்லிக்காய்ச் சாறு 400 மி.லி., நல்லெண்ணெய் 400 மி.லி. இவை அனைத்தும் கலந்து ஒரு கெடாயில் ஊற்றி, பிறகு அதிமதுரம் 7 கிராம் எடுத்து அரைத்து, இதையும் கெடாயில் போட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சிப் பதமாய் வந்த பிறகு வடிகட்டித் தலை முழுக, நாளடைவில் மேற்படி பிணிகள் நீங்கும்.

**இருமல் விலக...**

இலையின் சாறு 100 மி.லி., நல்லெண்ணெய் 100 மி.லி. இந்த இரண்டையும் கலந்து கெடாயில் ஊற்றி அடுப்பில் வைத்துச் சிறு தீயாக எரித்து, பக்குவத்துடன் எடுத்து வடித்து, 2 கிராம் அளவு காலை - மாலை இருவேளை அருந்திவர, இருமல் நோய் நீங்கும்.

**நரைமுடி கறுக்க...**

கரிசலாங்கண்ணி இலை 50 கிராம், கொட்டைக் கரந்தையின் இலை 50 கிராம் இவை இரண்டையும் வெயிலில் காய வைத்துச் சருகுபோல் ஆகிய பிறகுஎடுத்து, அம்மியில் வைத்துத் தட்டி, சூரணம் செய்து மெல்லிய துணியில் சலித்து (அல்லது வடிகட்டி ஒரு பாட்டிலில் சேமித்து வைத்துக் கொண்டு 2 கிராம் சூரணத்துடன் தேக்கரண்டி அளவு தேனைக் கலந்து சாப்பிட வேண்டும். தொடர்ந்து ஒரு மண்டலம் (40 நாள்) சாப்பிட்டு வர நரைமுடி படிப்படியாகக் கருநிறம் அடையும்.

**தலைப் பொடுகு நீங்க...**
**(தைல முறை)**

கரிசலாங்கண்ணி இலை, அருகம்புல் இவைகளைத் தனித்தனியாக எடுத்து இடித்து ஒவ்வொன்றும் 200 மி.லி. வீதம் சாறு எடுத்துக் கொள்ள வேண்டும். பின், தேங்காயெண்ணெய் 200 மி.லி. எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு முற்றிய தேங்காயாகப் பார்த்து எடுத்து, நன்கு திருகி அதன் பால் 200 மி.லி. எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு ஒரு கெடாயில், (1) சாறு வகைகள் (2) எண்ணெய் (3) தேங்காய்ப்பால் ஆகிய இம்மூன்றையும் ஊற்றிக் கலந்து அடுப்பில் வைத்துக் காய்ச்ச வேண்டும். சாறு சுண்டி, நீர் சத்தம் அடங்கி, மருந்துகள் சிவந்து வரும் சமயம் கெடாயை அடுப்பிலிருந்து இறக்கிக் கீழே வைத்து எண்ணெய்யை ஆறவிட வேண்டும். ஆறிய பின் வடிகட்டி ஒரு பாட்டிலில் சேமித்து வைத்துக் கொண்டு ஒவ்வொரு நாளும் தலைக்குத் தடவலாம். தலை முழுகித் தலையைச் சுத்தமாக வைத்திருக்கும் பட்சத்தில் பொடுகு மறைந்து விடும்.

**இரத்தப் போக்கு, கடுப்பு, அதிக வயிற்றுப் போக்கு நீங்குதற்கு...**

தேவையான, கரிசலாங்கண்ணி இலை, கறிவேப்பிலை இலை இவற்றைக் கொண்டுவந்து தனித்தனியே காய வைத்துச் சூரணம் செய்து மெல்லியதுணியில் சலித்து. ஒரு பாட்டிலில் சேமித்து வைத்துக் கொண்டு, காலை, இரவு இருவேளை (25 கிராம் வீதம்) தேனில் கலந்து சாப்பிட்டு வரும் பட்சம் மேற்கண்ட நோய்கள் நீங்கும். மற்றும் கொஞ்சம் கொஞ்சமாக இரத்தம் வெளியேறும் மூலநோய், பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய்க் கஷ்டங்கள், இரத்த சோகை

நோய்கள் ஆகியவை நீங்கிப் பூரண குணம் கிடைக்கும்.

**பாம்பின் நஞ்சு நீங்க...**

கரிசலாங்கண்ணி இலையின் சாற்றை 5 கிராம் எடுத்து அதனுடன் மோர் கலந்து அருந்த பாம்பின் நஞ்சு நீங்கும்.

**மயக்கம், பித்தம் குணமாக...**
**(தைல முறை)**

கரிப்பான் சாறு, நெல்லிக் காய்ச் சாறு வகைக்கு 200 மி.லி. எடுத்துக்கொண்டு, பசுவின்பால் 400 மி.லி. அதிமதுரம் 9 கிராம் எடுத்து அரைத்துப் போட்டுக் காய்ச்சி, மெழுகுப் பதத்தில் இறக்கி முழுகி வந்தால் சகல பித்தமும் மயக்கமும் நீங்கும்.

**தேள்கடி, மூலநோய் போக...**

தேவைப்பட்ட இலையை எடுத்து அரைத்து, அவ்விழுதைத் தேள்கடித்த இடத்தில்நன்றாய்த் தேய்த்து அதையே அவ்விடத் தில் வைத்துக் கட்டினால் நஞ்சு நீங்கும்.

இலையை வேக வைப்பதா லுண்டான ஆவியை மூல நோய் களுக்குப் பிடிக்க அந்நோய்தீரும்.

**வேர்**

இச்செடியின் வேரும் ஒரு சிறந்த மருந்துப் பொருளாகப் பயன்படுகிறது. இச்செடியின் வேரிலிருந்து எடுக்கப்படும் சாறு, வாந்தி எடுக்கச் செய்யும். இது வாந்தி மருந்தாகப் பயன்படு கிறது. அத்துடன் பேதி மருந் தாகவும் பயன்படுகிறது. கால் நடைகளுக்கு, கால் இடுக்கு களிலும் கழுத்துப் பகுதிகளிலும் ஏற்படும் ரணங்களுக்கு வேரை மருந்தாக உபயோகப்படுத்து கிறார்கள்.

**பொதுப் பண்பு**

மிகப் பழங்காலத்திலிருந்தே கரிசலாங்கண்ணிக்கீரை இந்திய மருத்துவத்தில் இடம் பெற்றிருக் கிறது. இக்கீரை, இரத்தத்தைச் சுத்தம்செய்வதில் இணையற்றது. மற்றும் கண் ஒளியைக் கூர்மை யாக்குவதிலும் இக்கீரை சாலச் சிறந்தது.

இக்கீரை உடலுக்கு உரம் ஊட்ட வல்லது. மண்ணீரலில் ஏற்படும், வீக்கம், தோல் வியாதி மற்றும் உடலில் ஏற்படும் வீக்கங் களுக்கு இக்கீரையை வதக்கி ஒத்தடம் கொடுக்கலாம்.

இலையும் தண்டும் கொண்டு பல் துலக்கலாம். இவ்வாறு பல் துலக்குவதால் பல்லில் ஏற்படும் ஈறு வீக்கம், பல்வலி, எனாமல் தேய்தல் போன்ற குறைகள் நீங்கும்.

இக்கீரையை உண்பதனா லும், இதனை மேலுக்குத் தேய்த்துக் கொள்வதாலும்உடலி லும் தலையிலுமுள்ள முடி நன்கு கறுத்து வளரும். அவ்வாறு வளர்ந்த முடிகள் பளபளப் போடு மிளிரும் தன்மை உடை யவை. அன்றியும் இக்கீரை, உடலைப் பொன்னிறமாக்கும்.

உடலில் சப்த தாதுக்களை உரமாக்கி, வலுவைத் தந்து, உயிர் அணுக்களைப் பெருக்கித் தங்க நிறம் போன்ற சருமத்தை உண்டாக்கும் குணமுடையது.

இக்கீரையை உணவோடு சேர்த்து உண்பதனால் உடம்பில் தங்கிய கெட்ட நீர் வெளியேறு கின்றது; உடல் வளம் பெறு கிறது; மலச்சிக்கல் நீங்கப் பெற்று உடல் நலம் பெறுகிறது. எனவே, இக்கீரையை வீட்டுத் தோட்டத்தில் வளர்ப்பதால் நமக்கு இக்கீரை உணவாகப் பயன்படுவதோடு நல்ல மருந் தாகவும் பயன்படுகிறது.

# தொண்டையைக் காக்க...

தொண்டை, சிவப்பான நுட்பமான தொரு சதைக் குழி. உணவுக் குழாய்க்கும் குரல்வளைக்கும் மேலாக, இருப்பது. இந்தத் தொண்டையை மனிதர்கள் பல நேரங்களில் தவறாகப் பயன்படுத்நுவதால் குரல்வளை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் எரிச்சலும் வலியும் ஏற்படுகின்றன. சிலருக்கு லேசாகவும், சிலருக்குக் கடுமையாகவும் இருக் கும்.

தொண்டை வலி, தொண்டைப் புண் ணுக்குக் காரணங்கள்:

கத்திப் பேசுவது, நெடுநேரம் பேசுவது, பாடுவது.

எரிச்சலை உண்டாக்கும் தூள்கள் புகைகள் இவற்றைச் சுவாசிக்க நேரிடுவது.

அதிகச் சூடான திரவங்களை, கார-மசாலா வகைகளைச் சாப்பிடுவது.

வரம்பின்றிப் புகைப்பது, குடிப்பது,

குளிர்ச்சியான பண்டங்களைச் சாப்பிடு வது. இதனால் தொண்டை கட்டும்;கிருமிகள் பெருகும்.

தொண்டைப் புண்ணுக்கு அறிகுறி தொண்டை சிவந்து, திசுக்கள் தடித்துப் போவது. தாகம் எடுத்தபடி இருக்கும். எதையாவது விழுங்கத் தோன்றும்.

இருமல் அடிக்கடி வரும். சில நேரங் களில் தொண்டை கம்மிப் போகும். ஆரம் பத்தில் வறட்சியும் பிறகு சளியும் பிடித்துத் தொல்லைப்படுத்தும். எரிச்சலும் வலியும் மிகும். எதையும் விழுங்குவது கஷ்டமாக இருக்கும்.

பேச்சாளர்கள், பாடகர்கள் போன்ற வர்கள் இத்தகைய தொண்டை வலிகளி லிருந்து விடுதலை பெறப் பல நிவாரண மாத்திரைகள் கடைகளில் விற்கின்றன. இவற் றைப் பயன்படுத்துவதன் மூலம், தாற்காலிக நிவாரணம் பெறலாம்.

தடுப்பு நடவடிக்கைகள் :

தொண்டைக்கு எரிச்சலை உண்டாக்காத பால், தயிர், மோர் போன்ற பொருள்களை அதிகமாகவும், கார வகைகள், மசாலாக்கள், ஊறுகாய்கள் போன்றவற்றைக் குறைவாகவும் பயன்படுத்துவதன் மூலம், தொண்டைப் புண் வராமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.

வெந்நீரில் உப்புப் போட்டு, ஒருநாளைக்கு மூன்று தடவை வாய் கொப்பளிக்கவும்.

புகை பிடிப்பதையும், குடிப்பதையும் விட்டு விடுக.

நீண்ட நேரம் பேசுவதையும் பாடுவதை யும் தவிர்க்கவும்.

'ஆன்டி செப்டிக் லாசெஞ்ச்' மாத் திரைகளை 4 மணிக்கொரு தடவை வாயில் போட்டுச் சுவைக்கவும். இந்த மாத்திரைகள் உடனடி நிவாரணத்துக்கு உதவும்.

# சட்டப்பேரவையில் திரட்டியவை



பவானிசாகர் பகுதியில் உள்ள காடுகளில் தெங்குமராடா வரையில் உள்ள காடுகளில் புள்ளிமான், மிளா, வெளிமான், கேளை ஆடு, சருகுமான், நாற்சொம்பு மான் போன்ற மான் வகைகள் உள்ளன.

இப்பகுதியைச் சரணாலயமாக ஆக்கும் கருத்துரு, தலைமை வனவிலங்குக் காப்பாளரின் ஆய்வில் உள்ளது.

## பொருட்காட்சிகள் மூலம் கிடைத்த நிதி

*1984, 1985* மற்றும் *1986* ஆண்டுகளில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதியில் நடைபெற்ற பொருட்காட்சிகள் மூலம் அரசுக்குக் கிடைத்த மொத்த வருவாய் ரூ. 79 இலட்சத்து 80 ஆயிரம்.

## ரப்பர் தொழிற்சாலை

கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் கழகத்தின் கீழ் உள்ள மயிலார் கோட்டத்தில் ஒரு ரப்பர் தொழிற்சாலை அமைக்க அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

இந்தத் தொழிற்சாலை ஒரு நாளைக்கு இரண்டு டன்கள் ரப்பர் உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாக அமையும். கட்டடம் கட்டவும் சாலைகள் போடவும் ரூ. 10 இலட்சமும், சுவீடன் நாட்டிலிருந்து இயந்திரங்கள் வாங்க ரூ. 23 இலட்சமும் செலவிடப்படும்.

## முண்டந்துறை சரணாலயம்

முண்டந்துறை புலிசரணாலயம்: அம்பாசமுத்திரம் சரகத்தில் 2 புலிகளும் 12 சிறுத்தைகளும், பாபநாசம் சரகத்தில் 3 புலிகளும் 21 சிறுத்தைகளும் உள்ளன.

பாபநாசம் சரகக் காடுகளில் 21 யானைகளும் அம்பாசமுத்திரம் சரகத்தில் 23 யானைகளும் உள்ளன.

## நாகப்பட்டினத்தில் அனல் மின்நிலையம்

தஞ்சாவூர் மாவட்டம் நாகப்பட்டினத்தில் அனல் மின் நிலையம் அமைப்பது குறித்து ஆய்வுப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் இன்னும் பத்து மாதங்களில் முடிவடைந்துவிடும்.

முதல் கட்டமாக ரூ. 630கோடி செலவில் தலா 210 மெகா வாட் உற்பத்தித்திறன் கொண்ட மூன்று பிரிவுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பின்னர் தலா 210 மெகா வாட் உற்பத்தித் திறன் கொண்ட 2 பிரிவுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இறுதியாக 500 மெகா வாட் உற்பத்தித் திறன் கொண்ட 2 பிரிவுகளும் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. மொத்தம் 2,000 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடு இருக்கும்.

ஆய்வுப்பணிகள் முடிந்தவுடன் அது குறித்த அறிக்கை மத்திய அரசு ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும். அடுத்த நிதியாண்டில் இந்தத் திட்டம் தொடங்கிட முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

அரசு நிலங்களை ஆக்கிரமிப்பு செய்பவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை மேற்கொள்ள, தக்க சட்டம் கொண்டு வருவது பற்றி அரசு ஆய்வு செய்து வருகிறது.

## இலவசச்சட்ட உதவி மையங்கள்

தமிழ் நாட்டில் 34 இலவசச் சட்ட உதவி மையங்கள் இயங்கி வருகின்றன. இதற்காக தமிழ்நாடு அரசு, ஆண்டுதோறும் 38 இலட்சம் ரூபாய் செலவிடுகிறது.

இந்த மையங்களில் கிராமப் பகுதிகளில் வாழும் மக்கள் பெருமளவில் பயன் பெற்றுள்ளனர். நீதிமன்றங்களுக்குச் செல்லாமல் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளன.

ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த மக்களிடமிருந்து 43 ஆயிரத்து 155 மனுக்களும், மலைவாழ் மக்களிடமிருந்து 3 ஆயிரத்து 984

## காலணி அணிவது யாவர்க்கும் நன்று

'ஏழை மக்களுக்கு இலவசமாகச் செருப்பு வழங்குவது நல்லதிட்டம்.

'செருப்பு அணிந்து நடப்பவர்கள்தான் ஞாபக சக்தி உடையவர்களாக இருப்பார்கள். செருப்பு அணியாமல் நடப்பவர்களுக்கு ஞாபக சக்தி குறைவு. இதனால்தான் நபிகள் நாயகம் செருப்பு அணியாமல் நடப்பவர்கள், சாட்சியம் சொல்வதை நம்பக் கூடாது' என்றார்கள்.

—ஏ. கே. ஏ. அப்துல்சமது எம்.எல்.ஏ.,
(தமிழ்நாடு சட்டப் பேரவையில் பேசியது)

மனுக்களும் இலவசச் சட்ட உதவி மையங்கள் மூலம் பெறப்பட்டன. இரு தரப் பினரிடமும் சமரசப் பேச்சு நடத்தி பெரும் பாலானவை தீர்த்து வைக்கப்பட்டன.

இலவசச் சட்ட மையங்கள் அந்தந்தப் பகுதியில் முதுநிலை மற்றும் இளநிலை வழக் கறிஞர்கள் பணியினைப் பயன்படுத்திச்செயல் படுத்தப்படுகின்றன. தமிழ்நாட்டில் நடை பெற்றுவரும் இலவசச் சட்ட உதவி மையங் களின் சிறந்த பணியினை மத்திய அரசும் உச்சநீதிமன்றமும் பாராட்டியுள்ளன.

## குடும்ப நீதிமன்றங்கள்

தமிழ்நாட்டில் குடும்ப நீதிமன்றங்கள் அமைக்கும் கருத்து, தீவிர ஆய்வில் உள்ளது.

குடும்ப நீதிமன்றங்கள், திருமணம், குடும்ப விவகாரங்கள், ஜீவனாம்சம் போன்ற பிரச்சினைகளில் ஏற்படும் வழக்குகளைத் தீர்த்து வைக்க உதவும். இந்த நீதிமன்றங் களின் அமைப்புக் காரணமாக பல்வேறு நீதி மன்றங்களில் பல ஆண்டுக்காலமாகத் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை விரைவில் முடித்து வைக்க குடும்ப நீதிமன்றங்கள் உதவும்.

## அணுமின் நிலையத்திற்கு இடந்தேர்வு

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட் டம் கூடங்குளத்தில் அணுமின் நிலையம் அமைக்க அணுசக்தித் துறையின் இடத்தேர் வுக் குழு 1976, 1981 ஆண்டுகளில் சுற்றுப் பயணம் செய்து கூடங்குளத்தில் அணுமின் நிலையம் ஏற்படுத்த முடியும் என்று கருத்து தெரிவித்துள்ளது.

—தொகுப்பு : மாமூலன்.

# இலங்கைப் பிரச்னை: இந்தியப் பிரதமருக்கு முதல்வர் தந்தி

இலங்கைத் தமிழர்மீது சிங்கள ராணுவம் தாக்குதல் நடத்துவதைத் தடுத்து நிறுத்தக் கோரி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்தி அவர்களுக்கு 8.3.87ல் ஒரு அவசரத் தந்தி கொடுத்திருக்கிறார்: அதன் விவரம் பின் வருமாறு:-

இலங்கையில் தமிழர்கள் வாழும் யாழ்ப் பாணம், வவுனியா போன்ற இடங்களில் கடந்த 2 நாட்களாக இராணுவத்தைக் கட்டவிழ்த்துவிட்டு அப்பாவித் தமிழர்கள் மீது விமானத் தாக்குதல் நடத்தி ஆயிரக்கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்துவரும் செயல், தமிழக மக்களைப் பெரும் அதிர்ச்சிக்கும், துயரத்துக்கும் உள்ளாக்கி உள்ளது.

அச்சத்திற்கும், பீதிக்கும் ஆளாக்கப்பட்டி ருக்கும் இலங்கைத் தமிழர்கள், உயிரைக் காத்துக்கொள்ளும் பொருட்டு ஊரை விட்டுக் காட்டுக்குச் சென்று ஓடிஒளிந்துகொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கைப் பிரச்னைக்கு ராணுவ ரீதியில் அடக்குமுறை மூலம் தமிழ் இனத்தை ஒழித்து ஒரு முடிவு காண்பது என்று ஜெயவர்த்தனா அரசு தீர்மானித்து விட்டதை இந்தச் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

இலங்கைத் தமிழர் பிரச்னையில் அதிக அக்கறை கொண்டு நடவடிக்கைகளை எடுத்து வரும் பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள், இதில் அவசரக் கவனம் செலுத்தி இலங்கைத் தமிழர் மீது இலங்கை அரசு நடத்திவரும் இராணுவத் தாக்குதலை உடனடியாக நிறுத்து வதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக மக்களின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.



# சேலம் மாவட்டப் பழங்குடியினர் மேம்பாடு

சேலம் மாவட்டத்தில் உள்ள பழங்குடியினர் மக்கள் தொகை 1.24 இலட்சமாகும். பழங்குடி மக்கள் பெரும்பாலும் சேலம் மாவட்டத்தில் ஏர்க்காடு, கொல்லிமலை, கல்ராயன் மலை, பச்சமலை அரநூத்துமலை, பாலமலை, ஜம்பூத்துமலை, பைத்தூர் மலை போன்ற மலைப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில் மேம்பாட்டுக்கு மத்திய, மாநில அரசு இணைந்து ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம் பாட்டுத் திட்டம் 1976-77ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகின்றன. இம் மலைப் பகுதிகளில் வாழும் பழங்குடி மக்களின் மேம் பாட்டுக்காக, 1976-77ஆம் ஆண்டு முதல் 1985-86ஆம் ஆண்டு முடிய பல்வேறு திட்டங்கள் மூலம் ரூபாய் 9 கோடியே 53 இலட்சம் செல விடப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டான 1986-87ஆம் ஆண்டுக்கு, அரசு, சேலம் மாவட்டத் திற்கு மட்டும் ரூ. 3.35 கோடி அனுமதித்துள்ளது.



# பார்த்தசாரதி கோயில் திருக்குளம் சீரமைப்பு

சென்னையில் பிரசித்தி பெற்ற ஆலயங்களுள் திருவல்லிக்கேணியிலுள்ள அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயிலும் ஒன்று. இக்கோயிலை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 11.3.'87 அன்று எவ்வித முன்னறிவிப்புமின்றிப் பார்வையிட்டார்.

கோயிலின் திருக்குளம் தண்ணீர் இல்லாமல் வறண்டு கிடப்பதோடு, குளத்தின் படிக்கட்டுகளில் அசுத்தம் செய்யப்பட்டு உபயோகத்திற்கு ஏற்றதாக இல்லாமல் இருந்ததைக்கண்டு முதல்வர் அவர்கள் அதிர்ச்சி அடைந்தார்.

இக்குளத்தை உடனடியாகத் தூய்மைப்படுத்தவும், தூர்வாரவும், நல்லமுறையில் பராமரிக்கவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அலுவலர்க்கு ஆணையிட்டார்.

பின்னர், ஏறத்தாழ 20 நிமிடங்கள் வரை அங்கிருந்து அந்தப் பகுதிகளைச் சுற்றிப்பார்த்து, மேலும் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்துக் கேட்டு அறிந்தார். ரூ.2 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும் கோவில் தேரையும் பார்வையிட்டார்.

பின்னர் மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர்திரு வி.விஸ்வாமிநாதன் அவர்கள் அங்கு சென்று கோயில் குளத்தைப் பார்வையிட்டு, அதனைச் சீர்படுத்த அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

பின்னர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம், ''நிலத்தடி நீரைக் கொண்டு தண்ணீர் நிரப்பலாம் என்று பொதுப்பணித்துறை தெரிவித்துள்ளது. இங்கு ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு மழை பெய்தாலும் பொய்த்தாலும் ஆண்டுதோறும் தெப்பத் திருவிழா தடைபடாது நடக்கும் அளவிற்கு, திருக்குளத்தில் எப்போதும் தண்ணீர் இருக்க வகை செய்யப்படும்.

''சென்னை மாநகராட்சி, இந்து சமய அறநிலையத்துறை, பொதுப் பணித்துறை மற்றும் கட்டுமானக் கழகமும் இப்பணியை மேற்கொள்ளும். மயிலாப்பூர் சித்திரக் குளத்தையும் சீரமைக்க அரசு திட்டமிட்டுள்ளது'' என்று கூறினார்.

''குளத்தின் நடுவில் உள்ள நீராழி மண்டபமும் பழுது பார்க்கப்பட்டு அதில் மின்விளக்குகள் அமைக்கப்படும். குளத்தைச் சுற்றி சுவர் கட்டப்பட்டு அதற்கு மேல் முள்கம்பிகள் பொருத்தப்படும்'' என்று இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு க.சுந்தரமூர்த்தி இ.ஆ.ப. தெரிவித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிட்டுத் திரும்பிய சில மணி நேரங்களிலெல்லாம் குளத்தைச் சுத்தப்படுத்தும் பணி தொடங்கியது. குளத்தைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்பட்டன.




## இன்றைய தத்துவஞானப் போராட்டத்தில் பாரதியின் பாத்திரம்

ஆசிரியர் : நவபாரதி.

வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-பி. சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை-600 098.

பக் : 120 விலை ரூ. 9

புத்தகப் பெயரோடு-பாரதியின் அத்வைதத்தில் பகவத் கீதையின் பாத்திரம், பாரதியின் புரட்சிகரமான சமூகப் பார்வையில் பகவத் கீதையின் பாத்திரம், இன்றைய சித்தாந்தப் போராட்டத்தில் பாரதியின் புரட்சிகர முக்கியத்துவம் ஆகிய நான்கு பிரிவுகளின் கீழே பல இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள் அணிவகுத்துள்ள நூலாகும் இது.

ப. ஜீவானந்தம், ஆர். கே. கண்ணன், தொ. மு. சி. ரகுநாதன் ஆகிய மார்க்சிய மும்மூர்த்திகள் எழுத்தே பாரதியை உலகுக்குணர்த்தின என்பது போல் எழுதும் நூலாசிரியர்—'இன்று பாரதியின் காலத்தை விட மார்க்சியம் உலக அளவிலும், தேசிய அளவிலும் வெற்றிகள் பெற்று வளர்ந்திருக்கும்போது அந்த வழியை மேலும் வெளிச்சம் போட்டுக் காட்டுவது தேவைதானா?' என்ற வினாவின் அடிப்படையே இந்த நூலுக்கு அஸ்திவாரம் என்கிறார்.

ஆனால் கட்டுரைகள் அனைத்தும் சுற்றிச் சுற்றி அந்த ஒரு சார்பையே வெளிச்சம் போட்டுக் காட்டுவது போலிருக்கின்றன.

இலக்கிய விரும்பிகள் - குறிப்பாகப் பாரதி ஆய்வாளர்கள், அந்தத் தேசீய கவிமேல் விழும் இந்தப் புதிய பார்வையைச் சலித்துப் பார்க்கலாம்.

—சோழன்

## தையற்கலை வழிகாட்டி!

ஆசிரியர் : ஆர்.எஸ். பாலகுமார்

வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41. பி. சிட்கோ எஸ்டேட், சென்னை-600 098.

விலை : ரூ. 13. பக்கம்.111.

மனித நாகரிகத்தை மேம்படுத்துவதில் உடைகளுக்கு முக்கிய இடம் உண்டு. அதற்கு அடிப்படையானது தையற்கலை; வீட்டிலிருந்து பயிலும் பெண்களுக்கு மட்டுமல்லாது, அரசுத் தேர்வுகளில் பங்கு பெறுபவர்க்கும் பயன்படும் வகையில் சிறப்பாக அமைந்துள்ளது இந்நூல்.

அளவு முறைகள் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. சுருவூர், சோளி, ஜிப்பா, ஸ்கர்ட்டு, சிறுமியர் குர்தா போன்ற பல திறப்பட்ட ஆடை வகைகள் பற்றிய அனைத்துக் குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொன்றுக்கும் பட விளக்கங்கள் உண்டு. பிற்பகுதியில் பணிமனை கணக்கும், தொழில் நுணுக்கச் சொற்களும், கலைச் சொற்களும் தரப்பட்டுள்ளன.

## அறுசுவை உணவு சைவ சமையல்

ஆசிரியர் : எம். இராஜலட்சுமி, எம். கலாதேவி.

வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் 41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை-600 098.

விலை : ரூ. 14 பக்: 192.

பச்சடி வகைகள், வறுவல், கூட்டு, பொரியல், துவையல், பொடிகள், பொரித்த குழம்பு, ரசம் என்று எல்லாவிதமான சமையல் வகைகளும் நல்லமுறையில் சொல்லப்பட்டுள்ளன. சித்திரான்னங்களும் சுவைபடக் கூறப்பட்டுள்ளன. சமையல் பயிற்சி பெற விழைவோர்க்கு நல்லதொரு துணை இந்நூல். செய்முறையை விளக்கும் முன்பு தேவையான பொருள்களையும் தனியே பட்டியலிட்டுக்காட்டினால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

—டாக்டர் சிவ அரசி முத்துக்காளத்தி

## தும்பா முதல் பைக்கனூர் வரை

ஆசிரியர்: எஸ்.எஸ்.இராமசாமி.

வெளியீடு: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-பி, சிட்கோ எஸ்டேட், சென்னை.600 098.

விலை: ரூ.10. பக்கம்.119.

மேலை நாட்டினருக்கு நாம் சளைத்தவர்களல்ல என்பதை மெய்ப்பிக்கும் வகையில், இந்தியச் செயற்கைக் கோள்கள் விண்ணில் ஏவப்பட்டிருக்கின்றன, ஏவப்பட்டு வருகின்றன.

ஆரியபட்டா, பாஸ்கரா-1, ரோகிணி, ஆப்பிள், இன்சாட்-1ஏ ஆகிய செயற்கைக் கோள்கள் பற்றிய அரிய செய்திகள், அறிவியல் குறிப்புகள், அவற்றால் ஏற்பட்ட - ஏற்படும் பயன்கள் முதலான தகவல்கள் ஒழுங்குறத் தொகுக்கப்பெற்றுள்ளன. விளக்கப்படங்களும் உள்ளன. இளைய தலைமுறையினர் மட்டுமின்றி, எல்லோரும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய பயனுள்ள செய்திகள்.

—பி.வி.கிரி.

**புத்தகங்கள் இளமையில் வழிகாட்டி; பருவத்தில் பொழுது போக்குபவை; நாம் தனிமையிலிருக்கும்போது நமக்குப் பெருந்துணையாக இருப்பதுடன் நாமே நமக்கு ஒரு பெருஞ்சுமையாகத் தோன்றாதவாறு செய்கின்றன.**

**—கோலியர்**

## உடல் செயலியல்

ஆசிரியர்கள்:

திருமதி பொன். விஜயலட்சுமி.
திருமதி கி.வள்ளியம்மை

வெளியீடு:

நியூ செஞ்சரி புக் ஹவுஸ் பிரை வேட் லிமிடெட்,
41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை-600098.

விலை ரூ.29.00 பக்கம்.268

தமிழ் வழி பயிலும் இளங் கலை விலங்கியல் பட்ட வகுப்பு மாணவர்களுக்கு 'உடல் செய லியல்' பாடத் திட்டத்திற்கு ஏற்பத் தெளிவாக, சுருக்கமாக எழுதப்பட்ட நூல்.

உணவூட்டம், வளர்சிதை மாற்றம், சுவாசம், கழிவு நீக்கம், ஊடு கலப்பு ஒழுங்குபாடு, இயக்க உறுப்புகள், நரம்பு மண்டலம், உணர் ஏற்பிகள், இனப்பெருக்கு முறைகள் என்று பல பகுதிகளா கப் பிரித்துத் தேவையான விளக் கங்கள், உதாரணங்கள், படங் களுடன் கவனத்தோடு இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது.

நூலின் இறுதியில் உள்ள கலைச் சொற்கள் பட்டியல் மிக வும் பயனுள்ளது.

இந்நூல் மருத்துவத் துறைக்குப் பெருமை சேர்க்கும் முயற்சி. மருத்துவ நூல்களைத் தமிழிலும் சிறப்பாக எழுத முடியும் என்ப தற்கு இந்நூல் ஓர் எடுத்துக் காட்டு.

—அ. மருதவிநாயகம்

## அருட்பெருஞ் சோதி வள்ளலார்

ஆசிரியர்: மயிலைத்தொண்டன்
வெளியீடு:
தமிழ்மணி பதிப்பகம்
107-ஏ, பெரியார் பாதை
(மேற்கு) சூளைமேடு,
சென்னை-600094.

விலை: ரூ.7. பக்கம்:96

சமரச சன்மார்க்கத் தத்து வத்தை மக்களுக்கு அருளிய வள் ளலாரின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கமும், அவர் உபதேசித்த நெறிமுறைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

பிற உயிர் கொல்லாமை, மன அடக்கம், சமரச சன்மார்க்கம், பிறந்த பயன், மனுதர்மம் இவை குறித்து அருட்பா மூலம் அருட் பெரும் ஜோதி எழுதியம்பிய வற்றை விரிவாக விளக்குகிறார் ஆசிரியர்.

மற்றைய மகான்களுடன் வள்ள லாரை ஆசிரியர் ஒப்பிட்டுக் கூறும் விதம் சிறப்புடையது.

பசித்திரு, தனித்திரு, விழித் திரு என்ற தாரக மந்திரத்தின் விளக்கமும், சுத்த சன்மார்க்க சங்கத்திற்காக வள்ளலார் வகுத் தளித்த பத்துக் கட்டளைகளும் நூலில் இடம் பெற்றுள்ளன.

## மனிதர்கள் எங்கும் இருக்கிறார்கள்

ஆசிரியர்: சி.ஏ.பாலன்
வெளியீடு:
நியு செஞ்சூரி புக் ஹவுஸ் பிரை வேட் லிமிடெட், 41-பி, சிட்கோ இண்டஸ்டரிஸ் எஸ் டேட், சென்னை-600098.

விலை : ரூ.12. பக்கம்: 160

தாயை இழந்த, தந்தையால் நிராகரிக்கப்பட்ட, ஊனமுற்ற பெண்ணொருத்தி, பொது இடத் தில் பிச்சை எடுக்க வைக்கும் ஒரு கும்பலிடம் சிக்குகிறாள், சேரி வாசியாகிறாள். அந்தச் சேரியில் அவள் சந்திக்கும் மனிதர்கள், சோதனைகள், வேதனைகள் இவற்றைச் சில சம்பவங்களுடன் இணைத்து,கதையாக்கித் தந்துள் ளார் ஆசிரியர்.

'தூக்கு மரநிழலில்' எழுதிய திரு சி.ஏ.பாலனின் அற்புதப் படைப்பு இது.

இக்கதையில் அவர் உருவாக் கிய கதாபாத்திரங்களும், அவர் கள் பேசும் தமிழும், சம்பவங்க ளும் அங்கங்கே நாம் அன்றாடம் காணக்கூடியவைதான். எனினும் இந்நூலைப் படித்து முடித்த பின் னரும் நம் மனக்கண்ணில் என் றும் நிழலாடும் வகையில் அப் பாத்திரங்கள் சித்திரிக்கப்பட் டுள்ளன.

—வி. இராவணன்

## மக்கள் கலாசாரத்தை மண்ணாக்கும் சக்திகள்

ஆசிரியர்: வல்லிக்கண்ணன்.

வெளியீடு:
நியூ செஞ்சூரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட், சென்னை-98.

விலை ரூ.7.00 பக்கம்.100

வளரும் நாடுகளில் மட்டு மல்ல அனைத்து நாடுகளிலும் கலாசாரச் சீரழிவுக் காரணங் களை விளக்கி சினிமாவும், பத்திரி கைகளும், புத்தகங்களும், பிரச் சாரத் தளங்களும் மக்களின் பொழுது போக்கு முறைகளும் கலாசாரத்தை எப்படி எப்படி சீரழிக்கின்றன என்பதைப் பதி மூன்று கட்டுரைகளில் ஆசிரியர் காட்டியுள்ளார்.

முற்போக்குச் சிந்தனை யாளர்கள் கருத்தைக் கவரக் கூடியது இந்நூல்.

## புத்தர் பொன் மொழி நூறு (செய்யுள் நூல்கள்)

ஆசிரியர்: புலவர் சுந்தர சண்முகனார்

வெளியீடு:
நியூ செஞ்சூரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட், சென்னை-98.

விலை ரூ.5.00 பக்கம்.40

புத்தரின் அறிவுரைகளை நூறு அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களில் ஆசிரியர் ஆக்கித் தந்துள்ளார். 26 இயல்களில் அறி வுரைகளைத் தொகுத்ததுடன் மேலும் பிற்சேர்க்கையாக புத்தர் பல்வேறு வேளைகளில் பலருக்குக் கூறியவைகளை பதினொரு பாடல்களில் ஆசிரி யர் வடித்துக்கொடுத்துள்ளார்.

இக்காலத்தில் புதுமை, பொதுவுடைமை, புரட்சி, பகுத் தறிவு, சீர்திருத்தம், முன் னேற்றம் என்ற பெயர்களில் கூறப்படும் கருத்துக்கள் புத்தரின் கருத்துக்களிலும் இடம் பெற்றிருப்பதை இந் நூலைப் படிப்பவர்கள் தெரிந்து கொள்ளலாம்.

—மாமுலன்

# முதலமைச்சர் நிதியுதவி

## துப்பாக்கிச் சூட்டில் உயிர் இழந்தவருக்கு

தென்ஆர்க்காடு மாவட்டம் கடலூர் வட்டம் கண்டக்காடு கிராமத்தில் 2.11.86 அன்று இரு பிரிவு மீனவர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறினைத் தொடர்ந்து அன்று மாலை குற்ற வழக்கு சம்பந்தப்பட்டவர்களைத் தேடிக் காவலர் குழு ஒன்று கண்டக்காடு கிராமத்திற்குச் சென்றபோது, ஒரு பிரிவினைச் சேர்ந்த சுமார் 200 பேர் அடங்கிய வன்முறைக் கும்பல் பயங்கர ஆயுதங்களுடன் காவல் துறையினரைத் தாக்கியதைத் தொடர்ந்து, காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இத்துப்பாக்கிச் சூட்டில் திரு ராஜாங்கம் என்பவர் உயிரிழந்தார்.

துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த திரு ராஜாங்கம் அவர்களின் குடும்பத்துக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 5,000 நிதியுதவி அளிக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

## கண்ணை இழந்தவருக்கு

கிருஷ்ணகிரி ஊரக விறகு உற்பத்திக் கோட்டத்தைச் சேர்ந்த பேரண்டபள்ளியில், மத்திய வன நாற்றங்கால் இருந்த இடத்தில், ஒரு பகுதியைப் பக்கத்து நிலச் சொந்தக்காரர் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார். இந்த நில ஆக்கிரமிப்பை அகற்றுவதில் வனத்துறையைச் சார்ந்தவர்களுக்கும், கிராமத்தவர்களுக்கும் தகராறு ஏற்பட்டு, அதன் நிமித்தம் கிராமத்தவர்களுக்கு வனத்துறையின் வனவர் திரு கிருஷ்ணன் மீது கசப்புணர்ச்சி இருந்து வந்தது.

வனவர் திரு ஆர். கிருஷ்ணன், வனத்துறை நிலத்தில் கடமையாற்றும்போது ஆக்கிரமிப்பாளர்களைத் தடுக்க முயன்றதன் விளைவாக, ஆக்கிரமிப்பாளர்களால் கொடூரமாகத் தாக்கப்பட்டு, தன்னுடைய ஒரு கண்ணை இழக்க நேரிட்டது. அவருக்கு மனிதாபிமான அடிப்படையில் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 2000 உதவித் தொகை வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

# நெடுநாள் வாசகரின் வேண்டுகோள்

''நான் நெடுநாள் தமிழரசு வாசகன். இந்தச் சிறந்த மாத இதழைப் படித்து இதன் மூலம் நிறைய விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். தமிழரசுப் பத்திரிகையைப் படிக்கத் தவறமாட்டேன். இருந்தாலும் எனக்குள் ஒவ்வொரு முறையும் இந்தப் பத்திரிகையைச் சொந்தமாகவே வாங்கிப் படிக்க வேண்டுமென்ற ஆவல் எழுகிறது. அதனால், பத்திரிகையின் சந்தாவிவரம் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.''

ஜான்சன்,
வேடப்பட்டி.

நேசத்திற்குரிய இந்த நெடுநாள் வாசகரின் விருப்பத்திற்கிணங்க, சந்தாவிவரம் அஞ்சல் மூலம் அவருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மற்றவர்கள் பயன்கருதி கீழே தரப்படுகிறது. —ஆசிரியர்.

தமிழ் இதழ் (மாதம் இருமுறை)

ஆண்டுச்சந்தா ரூ. 24. (உள்நாடு); ரூ. 75 (வெளிநாடு)

அரையாண்டுச் சந்தா ரூ. 12 (உள்நாடு) ரூ. 40 (வெளிநாடு)

ஆங்கில இதழ் (மாதம் ஒருமுறை)

ஆண்டுச்சந்தா ரூ. 12 (உள்நாடு) ; ரூ. 40 (வெளிநாடு)

அரையாண்டுச் சந்தா கிடையாது.

# பார்த்தோம் - படித்தோம்

பாரதி சிறப்பிதழ் கண்டேன். ஒவ்வொரு பக்கத்திலும் வெளிவந்த அவரைப்பற்றிய துணுக்குகளும், கட்டுரைகளும் படித்துச் சுவைத்தபின் மனம் ஆனந்தப் பள்ளுப்பாடியது! 'உத்தம தர்மம்' மகாகவியின் சிறுகதை, ஒற்றுமையின் சிறப்பினை நேர்த்தியாகச் சித்திரித்தது. பாரதி சிறப்பிதழ் சேர்த்து வைக்கப்பட வேண்டிய முத்தான இதழ்.

-எம். லேனாப்ரியன்,
திருமருகல், தஞ்சை மாவட்டம்.

''தமிழரசு'' தரும் செய்திப் படங்கள் அத்தனையும் அருமை. மாணவர் பக்கங்கள் நன்றாக உள்ளன.

-எஸ். எஸ். வாசன்,
தென் எலப்பாக்கம்,
வடஆர்க்காடு மாவட்டம்.

பல்வேறு சிறப்பம்சங்களைத் தாங்கி வெளிவரும் தமிழரசு, பலரும்படித்துப் பயன்பெற வேண்டிய ஒரு சிறந்த பொக்கிஷம். நூல்நயம் பகுதி, அரசு சாதனைகள், திட்டப்பணிகள் ஆகிய அம்சங்கள் சிறப்பாக உள்ளன.

-கே. கே. நஞ்சமுத்து,
கொட்டையக்காட்டூர்,
பெரியார் மாவட்டம்.

**கா**விரிக்கரைக்கு எத்தனையோ பெருமைகள் உண்டு. அவற்றில் ஒன்று திருவரங்கத் திருத்தலத்தில் அமைந்துள்ள திருவரங்கன் ஆலயமாகும். ஆழ்வார்கள் பாடிப் பரவிய திருத்தலம் இது.

வார்த்தை தமிழுக்கு வழங்கிய கம்பரின் இராம காதை அரங்கேற்றம் ஆகியது இந்தத் திருக்கோயிலில் தான்.

சீர்காழி அருணாசலக் கவிராயரின் ராமநாடகக் கீர்த்தனை என்னும் நூலும் இங்கேதான் அரங்கேற்றமாகியுள்ளது.

திருவரங்கன் ஆலயம் சோழ மன்னர்களாலும் பாண்டிய மன்னர்களாலும் உருவாக்கப்பட்டது என வரலாறு கூறுகிறது. ஹொய்சாள மன்னர்களும்-அவர்களுக்குப் பின்னர் விஜய நகர மன்னர்களும் இந்த ஆலயத்தின் சில பகுதிகளை உருவாக்கியிருக்கின்றனர்.

ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் என்னும் பாண்டிய மன்னன், அரங்கநாதனுக்குத் தங்கத்தால் அணி செய்து தந்திருக்கிறான்.

கி.பி.1268 -1308 வரை இந்திய நாட்டில் சுற்றுலா செய்து வந்த இதாலி நாட்டுச் சுற்றுலாப் பயணி மார்கோபோலோ அரங்கநாதனின் ஆலயம் சீரும் சிறப்புடனும் விளங்கியதைத் தமது குறிப்பிலே விவரித்திருக்கிறார்.

கி.பி.1311, 1323 ஆகிய ஆண்டுகளில் முஸ்லிம் மன்னர்களின் பிரதிநிதிகள் இங்கு படையெடுத்து வந்ததால் அரங்கநாதனின் ஆலயம் ஓரளவு சிதைக்கப்பட்டுள்ளதாக வரலாற்றின் ஏடுகள் தெரிவிக்கின்றன.

கி.பி.15, 16-ஆம் நூற்றாண்டுகளில் விஜய நகர மன்னர்களின் ஆட்சியில், திருவரங்கனின் ஆலயம் சீர்செய்யப்பெற்றது.

அவர்களுக்குப் பின்னர் ஆட்சி செய்த அச்சுதநாயக்கர், சொக்கநாதநாயக்கர் ஆகிய மன்னர்கள், ஆலயத்திற்கு மேலும் எழில் கூட்டினர்.

ஆனால் முக்கியமான தெற்கு வாசலில் அமைந்த ராஜகோபுரம் முழுமையாகக் கட்டப்பட் முடியாதபடி நாயக்க மன்னர்களின் ஆட்சி முடிந்துவிட்டது.



# திருவரங்கத்தின் ராஜகோபுரம்

*1751* முதல் *1758* வரை திருச்சி, பிரெஞ்சுக்காரர்களின் ஆட்சியில் இருந்தது. அதன் பின்னர் பிரிட்டிஷ்காரர்களின் கையில் சிக்கியது. நாடு விடுதலைபெற்ற பின்னர் இந்தியாவுக்கே உரிமையாகியது இந்த ஆலயம்.

ஏற்கனவே 1926-ல் இந்து சமய அறநிலையத்துறை என்னும் அமைப்பு அந்நியரின் ஆட்சியிலேயே உருவாக்கப்பட்டிருந்தது. அதன் வாயிலாக, புகழ்பெற்ற திருக்கோயில்களின் நிருவாகத்தை அரசே ஏற்று நடத்தும் வாய்ப்பு ஏற்பட்டது.

ராஜகோபுரம் வளர்ச்சியின்றி இருந்ததால் அது மொட்டைக் கோபுரம் என்றே பலராலும் அழைக்கப்பட்டுவந்தது. அகோபில மடத்து ஜீயர் அவர்களின் முயற்சியினால் ராஜகோபுரத் திருப்பணி தொடங்கியது. தமிழக அரசின் நிதி உதவியும் (ரூ. 9 லட்சம்) தனியார் பலரின் நன்கொடையும் கிடைத்தன.

திருப்பணி 1979 மே திங்களில் தொடங்கியது. நாள் ஒன்றிற்கு 300 பேர் இரவும் பகலும் உழைத்து 13 நிலைகள் கொண்ட இந்த ராஜ கோபுரத்தை உருவாக்கியிருக்கிறார்கள். மொத்த உயரம் 236 அடி; ஆசியாவிலேயே மிக உயரமான கோபுரம் இது என்று சொல்லப்படுகிறது.

கோபுரத்தின் உச்சியில் 13 கலசங்கள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு கலசமும் 10 அடி உயரமும், 5 அடி அகலமும், 135 கிலோ கிராம் எடையும் கொண்டது.

கலசங்களின் உள்ளே வரகு தானியம் நிரப்பப்பட்டுள்ளது. கலசங்கள் காற்றில் ஆடாமல் இருப்பதற்காக அவற்றின் உள்ளே தேக்குக் கட்டைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

பதின்மூன்று நிலைகளில் எதிலும் வௌவால் நுழைய முடியாதபடி கம்பிக் கதவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கோபுரத்தில் சுமார் இருநூறு சுதைச் சிற்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

கோபுரத்தின் கட்டுமானப் பணிக்கு 12 ஆயிரம் டன் சிமெண்ட், 130 டன் இரும்புக் கம்பி, 1 கோடியே 75 லட்சம் செங்கற்கள் ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

இத்திருக்கோயிலின் பரப்பளவு 156 ஏக்கர் ஆகும். இதில் 21 கோபுரங்கள் உள்ளன. தற்போது உருவாக்கப்பட்டுள்ள ராஜகோபுரம் என்னும் தெற்குக்கோபுரத்துடன் 22 கோபுரங்கள் ஆகின்றன.

இந்தத் தெற்குக் கோபுரத்தின் குடமுழுக்கு விழா மார்ச் 25 ல் (1987) நடைபெற உள்ளது.

இறையன்பர்களின் அகக்கண்களுக்கு ஆனந்த வாரிதியையும், புறக் கண்களுக்கு அற்புதக் காட்சியையும் குடமுழுக்கு விழா வழங்க இருக்கிறது.

இவ்விழாவைக் காணத்திரண்டு வரும் அன்பர்களுக்கு உரிய வசதிகளைத் திருச்சி, திருவரங்கம் நகராட்சி மன்றங்களும், அரசுத் துறையினரும் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே

—என்று தொண்டரடிப்பொடியாழ்வார் பாடிப் பரவிய திருவரங்கனின் ஆலயம் - புதிய ராஜகோபுரத்தின் தோற்றத்தால் புதுப் பொலிவு பெறுவது உறுதி.

**- எஸ். எஸ். சுந்தரம்**



# உறுதிமனம் கொண்ட உத்தமர்

முன்னாள் முதல்வர் திரு எம். பக்தவத்சலம் அவர்களின் மறைவுக்கு, சென்னை மாநகர மக்களின் சார்பில் இரங்கல் கூட்டம் 13-3-87 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடந்தது. சென்னை ஷெரீப் திரு ஏவி. எம். சரவணன் அவர்கள் இந்தக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் இமயம் போன்றவர். நெருக்கடியான நேரங்களிலும் நிலை குலையாத மன உறுதி கொண்டவர். தியாகம், தொண்டு, நேர்மை, அஞ்சாமை இவற்றிற்கு அவர் ஓர் எடுத்துக்காட்டு.

''எனக்கும், இந்த அரசுக்கும் தக்க சமயங்களில் அரிய யோசனைகளை அளித்து வந்தவர் பெரியவர் பக்தவத்சலம். அவர் நல்லவர். நாடு போற்றும் உத்தமர். கடமையே பெரிது என்று வாழ்ந்தவர். நாட்டுக்காக அயராது பாடுபட்டவர்.

''இளமைக் காலத்திலேயே தம்மைத் தேசத் தொண்டுக்கு அர்ப்பணித்துக் கொண்டவர். எழுபது ஆண்டுக் காலம் பொது வாழ்வில் ஈடுபட்டவர். அவரது மறைவு நமக்கு ஈடுகட்ட முடியாத ஓர் இழப்பு. அவரது மறைவால் பொது வாழ்வில் ஒரு வெற்றிடம் உருவாகிவிட்டது. அதை நிரப்புவது கடினம். அவரது குடும்பத்தினருக்கும், மற்றவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

முன்னாள் அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் பேசுகையில், ''காங்கிரஸ் கட்சியில் பக்தவத்சலம் அவர்கள் கட்டுப்பாடான தொண்டராகவும், தலைவராகவும் விளங்கியவர். எவ்வாறு ஒரு கட்சியில் தொண்டராகவும், தலைவராகவும் பதவி வகிக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர். சிறந்த நிர்வாகத் திறமையுடையவர். சிக்கலான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் நிபுணர். அவரது வாழ்க்கை இன்றைய தலைமுறைக்கும், வருங்காலத் தலைமுறைக்கும் எடுத்துக்காட்டு'' என்றார்.

முன்னாள் மத்திய அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகர் அவர்கள் பேசுகையில், ''அவர் நாட்டு முன்னேற்றத்துக்கும், ஒற்றுமைக்கும் பாடுபட்டவர். அவரது வாழ்க்கை வரலாறு நமக்கெல்லாம் முன்மாதிரியாக விளங்கக் கூடியது'' என்றார்.

மாண்புமிகு கேரள ஆளுநர் திரு பா. ராமச்சந்திரன் அவர்கள் பேசுகையில், ''பக்தவத்சலம் பண்பாட்டின் சிகரம். தமிழக நிர்வாகத்தில் அவரது அடிச்சுவடு இல்லாத துறையே இல்லை. தமிழகக் கோவில் பணிகளுக்குச் சிறப்பாகத் தொண்டாற்றியவர்'' என்றார்.

சமூகநல வாரியத் தலைவர் திருமதி தாரா செரியன் அவர்கள் பேசுகையில், பக்தவத்சலனாரின் சிறப்பியல்புகளை விளக்கிக் கூறினார்.

திரு கே. எஸ். ராமாநுஜம் அவர்கள் பேசுகையில், ''விவசாயத்துறைக்கு அவர் ஆற்றிய பணி சிறப்பானது'' என்றார்.

முன்னாள் அமைச்சர் திரு ஓ. வி. அளகேசன் அவர்கள் பேசுகையில், ''பக்தவத்சலம் அவர்கள் படாடோபம் இல்லாதவர். தமிழுக்கு அவர் ஆற்றிய தொண்டு பெரியது'' என்று பாராட்டிய அவர்—

''மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களை பொன்மனச் செம்மல் என்று பொதுமக்கள் அழைப்பது சாலச் சிறந்தது. தர்மபுரியில் முதல்வர் அவர்கள் சுற்றுப் பயணம்செய்து கொண்டிருந்தபோது, அவ்வப் போது பக்தவத்சலத்தின் உடல் நிலையைக் கேட்டறிந்தார். பக்தவத்சலம் அவர்கள் இறந்த போது முதல்வர் அவர்கள் பட்ட துன்பம் சொல்ல முடியாது. கண்ணீர் விட்டு அழுதார். பக்தவத்சலம் அவர்களுக்கு உரிய மரியாதை செலுத்தினார்'' என்றார்.

திரு எஸ். நாராயணசாமி அவர்கள், பக்தவத்சலம் அவர்களின் தொண்டுகளை விளக்கிப் பேசினார்.

கூட்டத்தில் பக்தவத்சலம் அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து, இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

—நமது செய்தியாளர்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
DIPR/Efficient

தமிழரசு
Licence No. TN/MS(C)/PP-23

